# இராமநாதம்

இதழ்-03




## கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

### உயர்தர மாணவர் ஒன்றியம்

### 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதம்

நாதம்-03

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

உயர்தர மாணவர் ஒன்றியம்

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதம்


தலைப்பு : இராமநாதம் இதழ் - 3

உரிமை : மலர்க்குழு

வெளியீடு : உயர்தர மாணவர் ஒன்றியம்

2019

கிளி/இராமநாதபுரம் ம.வி

அட்டைப்படம் : 2020 சித்திரபாட மாணவர்கள்

கணனித் தட்டச்சு : திருமதி.நிலாந்தி பிரசாந்தன்

இதழ் : 2019

அச்சுப்பதிப்பு : தனு பிறிண்டேர்ஸ் தருமபுரம்

பக்கம் : xxiii, 100




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

வளர்புகழ் ஓங்குகவே கலைகள் மல்கி
வான்புகழ் தாங்குகவே வளர்மதிபோல்

(வளர்)

காலையிலே எழு கதிரவன் ஒளிபோல்
ஞாலம் முழுதுமொரு ஞானசூரியன் என

(வளர்)

செந்நெல் நிறைகளனி வண்ணப்பலாவின் சோலை
தென்னை கமுகொடு மா கன்னல் வாழை செழிக்க
கன்னித்தமிழ் வளர கணிதம் கலை வளர
இராமநாதபுர மகாவித்தியாலயம் வளர

(வளர்)

இயல் இசை நாடகம் இன்தமிழுடனே
வயமுறு காவியம் ஓவியம் வளர
செயன்முறை விஞ்ஞானம் சிறந்த விவசாயம்
நயமுறு இலக்கியம் நன்மணம் கமழ

(வளர்)

வற்றா வளம் திகழ் இராமநாதபுரம்
வையகம் மீதினிலே நன்றே வாழியவே
கற்றார் மதித்திடும் மகாவித்தியாலயமே
காலமெல்லாம் பணி செய்தே வாழியவே

(வளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாக்கியம்

# கற்று உணர்ந்து ஒழுகு

## தூரநோக்கு – Vision Statement

தன்னை உணர்ந்து தன் வாழ்க்கை நெறியின் விழுமியங்களைப் பேணக்கூடிய மனித சமுதாயத்தை அமைப்பதற்கான தற்துணிவை உண்டாக்குதல்

## நோக்கக்கூற்று – Mission Statement

மாணவர்கள் ஆத்மார்த்த ரீதியில் முன்னேறித் தமது வாழ்க்கைப்பாதையைத் தாமே தேர்ந்தெடுத்துச் சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழக்கூடிய வினைத்திறன் மிக்க ஆளுமையை ஏற்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| அதிபர் (காப்பாளர்) | : M.C.L.மனுவல் |
| பிரதி அதிபர் | : திரு.தி.திலீபன் |
| உதவி அதிபர் | : திருமதி.ஸ்ரீ.இளங்குமரன் |
| மன்றப் பொறுப்பாசிரியர் | : திருமதி.ஜீ.விவேகானந்தராசா |
| பகுதித் தலைவர் | : திருமதி.ச.மகேந்திரன் |
| ஆசிரியர்கள் | : திருமதி.சி.ஜெயராஜிதன் |
| | : திரு.இ.நிஷாந்தன் |
| தலைவர் | : செல்வன்.ச.நிறுசன் |
| செயலாளர் | : செல்வி.அ.விஜயலூசியா |
| பொருளாளர் | : செல்வன்.க.டனுசியன் |
| உபதலைவர் | : செல்வன். மு.சதுர்சன் |
| உபசெயலாளர் | : செல்வி.கௌ.றக்ஷனா |
| மலராசிரியர் | : செல்வி.கி.நிலோஜினி |
| பிரதிநிதிகள் | : செல்வி.யோ.அபிராமி |
| | செல்வி.ம.விபுசனா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதம் மலர்க்குழு
## 2019

### ஆலோசனைக்குழு

| | |
|---|---|
| திரு.M.C.L.மனுவல் | (காப்பாளர்) |
| திரு.தி.திலீபன் | (பிரதி அதிபர்) |
| திருமதி.ஸ்ரீ.இளங்குமரன் | (உதவி அதிபர்) |
| திருமதி.ச.மகேந்திரன் | (பகுதித்தலைவர்) |
| திருமதி.ஜீ.விவேகானந்தராசா | (மன்றப் பொறுப்பாசிரியர்) |
| திருமதி.சி.ஜெயராஜிதன் | (மலர்ப் பொறுப்பாசிரியர்) |
| திருமதி.பெ.பூலோகராசா | (உறுப்பினர்) |
| திருமதி.ஆ.மோகனகுமார் | (உறுப்பினர்) |
| திரு.வே.யோகப்பிரகாஷ் | (உறுப்பினர்) |
| அருட்சகோதரி.பி.சந்திரலேனா | (உறுப்பினர்) |
| செல்வி.யூ.வேஜின்மேரி | (உறுப்பினர்) |
| திருமதி.கௌ.தவேஸ்வரன் | (உறுப்பினர்) |
| திருமதி.ச.கலையமுதன் | (உறுப்பினர்) |
| செல்வி.கோ.கிருஷ்ணபிரியா | (உறுப்பினர்) |
| திருமதி.பி.கஸ்தூரி | (உறுப்பினர்) |
| திரு.கு.குணதீபன் | (உறுப்பினர்) |
| திரு.இ.நிஷாந்தன் | (உறுப்பினர்) |

### மாணவர் குழு

| | |
|---|---|
| செல்வன்.ச.நிறுசன் | (தலைவர்) |
| செல்வி.அ.விஜயலூசியா | (செயலாளர்) |
| செல்வன். .டனுசியன் | (பொருளாளர்) |
| செல்வி. .நிலோஜினி | (மலராசிரியர்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி



கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் 2019ம் ஆண்டிற்கான இராமநாதம் என்னும் மலரினை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மலரில் வெளிவருகின்ற சிறந்த ஆக்கங்கள் மூலம் மாணவர் மட்டுமன்றி சமுதாயமும் பயன்பெற்று உயர்வடைய வேண்டும். உயர்வு என்பது கல்வியில் மட்டுமன்றி பொதுஅறிவு, உடல் ஆரோக்கியத்திற்கான விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றிலும் வளர வேண்டும். இவை யாவற்றுக்கும் மேலாக பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றில் யாவரும் மேலோங்கி சிறந்த சமுதாயமாக உருவாக வேண்டும். எதிர்கால சமுதாயம் அமைதி, சமாதானம் , பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றில் மிளிர வேண்டுமாயின் அதற்கான வழிகாட்டடல் அவசியமாகின்றது. இதற்கமைய இராமநாதம் மலரில் ஆக்கங்களை முதன்மைப்படுத்தி முன்மாதிரியாகச் சிறந்து விளங்க வேண்டும் என வாழ்த்தி ஆசிகூறி அமைகின்றேன்.

நன்றி

**சிவஸ்ரீ பா.சாந்தினிகேசக் குருக்கள்**
**பிரதமகுரு**
**சபரி ஐயப்பன் ஆலயம்**
**வட்டக்கச்சி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலய உயர்தர மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கூட்டு முயற்சியின் தொடர்ச்சியாக வெளிவரும் "இராமநாதம்" இதழ் - 3 இற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். அதிலும் நான் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளராக பொறுப்பேற்றுக் கொண்ட பின் முதலாவதாக வெளிவரும் மாணவரின் படைப்பிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்வடைகின்றேன்.

மாணவர்களை "புத்தகப்பூச்சிகளாகவே" வெளியீடு செய்வது கல்விச் சமூகத்தின் நோக்கமல்ல. மாறாக அவர்களை பல்துறை சார்ந்த ஆளுமையுடன் சமூகத்தின் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து தமது வாழ்வை வெற்றிகரமான முறையில் ஒழுங்கமைக்கக் கூடியவர்களாக்குவதே ஆகும்.

அந்த வகையில் எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் ஆர்வம் இல்லாமல் இருக்கும் இன்றைய தலைமுறையின் நடுவே கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் இருந்து மாணவர் படைப்பாக இத்தகையதொரு இதழ் வெளிவருவது பாராட்டுதற்குரியது.

மாணவர்களின் பல்துறை சார்ந்த ஆக்கங்களைத் தாங்கி இவ்விதழ் வெளிவர ஊக்குவித்த அதிபர், வழிகாட்டிய ஆசிரியர்கள், ஒத்துழைத்த மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் அனைவரையும் பாராட்டி "இராமநாதம்" தொடர் பிரசுரமாக பிரசவிக்க என் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கி.கமலராஜன்**
**வலயக் கல்விப்பணிப்பாளர்**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்தில் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்து வரும் கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியம் "இராமநாதம்" சஞ்சிகையின் மூன்றாவது இதழை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தகவல் ஊடகங்களோடு பின்னிப் பிணைந்துள்ள தற்கால இளஞ்சமுதாயத்தினர் ஒரு பேனா தொட்டு எழுவதற்கு சோம்பியிருக்கும் இவ்வேளையில் இம்மாணவர்கள் பல்வேறு ஆக்கப்படைப்புக்களை உருவாக்கியிருக்கும் திறன் போற்றுதற்குரியதும் பாராட்டுதற்குரியதுமாகும்.

மொழியறிவு, சிறந்த சிந்தனையாற்றல், படைப்பாற்றல், கூட்டுப்பொறுப்பு, தலைமைத்துவம், அழகியலுணர்வு முதலிய பல பண்புகள் இந்நூல் உருவாக்கம், வெளியீடுகளில் மாணவர்களிடையே வெளிக்கொணரப்படுகின்றன.

மாணவர்களைச் செம்மையுற வழிப்படுத்தும் அதிபர் அவர்களையும் மேலும் பொறுப்பாசிரியர், மலர்குழுவினர், உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இவ்வேளையில் மனமகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றேன்.

காலத்தால் அழியாத கலைப்படைப்பாக "இராமநாதம்" அமைந்து நாதம் எழுப்ப வேண்டும் என்று இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**க.அபிராமி**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)**
**வலயக்கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி வலயத்திலே கரைச்சி கல்விக் கோட்டத்தில் எழுவான் கரையில் விறுநடைபோடும் இராமநாதம் மகா வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் "இராமநாதம் - 03" இதழ் வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எழுத்துத் துறையில் சுகம் விசாரித்து ஒரு கடிதத்தை தானும் எழுதுகின்ற மரபு குறைவடைந்து வருகின்ற இக்காலத்தில் எழுத்துருவில் மாணவர்கள், கல்வியலாளர்களின் ஆக்கங்களை தன்னுள் கொண்டு இராமநாதம் புகழ் உலகம் பூராகவும் ஓங்கச் செய்யவும் இந்த உயர்தர மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடு வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம் கடந்த யுத்த காலத்தில் பல்வேறு சுமைகளை சுமந்ததுடன் பல்வேறு சாதனைகளையும் படைத்து மாணவர்களும், நலன் விரும்பிகளும் சேர்ந்து பாடசாலையின் சாதனைகளை வெளிக்கொணர்ந்திருந்தார்கள். குடியேற்றத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பிரதேசம் அகலக்கால் ஊன்றி வளர்ந்து கிளைகள் பரப்பியுள்ளது.

நகரின் தொலைவில் இப் பாடசாலை காணப்பட்ட போதும் கிளிநொச்சி அன்னையின் இரணைமடு வாவியால் எங்கும் பசுமை நிறைந்த இப்பிரதேசத்தின் இக் கல்விக்கூடம் ஒரு கல்லூரியாக விரைவில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்று வாழ்த்துவதுடன் இப்புத்தகத்தில் இடம்பெறும் தகவல்கள் நீண்ட காலத்திற்கு பொருத்தமானதாகவும் பல்வேறு உறவுகளை வளர்க்கும் எண்ணத்தோடு முன்கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**சுப்பிரமணியம் தர்மரத்தினம்**
**கோட்டக்கல்வி அதிகாரி**
**கோட்டக்கல்வி அலுவலகம்**
**கரைச்சி, கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



இராமநாதபுரம் வாழ் மக்களின் நல்வாழ்வின் இதயமாய் விளங்கும் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் இவ் வருட வெளியீடாக மலரும் "இராமநாதம் இதழ் - *03*" மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற பெருமகிழ்வடைகின்றேன்.

பல்துறை ஆற்றல் மிக்க எம் மாணவரின் சிறகடிக்கும் சிந்தனைத் தேடல்களின் சிதறல்களை சிறந்த படைப்பாற்றல்களைக் கொண்ட மலராக மிளிர்வது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

எதிர் காலத்தில் இம் மாணவர்கள் அனைவரும் உயர்ந்த வாழ்வியற் தகைமைமிக்க செயல் வீரர்களாகத் திகழ என் நல்லாசிகள் என்றும். பாடசாலை முதல்வர் M.C.L மனுவல் அவர்களுக்கும், உயர்தர மாணவர் மன்ற பொறுப்பாசிரியர், ஆர்வத்துடன் உழைத்த உயர்தரமன்ற மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்து கொள்வதோடு வருடா வருடம் தொடர்ந்து இம் மலர் வெளிவந்து "இராமநாதம்" சிரஞ்சீவியாய் மலர வாழ்த்துகின்றேன்.

**திரு.சு.நடராசா**
**முன்னாள் அதிபர் [ஓய்வுநிலை]**
**கிளி /இராமநாதபுரம் ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



இராமநாதம் இதழ் 3 நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சற்றுத்தாமதமாக வெளிவந்தாலும் தரமான ஆக்கங்களுடன் வெளியிடப்படுகின்றமை பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வெளியீடாக 2020 கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களது அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளால் இதழின் பொறுப்பாசிரியர், மன்றப் போசகர் மற்றும் ஆசிரியர்களது கூட்டிணைந்த பங்கேற்புடன் வெளியிடப்படுவதும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்கள் பண்புசார் அளவீடுகளுக்குட்பட்டுத் தெரிவு செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றமையும் வரவேற்புக்குரியதாகிறது. அத்துடன் எனது சேவைக்காலத்தில் இதழ் -2, இதழ் -3 ஆகியன வெளியிடப்பட்டுள்ளமை பேரானந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்காலங்களிலும் இவ்விதழ் தொடர்ந்தும் வெளியிடப்படுவதற்கு அனைத்து தரப்பினரும் தமது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு இறைவனின் ஆசிகளை வேண்டுவதுடன் இதழ் -3 வெளியிடப்படுவதற்கான நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.கிறிஸ்ரி லெனாட் மனுவல்**
**அதிபர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



கிளி/இராமநாதபுரம் ம.வி உயர்தரமாணவர்களால் தொடர்ந்து வெளியிடும் இதழான "இராமநாதம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இச் சஞ்சிகை நீண்ட காலத்திற்கு பிறகு ஆரம்பிக்கப்பட்டாலும் தற்பொழுது வருடந்தோறும் வெளிவருவது மகிழ்ச்சியளிக்கின்றது. இச் சஞ்சிகை மூலம் மாணவர்களது ஆக்கத்திறன் வெளிக்கொணரப்படுவதுடன் சஞ்சிகையாக்கி வடிவமைத்து வெளியிடும் வரையான செயன்முறைகளை மாணவர்கள் செயற்பாடுகளின் மூலம் அறிவதுடன் வருங்காலங்களில் தமது சுய ஆக்கத்தை வெளிக்கொணரும் விதம் பற்றிய பயிற்சிகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

மாணவர்கள் மத்தியில் எழுதும் பழக்கம்,வாசிக்கும் பழக்கம் குறைவடைந்து வரும் இக்காலங்களில் மாணவர்கள் சஞ்சிகைகளுக்கான ஆக்கங்களை வடிவமைப்பதற்காக பல்வேறு நூல்களை வாசிப்பதுடன் பெற்ற விடயங்களை தொகுக்குந் திறன்களையும் பெற்றுக் கொள்கின்றனர். எனவே வருங்காலங்களில் பொழுதுபோக்கை பயனுள்ள வகையில் கழிப்பதற்கும், பல்கலைக்கழகங்களில் வருடாந்த கற்றல் செயற்பாடுகளுக்கும் இச் செயன்முறைகள் உந்துசக்தியாக அமைகின்றன.

இச்செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொள்ளும் பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**திரு.தி.திலீபன்**
**பிரதிஅதிபர்**
**கிளி/இராமநாதபுரம்.ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதித் தலைவரின் வாழ்த்துச்செய்தி



வையத்துள் வாழ்வாங்கு வாழ வழியமைத்த கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தால் 2017 ஆம் ஆண்டு காலூன்றி ஒலித்த இராமநாதபுரம் சஞ்சிகை தொடர்ந்து மூன்றாவது இராமநாதமாக வெளிவருவதையிட்டு மிகவும் உவகையடைகிறேன்.

பண்பும், பணிவும், வாய்மையும், உயர்கல்வியும், பதவியும் மிக்க மாணவர்கள் இப்பள்ளியிலிருந்துஉருவாக்கம் பெறுகின்றார்கள். எக்காலத்தும் தனக்குரிய அடையாளம் குன்றாமல் தலை நிமிர்ந்து நிற்பது இதன்சிறப்பு.

உயர்தரமாணவப் பருவமானது எதிர்காலவாழ்வைச் செப்பனிடுவதற்காக பெறுமதி மிக்க பலமுதலீடுகளைச் செய்யும் பருவமாகும். இன்றைய 21ம் நுற்றாண்டு காலகட்டம் தகவல் யுகத்தில் வீறுநடை போடுகிறது. இதனால் வாசிப்புப் பழக்கமின்மை அதனால் ஏற்பட்ட எழுத்தாற்றல் திறன்விருத்தி குறைவு, இலக்கிய படைப்புக்களில் ஆர்வமின்மை போன்ற காரணிகளால் மாணவர் மொழியறிவு குன்றிக் காணப்படுகின்றனர். இவ்வேளையில் இந்நூல் உருவாக்கம் பெற்றமை அக்குறைபாட்டை பெரிதும் நிவர்த்தி செய்ய உதவும் என நம்புகின்றேன்.

இச்சஞ்சிகை உருவாக்குவதற்கு ஆக்கங்கள் தந்து உதவிய மாணவர்கள், ஆசிரியர்களிற்கு நன்றிகள். எல்லா வகையிலும் ஊக்கமளித்த அதிபர், பிரதி அதிபர், மன்றப்பொறுப்பாசிரியர், இதழ் ஆசிரியர், உயர்தர ஆசிரியர்கள், அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்வதோடு இச்சஞ்சிகை வருடந்தோறும் வெளிவந்து ஒலிக்க வேண்டும் என இறைவன் அருளை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி.ச.மகேந்திரன்**

**பகுதித் தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி



உயர் சிந்தனைகளோடு வளர்ந்து வரும் எமது வித்தியால உயர்தர மாணவர் மன்றமானது இவ்வாண்டும் தனது செயற்பாடுகளில் ஒன்றான "இராமநாதம்" சஞ்சிகையின் 3 ஆவது இதழை வெளியிடுவதையிட்டு இம் மன்றத்தின் பொறுப்பாசிரியர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்

உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் மேற்படிப்புக் கற்கைகள், தொழில் உலகு என்பவற்றுக்குச் செல்ல வேண்டியவர்கள். எனவே தான் அவர்கள் பாடசாலைகளில் பல்வேறு செயற்பாடுகள் மூலம் ஆற்றுப்படுத்தபடுகின்றனர். அந்த வகையில் தனியாள், குழுச் செயற்றிட்டங்கள், கலந்துரையாடல்கள், கலை இலக்கியச் சஞ்சிகை வெளியீடுகள் என்பன அமைகின்றன. மிகத்துரிதமாக வளர்ந்து விட்ட இந்தத் தகவல் யுகத்தில், மாணவர்களிடையே வாசிப்பது, மொழிவளத்தை ஏற்படுத்துவது, சுய ஆக்கங்களைப் படைப்பது போன்ற மொழித்திறன் செயற்பாடுகள் அருகிக் கொண்டு வருகின்றன. எனினும் இத்தகைய சஞ்சிகை வெளியீடுகள் அவற்றினைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்கின்றன. எனவேதான் 'இராமநாதம்' எமது மாணவருக்காக ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த அரிய முயற்சிக்குத் தோள் கொடுத்த அதிபர், ஆசிரியர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், விளம்பரதாரர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறக் கடமைப்பட்டவள்.

திக்கெட்டும் புகழோடு இராமநாதம் சிறந்தோங்க வாழ்த்துகின்றேன். வளர்க! வளர்க!!

**திருமதி.ஜீ.விவேகானந்தராசா**
**பொறுப்பாசிரியர்**
**உயர்தர மாணவர் மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் உள்ளத்திலிருந்து



எம் பலம், சக்தி, பலவீனம் என்பவற்றோடு இணைந்து எம்மை சிறந்த ஆற்றலும், ஆளுமையும் உடையவர்களாக வளர்த்தெடுக்கும் எம் பள்ளி கிளி/இராமநாதபுரம் மகா வித்தியால உயர்தர மாணவர் ஒன்றியமானது இராமநாதம் எனும் சிறப்பு நூலை மூன்றாவது தடவையாக வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றது. அவ் வகையில் உயர்தர மாணவர் ஒன்றிய தலைவராகிய நான் இராமநாதம் இதழ் 3 இற்கான வாழ்த்து உரையினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கலை, வர்த்தகப் பிரிவு மாணவர்களின் ஆற்றல் ஆளுமை திறமைகளின் வெளிப்பாட்டின் தொகுப்பாக, மொட்டுக்கள் தன் இதழ்களை விரிப்பது போல இந்த இராமநாதம் எனும் மலரும் நறுமணத்துடன் மலர்கின்றது. எதிர்வரும் காலங்களிலும் இம் மலரானது தன் தூய்மையான சொற்பதம் உடைய இதழ்களை விரித்து அறிவுக்கு விருந்தளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் இந் நூல் வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டிய பள்ளி முதல்வர் மற்றும் பிரதி முதல்வர், உயர்தர மாணவர் ஒன்றிய பொறுப்பாசிரியர், மற்றும் ஏனைய ஆசிரிய குழாத்தினர் அனைவரையும் நன்றியுடன் வணங்கி நிற்பதுடன் இந் நூலுக்கு அணி சேர்க்கின்றவகையில் வாழத்துரைகளை வழங்கிய பெரியோர்களுக்கும், ஆக்கங்களை தந்துதவிய ஆசிரியர்கள், மாணவர்கள்அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ச.நிறுசன்**
**தலைவர்**
**உயர்தர மாணவர் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து



கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலம் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான இராமநாதம் (இதழ் 03) என்னும் இதழ் மலர்வதையிட்டு இதழாசிரியர் என்ற வகையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

எமது மாணவச் சகோதரர்கள் சிந்தனை தேடல்கள் மூலம் அறிந்த பல்வேறு வகையான விடயங்களை ஆக்கங்களாக வடித்தெடுத்துள்ளனர். இம் முயற்சி சிறந்த படைப்பாற்றல் அனுபவங்களை வளர்த்து கொள்ளும் களமாக அமைந்து விடுகின்றது. மாணவர் ஆக்கங்கள் மிகவும் பெறுமதிமிக்கவையாகவும் அவர்களின் நிகழ்கால பதிவாகவும் எதிர்காலத்தை எதிர்வு கூறும் வாழ்வின் திசைகாட்டியாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை. இவ்விதழ் காத்திரமான சிறந்த ஆக்கங்களுடன் வெளிவருவதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

இம்மலர் வெளியீட்டுக்கு ஊக்கமளித்த பாடசாலை முதல்வர் அவர்களிற்கும், வழிகாட்டிய பொறுப்பாசிரியருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய உயர்தர மாணவர்களுக்கும் மற்றும் ஆதரவு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு எதிர்வரும் காலங்களில் இராமநாதம் மலரானது புதுப்பொலிவு பெற்று காத்திரம் மிக்க படைப்புக்களை தாங்கி எல்லோர் மனங்களின் இதயநாதமாக ஒலிக்க, வளர்ந்து சிறக்க வாழ்த்துகின்றேன்.

**கி.நிலோஜினி**

**இதழாசிரியர்**

**உயர்தர மாணவர் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே


| | |
|---|---|
| 01. பள்ளித்தாய் | 01 |
| 02. விசேட கல்வித் தேவைகளின் வகைப்படுத்தல்கள் | 02 - 03 |
| 03. ஆசிரியர் | 04 |
| 04. தொல்காப்பியம் | 05 |
| 05. அம்மா | 06 |
| 06. மாண்புமிகு மாணவர் | 07 |
| 07. வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்வதன் அவசியம் | 08-10 |
| 08. காலம் பதில் சொல்லும் | 11-12 |
| 09. பெற்றோர் | 13-14 |
| 10. நட்புக்காக | 15 |
| 11. நட்பு | 16 |
| 12. நேற்றுப் பார்த்த நிலா | 17 |
| 13. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் | 18-19 |
| 14. உறங்குவோமா அறிஞனாய் | 20 |
| 15. இயற்கையின் வியத்தகு அழகு | 21 - 23 |
| 16. தொலைபேசி | 24 - 25 |
| 17. மனித வாழ்வில் அறிவியலும் அழகியலும் | 26 - 27 |
| 18. முகப்புத்தகம் | 28 |
| 19. கனவு காணுங்கள் | 29 |
| 20. மெய்ப்பொருள் காண்பதறிவு | 30 - 31 |
| 21. விஞ்ஞானத்தின் விந்தை | 32 - 34 |
| 22. இலக்கியத்தின் இலட்சியம் | 35 - 36 |
| 23. இலங்கையின் அபிவிருத்தியில் ஜனநாயகத்தின் தாக்கம் | 37 - 38 |
| 24. பாடசாலைகளில் ஆலோசனையும் வழிகாட்டல் சேவை | 39 - 41 |
| 25. சுருக்கக் குறியீடுகள் | 42 - 43 |
| 26. ஆசிரியப் பணியின் சவால்கள் | 44 - 46 |
| 27. சேமிப்பு | 47 - 48 |
| 28. குடும்பம் சார்பாக பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விசார் மதிப்பீடுகள் | 49 - 52 |
| 29. வாசிப்பு மனிதனை பூரணமாக்கும் | 53 - 54 |
| 30. இலங்கை பற்றிய பொது விடயங்கள் | 55 - 56 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 31. வியக்க வைக்கும் தகவல்கள் | 57 |
| 32. இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் | 58 |
| 33. தமிழ்மொழியின் சிறப்புக்கள் | 59 - 60 |
| 34. இலங்கை ஆற்றுப்படை | 61 - 63 |
| 35. வழிகாட்டி | 64 - 65 |
| 36. சைவம் காத்த நாயன்மார் | 66 - 68 |
| 37. The Important of Library | 69 - 70 |
| 38. கருகிய காவோலை | 71 - 72 |
| 39. குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவங்கள் | 73 - 75 |
| 40. யூதப் பண்பாட்டு மரபுகளில் யூத விழாக்கள் | 76 - 78 |
| 41. அமேசன் மழைக்காடு | 79 - 80 |
| 42. What we Must Teach Our Children | 81 |
| 43. கிறிஸ்தவத்தில் காணப்படும் எபிரேயர் கிரேக்க பதம் | 82 |
| 44. Important of Friends in our Life | 83 - 84 |
| 45. க.பொ.த உயர்தர பெறுபேறுகள் | 85 - 86 |
| 46. நன்றியுரை | 87 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் சாதனைகள்



சுரேஸ்குமார் லாவண்யா

தமிழ்மொழித் தினப் போட்டி - 2018

தேசிய மட்டம், பிரிவு - 1

பேச்சு - 1ம் இடம்



விவேகானந்தன் சுபஸ்ரீகா

சைவபரிபாலன சபை - மாகாணம்

திருக்குறள் மனனப் போட்டி - 2019

கீழ்ப்பிரிவு - மூன்றாம் இடம்



சுதாகரன் கஜோலினி

மனைப்பொருளியல் கண்காட்சி - 2018

மாகாண மட்டம்

10ம் இடம்



விக்கினேஸ்வரன் கஸ்மிதா

சைவபரிபாலன சபை - 2018

தமிழ்மொழி பரீட்சை

1ம் இடம்



இராவணேசன் கூத்து (வடமோடி)

மாகாணம் - 3ம் இடம் - குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பள்ளித்தாய்

பத்து மாதம் எம்மைச் சுமந்து பெற்ற
எம் தாயும் வாழ்க!
பதின்மூன்று வருடங்கள் எம்மைச் சுமந்த
எம் பள்ளித் தாயும் வாழ்க!

எம்தாயிடம் கிடைத்தது தனிப் பாசம்
எம் பள்ளித்தாயிடம் கிடைத்தது பரந்த பாசம்
எம் தாயிடம் கிடைத்தது தனி அன்பு
எம் பள்ளி தாயிடம் கிடைத்தது பரந்த அன்பு

பள்ளி சென்று திரும்பும் வரை பாதை
வழியே காத்திருப்பாள் - எம் அன்னை
பள்ளி வந்து எமக்கு அறிவை
ஊட்ட எதிர்பார்த்திருப்பாள் - எம் பள்ளி அன்னை

நாம் பட்டம் பல பெற எதிர்பார்புடன்
காத்திருப்பாள் - எம் அன்னை
எம்மைப் பட்டதாரியாக்க பாடுபட்டு
உழைத்திடுவாள் - எம் பள்ளி அன்னை

அம்மா என்பவரும் ஆசிரியர் என்பவர்களும்
எம்மைப் போன்ற பிள்ளைச் செல்வங்களுக்கு - தாய் தான்
பகலிரவு பாராது கண்ணின் இமை போல்
எம்மைப் பாதுகாத்து படிக்க வைத்த எம் பள்ளி அன்னையே.

இன்னும் ஒரு ஜென்மம் பள்ளியில் பயில
அல்லது பணியாற்ற இறைவனிடம்
வரம் வேண்டி இறைஞ்சி அழுகின்றோம்
அன்னையே!!! வாழ்க வாழ்க!! வளர்க வளர்க!!!

S.**துளசி**
**கலைப்பிரிவு 2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விசேட கல்வித் தேவைகளின் வகைப்படுத்தல்கள்
# Overview of Special Education Categories

விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளை பெயர்சூட்டி அழைப்பதற்காகவன்றி கல்விச் செயற்பாடுகளில் விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளை இனங்கண்டு பரிகாரம் வழங்குவதற்காகவே விசேட தேவையுள்ள பிள்ளைகள் பல்வேறு வகையாக வகைப்படுத்துகின்றனர். உலக சுகாதார நிறுவனம் (WHO) விசேட கல்வித் தேவையுள்ள பிள்ளைகளை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது. இவ்வகைப்படுத்தல் நாடுகளுக்கு நாடு வேறுபட்டிருந்தாலும் பாரிய வேறுபாடு கிடையாது.

1. மீத்திறனும் நிபுணத்துவமும் (gifted and Talented)

கல்விச் செயற்பாடுகளிலும் ஏனைய செயற்பாடுகளிலும் மிகவும் அபாரத்திறமையை காட்டுவார்கள்

2. கற்றல் இயலாமைகள் (Learning Disability)

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, கணிதம் போன்றவற்றில் இடர்படுபவர்கள்

| | |
|---|---|
| வாசிப்பதில் குழப்பம் | (Dyslexia) |
| மொழி சொல் சார்ந்த குழப்பம் | (Aphasia) |
| எழுத்துக் குழப்பம் | (Dysgraphia) |
| கணக்கிடலில் குழப்பம் | (Dyscalculia) |

3. மொழி அல்லது மொழிதல் குறைபாடு (Speech or Language Impairment)

மொழி, தொடர்பாடல் என்பவற்றில் பிரச்சினை காணப்படுதல்

4. மெதுவாக உளவளர்ச்சி அடைதல் (Mental Retardation)

இவர்கள் நுண்ணறிவுச் செயற்பாடுகளிலும் பொருத்தமான நடத்தைப் பிரயோகங்களிலும் குறைபாடுடையவர்கள்

5. உக்கிர மனவெழுச்சி இடையூறு (Serious Emotional Disturbance)

6. பல்லின இயலாமைகள் (Multiple Disabilities)

ஒன்றிற்கு மேற்பட்ட குறைபாடுடையவர்கள்

7. உடலியல் குறைபாடுகள் (Physical Impairment)

| | |
|---|---|
| பெருமூளை பாதிப்புடையோர் | (Cerebral Palsy) |
| போலியோ | (Polio) |
| சிறுதலை | (Microcephalouuus) |
| நீர்த்தலை | (Hyudrocephalus) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. எலும்பு தசைநார் குறைபாடுகளும் வேறு சுகாதார குறைபாடுகளும் (Orthopedic and other health impairment)

கைகள், முழங்கைகள், கால்கள், பாதம் மற்றும் தீவிரமான ஏனைய உடல் உறுப்புக்களில் பாதிப்படைந்தவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருபவர்கள்.

9. கேட்டல் குறைபாடு (Hearing Impairment)

பூரண கேட்டல் குறைபாடுடையோர் (Deat)

கேட்டல் குறைபாடுடையோர்

10. பார்வைக் குறைபாடு (Visual Impaiurment)

பூரண பார்வைக் குறைபாடுடையோர் (Blind)

அர்ப்ப பார்வையுடையோர் (Low Vision)

11. குருடு, செவிடு (Deaf and Blind)

முற்றாக பார்வை கேட்டல் திறன்களை இழந்தவர்கள்

12. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு (Brain Injury)

விபத்து போன்ற காரணங்களினாலோ அல்லது உட்காரணங்களினாலோ ஏற்படும் பாதிப்பு.

13 தற்சிந்தனை (Autism)

தனக்குள்ளேயே ஓர் உலகத்தை உருவாக்கி அதில் ஆழ்ந்து விடுவது

**செல்வி.க.மதுமதி**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**

## ஆச்சரியங்கள்

*இறப்பு என்பது நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் வந்தே தீரும் என்பதை அறிந்த மனிதர்கள். அதைப்பற்றி கவலைப்படாமல் தன்கடமைகளைச் செய்யாமல் சிரித்துக் கொண்டிருப்பது ஆச்சரியம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர்

ஆசு இல்லா உள்ளம் படைத்தவர் ஆசிரியரே
அகிலத்திற்கு கல்வி ஒளியூட்டும் அன்பானவர்
மாணவர் குற்றத்தை நீக்கிடுவார்
தெய்வத்தின் வடிவம் கொண்டவர் அவரே.

அகரமுதல எழுத்தை எல்லாம் - அன்புடனே
எமக்கு அளித்து அறிவுச்சுடர் எற்றிடுவீர்
பிள்ளை போலவே எமை எண்ணி
பள்ளிப்பாடம் போதிப்பீர் கனிவுடனே..

மெழுகினைப் போல் தினம் தினம் உருகியே
மாணவர் நமக்கு நல் ஒளி தந்திடுவீர்
கண்டிப்பும் சில போது தண்டிப்பும்
எம்மிடத்து காட்டிடுவீர்...

அன்பினை அள்ளித்தரும் அட்சய பாத்திரமே!
நட்பின் வழிகூறி நமக்காக உதவிடுவீர் நீரே!
காலம் உள்ளவரை உம்பணி தொடரட்டும்
என்றும் உம் பாதம் தொழுவோம் நாமே...

**வ.சஜீபன்**
**வணிகப்பிரிவு [2020]**

## ஆச்சரியங்கள்

*ஒரு நாளில் இவ்வுலகம் அழிந்து போகும் என்பதை*
*அறிந்த மனிதன் உலகத்தின்*
*மீது மோகம் கொண்டிருப்பது ஆச்சரியம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொல்காப்பியம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் எழுந்த முழுமையானதும் முழுவதுமான இலக்கண நூலாக தொல்காப்பியம் கருதப்படுகின்றது. இது தொல்காப்பியரால் தோற்றுவிக்கப்பட்டது. தமிழில் எழுந்த ஐந்து இலக்கணம் கூறும் நூலாக இது விளங்குகிறது. அதாவது எழுத்திலக்கணம், சொல்லிணக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பனவே அவையாகும்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று அதிகாரங்களிலே எழுத்ததிகாரத்தில் எழுத்துக்களின் வகை, எழுத்துக்களின் பிறப்பு முதலானவற்றையும் சொல்லதிகாரத்திலே சொற்களின் வகைகளையும் பொருளதிகாரத்திலே அகத்திணை, புறத்திணை முதலானவற்றையும் எடுத்துக் கூறுகின்றது.

தொல்காப்பியம் என்பது மொழிக்கு மட்டும் இலக்கணம் கூறிய நூல் அல்ல தமிழர்களின் வாழ்வியலையும், பண்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும் எடுத்து கூறுகின்ற நூலாக இது விளங்குகின்றது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் தமிழில் பல இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. ஆயினும் அந்த நூல்கள் எல்லாம் தொல்காப்பியத்தினை அடிப்படையாகக் கொண்டே எழுந்தவையாகும். அதாவது சோழர் காலத்தில் எழுந்த நன்னூல், வீர சோழியம், நேமிநாதம் முதலான நூல்களின் தோற்றத்திற்கு தொல்காப்பியமே அடிப்படையாக அமைந்தது எனலாம்.

பிற்காலத்திலே தொல்காப்பியத்திற்கு பலரும் உரை எழுதினர். தொல்காப்பியத்தின் அதிகாரங்களை உரைநடையில் எழுதுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சேனாவரையர், இளம்பூரணர், பேராசிரியர் முதலியோர் தொல்காப்பியத்திற்கு உரைகள் எழுதினர். அந்த வகையில் சேனாவரையர் என்பவரால் சேனாவரையமும், இளம்பூரணர் என்பவரால் இளம்பூரணமும், பேராசிரியரால் பேராசிரியம் முதலான உரைநூல்களின் தோற்றத்திற்கும் தொல்காப்பியம் அடிப்படையாக அமைந்தது. இவற்றின் ஊடாக நோக்கும் போது தொல்காப்பியத்தின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

கி.நிலோஜினி
கலைப்பிரிவு (2020)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா

உயிர் எழுத்தில் "அ" எடுத்து
மெய் எழுத்தில் "ம்" எடுத்து
உயிர்மெய் எழுத்தில் "மா" எடுத்து
அழகு தமிழில் கோர்த்தெடுத்த முத்து அம்மா

குழந்தையின் அழுகையின் அர்த்தம் புரிந்த
அகராதிப் புத்தகம் "அம்மா"
கற்காமலும் பிழை இல்லாமலும் குழந்தை பேச
கற்றுக்கொண்ட முதல் வார்த்தை "அம்மா"

முகத்தைக் காணும் முன்பே நேசிக்கத்
தெரிந்தவள் "அம்மா"
இவ்வாழ்க்கையில் தியாகம் செய்பவர் தந்தை
வாழ்க்கையையே தியாகம் செய்தவள் தான் "அம்மா"

**சி.சிறிதரன்**
**கலைப்பிரிவு (2020)**

## ஆச்சரியங்கள்

*எந்த ஒரு செயலும் இறைவன் விதித்தபடியே நடக்கும் என்பதை அறிந்த மனிதன், கைநழுவிச் சென்றவற்றை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருப்பது ஆச்சரியம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புமிகு மாணவர்

கிழக்கில் கதிரவன் கிளர்ந்தெழ
வேகம் உடலில் குடிகொள்ள
கதிரவன் ஒளி நம்மில் படமுன்
துயில் எழ வாரீர் தோழர்களே!

எண்ணங்கள் பல குடி கொள்ளும்
இப் பதின்ம வயதை எதிர்கொள்ள
எதிர்நீச்சல் போட்டெழுந்திடுவோம்
மாண்புமிகு மாணவராய்

பத்துத் திங்கள் தாய் வயிற்றில் பத்திரமாய்
பதினெண் வருடங்கள் பள்ளியில் சித்திரமாய்
புத்தம் புதிய புதினம் காண நித்தமுமாய்
பக்குவமாய் உயர்வோம் நாளைய சித்திரமாய்

கல்விச் செல்வம் பெருகிடவே
தடையின்றி தடம் பதிக்க வாரீர்
கல்வியதை இரு கண்ணாய் கொண்டு
தடைகள் பல தகர்த்தெறிந்திடுவீர்

வெள்ளாடைபோல் பால் மனமும்
புதியன அறிய முடிந்திடும் பண்புடன்
ஊழ்வினை உலகில் சூழ்ச்சிக்கு அஞ்சாது
மாண்புமிகு மாணவராய் உ யர்ந்திடுவோம் இவ்வுலகில்

**யோ.தர்ஷிகா**
**கலைப்பிரிவு (2019)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்வதன் அவசியம்

வாசிப்பு என்பது ஒரு பிள்ளை கருவறையிலிருக்கும் போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். அதாவது கருவுற்ற தாய் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் பிள்ளைகளுடைய மூளை விருத்தி சிறப்பாக நடைபெறும். என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். வாசிப்பு என்பது சிறுபராயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதனால் பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார் பின்பற்றக்கூடிய சில வழிமுறைகளை ஆராய்வோம். வாசிப்பு பல முக்கியமான விடயங்களைக் கொண்ட செயன்முறையாகும். அதாவது சிந்தித்தல், ஆராய்தல், காரணம் கண்டறிதல், கற்பனைத்திறன் என்பவற்றுடன் நியாயம் கண்டறிதல் என்பவற்றை உள்ளடக்கும். வாசிப்பின் நோக்கம் சந்தோசம், மகிழ்ச்சி, பொழுதுபோக்கு, ஓய்விற்காக வாசித்தல், தகவல் தேவைக்காக வாசித்தல், அறிவிற்காக வாசித்தல் என அமைகின்றன.

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்பது தமிழ் மூதாட்டி ஒளவையின் அருள் மொழியாகும். நாம் நாள்தோறும் வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதனால் நம் அறிவு வளரும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது பழமொழியாகும். மாணவப்பருவத்தில் இருக்கும் போதே கல்வியில் மிகுதியான ஈடுபாடும் அக்கறையும் முயற்சியும் கொண்டு கற்றால் எதிர்காலத்தில் சிறந்த நிலையை அடையலாம். குழந்தைகளின் திறமைகளை உணர்ந்து அவர்கள் படிப்பதற்கான சிறந்த சூழலையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை அறிய வேண்டும்.

பள்ளியில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் நூல்நிலையத்திற்குச் சென்று படிக்கலாம். வாசிப்பதால் கல்வியறிவு வளர்கின்றது. கல்வியால் நமக்கு நல்ல வேலை கிடைக்கிறது. நாம் வேலை செய்வதனால் ஊதியம் கிடைக்கிறது. நம்முடைய எதிர்காலம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். இதற்கான மூலகாரணமே நாம் சிறுவயதிலிருந்து பின்பற்றிக் கொள்ளும் வாசிப்புப்பழக்கமே ஆகும். மூன்று அல்லது நான்கு வயதுப்பிள்ளைகளுக்கு வாசிக்கத்தெரியாது. இவர்களுக்கு பெற்றோர்களே எழுத்துக்களை அறிமுகப்படுத்தி சொல்லிக்கொடுக்க வேண்டும் மாணவர்கள் ஒரு பாடப்பகுதியை வாசிக்கும் போது அவர்கள் சொல் உச்சரிப்பில் பிழையிருந்தால் ஆசிரியர்கள் அப் பிழையை திருத்த வேண்டும். அவ் வழிகளைச் சிறுவயது முதல் பிள்ளைகளிடம் பின்பற்ற வைத்தால் நாளடைவில் குழந்தைகளுக்கு வாசிப்பில் ஆர்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுவதை நாம் காணலாம். வாசிப்புப் பழக்கத்தை சிறுவயது முதல் நாம் நம்முடைய இளைய தலைமுறைக்கு பழக்கப்படுத்த வேண்டும்.

சிறு தென்னங்கன்று ஒன்று இருக்கும் போது நாம் அதற்கு தினமும் நீர் ஊற்றி வந்தால் அத்தென்னங்கன்று தென்னை மரமாகிய பின் நாம் ஊற்றிய நீரை இளநீராக கொடுத்து விடுகிறது. அதே போல தான் ஒரு பிள்ளையை சிறுவயதிலேயே வாசிக்கப்பழக்கினால் நாளடைவில் ஒரு சிறந்த செய்தியறிவிப்பாளராக, வானொலி அறிவிப்பாளராக, சிறந்த சொற்பொழிவாளராக உருவெடுக்க வாய்ப்பு அதிகம் உள்ளது. வாசிப்பு என்பது மகிழ்ச்சிகரமானதும், சுவாரஸ்யமானதுமான ஒரு செயற்பாடாகும். அது பிள்ளைகள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான ஓர் ஆயுதம் என்று கூறலாம். "வாசிப்பு என்பது அலுப்பூட்டும் அல்லது எரிச்சலூட்டும் விடயமல்ல என்றும் அதுவே எதிர்கால வெற்றிக்குரிய ஒரு திறவுகோல் என்றும் கூறப்படுகிறது. பிள்ளைகளுக்கு விளங்க வைப்பது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கடமை ஆகும்.

வாசிப்பு என்பது புத்தகம் அல்லது பத்திரிகை மூலம் தான் கட்டியெழுப்பப்பட வேண்டும். நாம் தகவல்களைப் பெற சிறந்த மிக முக்கியமான வழி வாசிப்பு ஆகும். வாசிப்பு என்பது பற்றி நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். பள்ளியில் தினமும் படிக்கின்றேன் என்றால் அது தவறாகும். இவற்றை படித்து விட்டால் மட்டும் நம் அறிவு வளராது. பாடம் சம்பந்தப்பட்ட வேறு தகவல்களைப் பெற நாம் வேறு பல நூல்களை வாசிக்க வேண்டியது அவசியமாகின்றது. ஒரு மொழியில் புலமைபெற அம்மொழியில் வெளிவந்த ஏனைய பல புத்தகங்களை வாசிக்க வேண்டும். இந்த நவீன உலகில் மனிதன் இயந்திரமாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ் இயந்திர வாழ்க்கை மீண்டும் மனமகிழ்வு பெற வாசிப்பு உதவுகின்றது என்பதை நாம் அறிய வேண்டும்.

இன்று வாசிப்புத்துறையானது நவீன தொடர்பாடல் சாதனங்களால் சற்று விரிவடைந்து செல்கின்றது. எந்தவொரு விடயத்தையும் வாசித்தறிந்தே உணர்ந்து கொள்ள முடிகிறது. தான் வாசிக்கும் சொல்லின் பொருளறிந்து அதன்படி ஒழுகுவதற்கும் வாசிப்பு துணைபுரிகிறது. பாடசாலைகளின் வாசிப்பு என்கிற திறனை மேம்படுத்துவதற்காக குறிப்பாக ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மாத்திரமன்றி இடைநிலை மாணவர்களுக்கும் பெரிய எழுத்துக்களுடன் கூடிய கதைப்புத்தகங்கள், கவிதை, கட்டுரை போன்ற நூல்களையும் வாசித்தறிந்து பொருள் உணர்கின்ற போது வாசிப்பு மேம்படுவதற்கு வழித்துணையாக அமைகின்றது. வாசித்தல் மாணவரிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு திறன்களை விருத்தி செய்ய உதவுகிறது. எந்தவொரு தொழில் புரிபவர்களுக்கும் தமக்கான பணியினை மேம்படுத்துவதற்கு புதிய புதிய தகவல்களை உள்வாங்குவதற்கும் மாற்றங்களை காண்பதற்கும் வாசிப்பு முக்கிய பங்காற்றுகிறது.

வாசிப்பானது மொழிவளத்தைப் பெருக்கும் அதே வேளையில் பொது அறிவையும் வாசிப்பதன் மூலம் வளர்த்துக்கொள்ள முடியும். பல துறைகளைச் சார்ந்த புத்தகங்களை வாசிப்பதால் அத்துறைகளைப் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் பொருளை உணர்ந்து சரியாகப் பயன்படுத்தவும் வாசிப்பு அவசியமாகின்றது. வாழ்க்கையிலிருந்து மீண்டு மனமகிழ்வு பெறவும் வாசிக்கும் பழக்கம் உதவுகிறது. சொந்தமாகக் கதை, கட்டுரை, கவிதை எழுத விரும்புகிறவர்கள் முதலில் அவை தொடர்பான பல நூல்களைப்படித்து அறிய வேண்டும். இதற்கும் வாசிப்புத்திறன் தான் முக்கியமாகும்.

இறுதியாக நாம் வாசிப்புத்திறனை வளர்த்துக்கொண்டால் நாம் எந்த ஒரு தடங்கலும் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழலாம். மேலும் நூலை நம்முடைய தோழனாக மாற்றியமைத்துக் கொள்ளலாம். வாசிப்புப்பழக்கம் நமது நல்ல பண்பாக அமைகிறது. வாசிப்புப் பழக்கத்தின் மூலம் அறிவை வளர்த்துக்கொள்ள நூல்கள் பெரும் பங்காற்றி வரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே நாம் சிறுவயதிலிருந்தே வாசிப்புப்பழக்கத்தை வளர்த்துக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும்.

எனவே வாசிப்பு நமக்கு எவ்வளவு அவசியமாகிறது என்பதை அறிய முடிகிறது. "தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்பதற்கேற்ப பல நூல்களை வாசித்து நம் அறிவைப் பெருக்கிக் கொள்வோம்

**சு.கஜோலினி**
**வர்த்தகப்பிரிவு [2021]**

## ஆச்சரியங்கள்

*மறுமை வாழ்க்கைக்கான தீர்வு இவ்வுலகிலேயே இருப்பதை நம்புகின்ற மனிதன் அதனைப்பற்றி அக்கறையின்றி வாழ்ந்து கொண்டிருப்பது ஆச்சரியம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பதில் சொல்லும்

மாலைநேரத் தென்றல் காற்று மெதுவாக காதோரம் முத்தமிட்டது பறவைகளின் கொஞ்சல் மொழிகளும் ஓயாமல் சலசலத்துக் கொண்டிருந்தன. ஏதோ இனம் புரியாத மகிழ்ச்சி மனதினோரம் அலைமோதிக் கொண்டிருக்க தேவாரங்களும் கந்தபுராணங்களும் நாவிலே புரண்டு கொண்டிருந்த சிவகாமி அந்த ஆலயத்தின் இன்னும் சில பகுதிகளை சுத்தம் செய்ய வேண்டி இருந்தது. வயது முதிர்ந்த காலத்திலே நீட்டி நிமிர்ந்து ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்திலே எதற்காக இந்த அர்ப்பணிப்புக்கள். கோயிலை சுத்தம் செய்து கொண்டிருந்த சிவகாமியின் மனத்திரையிலே பழைய ஞாபகங்கள் விம்பங்களாய்த் தெரிந்தன. இந்த அர்ப்பணிப்புக்களும் தேவாரங்களும் கந்தபுராணங்களும் இவை எல்லாமே சிவகாமியின் ஒரே மகன் கதிரேசனுக்காகத் தான்.

இன்று சிவகாமி சந்தோஷமாக இருப்பதற்காக அன்று எத்தனை துன்பங்களைக் கடந்திருப்பாள் எத்தனை வீடுகளுக்கு வேலைக்காகச் சென்றிருப்பாள் அவையெல்லாம் நினைத்துப் பார்த்தால் இப்போதும் அவள் உடல் விறைத்துப் போகும். அப்படியான துன்பங்கள் தான் ஒரு காலத்தில் அவளை திணற வைத்தது. அப்போது கதிரேசனுக்கு பத்து வயது இருக்கும் தாயின் துன்ப நிலையை உணர்ந்து அவன் சிறுவயதிலேயே கல்வியில் கோபுரமாக இருந்தான். கதிரேசன் தான் சிவகாமியின் ஒரே கனவு அவனுக்காகத்தான் அவள் எல்லாத் துன்பங்களையும் பொறுத்துக் கொண்டாள்.

சிவகாமியின் கணவர் ஒரு குடிகாரன் குடிப்பதையே தொழிலாகக் கொண்டவன். ஒரு நாள் கூட சிவகாமியிடம் ஆதரவாகப் பேசியதும் இல்லை. அனுசரணையுடன் நடந்து கொண்டதும் இல்லை. காலம் போகப் போக அவனது கொடுமைகளும் அதிகரித்துக் கொண்டு தான் இருந்தன. சிவகாமிக்கோ நிம்மதி என்ற வாயிலையே இறைவன் அவளது வாழ்வில் அடைத்து விட்டார். அவளது கணவன் ஒரு ரூபாய் கூட உழைத்துக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் சிவகாமி அன்றாடத் தேவைக்காக வைத்திருக்கும் வீட்டுப் பொருட்களையும் அதிகாரத் திமிரோடு எடுத்து விற்றுவிடுவான். இதைவிட சிவகாமியை அடிப்பதும் தகாத வார்த்தைகளால் பேசுவதும் வழக்கமாகவே ஆகிவிட்டது. சிவகாமியின் மனம் இதையெல்லாம் பார்த்துக் கல்லாகவே மாறிப்போனது.

எத்தனை துன்பங்களைக் கடந்தாலும் தனது மகனை ஒரு வைத்தியராக மாற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆணவமும் கர்வமும் அவளிடமிருந்து குறைந்ததாக இல்லை. சிவகாமி ஊரிலிருக்கும் வீடுகளுக்கு வேலைக்குச் சென்றுதான் அன்றாட சீவியத்தைப் பார்த்துக் கொண்டாள். கதிரேசன் மீது கொண்ட அன்பும் அவனை நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்திலும் உடல் சளைக்காமல் உழைத்தாள். இரவு வீட்டிற்கு வந்து கதிரேசனைப் பார்த்தால் தான் அவளது மனம் திருப்தி கொள்ளும். கதிரேசனுக்கு தன்னால் இயன்ற நல்ல உணவுகளைக் கொடுத்துவிட்டு தான் கிடைக்கும் உணவுகளையே உண்டாள்.

பாடுபட்டு உழைக்கும் பணத்தை தன்னுடைய கணவனிடமிருந்து பாதுகாப்பதே பெரும்பாடாக இருந்தது. இரவில் சில்லறைகளும் அவளோடு சேர்ந்து உறங்கிப் போகும். கதிரேசனுக்கு ஒரு வழியாக உயர்தரம் படிக்கும் வயதும் வந்து விட்டது. பாடசாலையில் அனைவரையும் விட சிறந்த பெறுபேறுகளைப் பெற்றான். தாயின் துன்பங்களை உணர்ந்த அவன் மேலும் சிவகாமியை துன்புறுத்த விரும்பவில்லை. மேற்படிப்புக்கு செல்லவும் அவனுக்கு திருப்தியில்லை. ஆனால் சிவகாமி அதற்கு சம்மதிக்கவில்லை. அவனை மேற்படிப்புக்கு அனுப்பி அவனை வைத்தியராக்குவதற்கு தன் உடலையே இயந்திரமாக்க எண்ணினாள்.

கதிரேசன் மேற்படிப்புக்காக வெளியூர் சென்றான். மகனைப் பார்க்க முடியாமல் சிவகாமி வருந்தினாள். கதிரேசன் பிறந்ததிலிருந்தே அவனுடைய வாழ்க்கைக்காக சிவகாமி கோயிலிலே தேவாரங்களையும் கந்தபுராணங்களையும் இசைத்துக் கொண்டே இருப்பாள். கதிரேசனைப் பற்றி எல்லோரிடமும் பெருமையாகவே பேசிக் கொள்வாள். காலங்கள் ஓடி மறைந்தன ஆனால் அவை தந்த காயங்களின் வடுக்களும் நினைவுகள் இன்னும் மனதினோரம் கவிபாடிய வண்ணமே இருந்தன.

கோயில் மணியோசை காதில் ஒலிக்க சிவகாமி பழைய நினைவுகளை விட்டு தன் சுயநினைவுக்கு வந்தாள். இன்னும் சில நேரத்தில் கதிரேசன் ஊருக்கு வரவிருக்கின்றான். ஒரு சூரியனைப் பெற்றவள் என்ற கர்வம் அவளிடமிருந்து இன்னும் குறையவும் இல்லை. தேவாரங்களும் கந்தபுராணங்களும் இன்னும் அவனுக்காக இசைக்கப்பட்டுக் கொண்டே இருந்தன. அவளது துன்பங்களுக்கெல்லாம் காலம் பதில் சொல்லியது வைத்தியர் கதிரேசனாக.

**கௌ.றக்ஷனா**
**கலைப்பிரிவு ( 2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோர்

"அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை" "தாயிற் சிறந்த கோவிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" ஆம் இதையெல்லாம் பெரியவர்கள் சொல்லிச் சென்ற வேதவாக்கியங்கள். இது எவ்வளவு பெரிய உண்மை ஏனென்றால் இதை அனுபவித்து உணர்பவனைத்தான் கடவுள் என்கின்றோம் அப்புசாமி என்கின்றோம் இந்த அப்புசாமிக் கடவுள்கள் எல்லாம் எம்மிடம் நேரில் வரமுடியாத நிலையில் தங்களுக்குப் பதிலாக எங்களோடு இருந்து எங்களைக் கவனிப்பதற்காக ஆண்டவனின் தூதுவர்களாக ஆண்டவனால் அனுப்பி வைக்கப்பட்ட தெய்வங்கள் தான் பெற்றோர்கள்.

என் பக்கத்தில் இருந்து என்னைக் கவனிக்கும் தெய்வங்கள் தான் என் பெற்றோர்கள் என் பெற்றோரைக் காட்டிலும் இந்த உலகத்தில் வேறு தெய்வங்கள் எனக்கில்லை. என்னைப் பெற்றெடுப்பதற்காக என்னைப் பெற்றவள் எவ்வளவு துன்பங்களை அனுபவித்திருப்பாள். அது எனக்குத் தெரியாது விட்டாலும் ஏன் புரியாவிட்டாலும் கூட என்னை வளர்த்தெடுப்பதற்காக என் பெற்றோர்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் ஓரளவுக்கேனும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இன்று நான் எந்தவித கவலையும் இன்றி துள்ளியோடும் புள்ளிமானைப் போல் துள்ளிக்குதித்து விளையாடுவதும் உண்பதும் உறங்குவதும் தான் என் வாழ்க்கை என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும் போது என் குறும்புத்தனத்தைக் கூர்ந்து நோக்கி அவர்கள் குதூகலிப்பது போல் தோன்றினாலும் என் ஒவ்வொரு அசைவிலும் அவர்கள் கூர்ந்து நோக்கித் தேடுவதும் என் எதிர்கால வாழ்வு வளம் பெற வேண்டும் என்றும் அல்லும் பகலும் விரதம் இருப்பவர்கள் என் பெற்றோர்கள்.

காலையில் வேலைக்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் என் அப்பா வேலைப்பளு காரணமாக வீடு திரும்பும் போது களைப்படைந்து வருவது போல் தோன்றினாலும் அப்பா என்று அழைத்துக் கொண்டு நான் ஓடும்போது வாடிப்போயிருந்த அந்தமுகம் சூரியனைக் கண்ட தாமரையைப் போல் எப்படி மலரும் தெரியுமா? அப்படியே என்னை வாரியெடுத்து முத்தமிட்டு அணைக்கும் போது அதில் இருக்குதே ஒரு சுகம் அது அனுபவித்துப் பார்த்தால் தான் புரியுமையா அந்த ஒரு நிமிடபாசப் போராட்டம் இருக்குதே அதற்கு இணையாக இந்த உலகத்தில் எதுவுமே இல்லையப்பா எனக்கு எத்தனை மணிக்குப் பசிக்கும் எத்தனை மணிக்கு நீர் தேவைப்படும் எத்தனை மணிக்கு தேநீர் குடிப்பேன் என்று எனக்குத் தெரியாது ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பெற்றவர்களுக்கு அது தெரியும்.

நான் தத்தித் தவண்டு எடுத்தடிவைக்க எழுந்த போது என் கையில் பிடித்து நடை பழக்கி தாமும் மகிழ்ந்து என்னையும் மகிழ்வித்து அதே கையைப் பிடித்து எழுதப்பழக்கி அந்த எழுத்திலே என் எதிர்காலத்தைத் தேடுபவர்கள் என் அப்பாவும் அம்மாவும் தான். என் முதல் தெய்வங்கள் என் பெற்றோர் தான் என் தலைசிறந்த ஆசான்கள் என் அப்பாவும் அம்மாவும் தான். என் ஆத்மாத்தமான அருமையான நண்பர்கள் மொத்தத்தில் என் தேவையறிந்து சேவை செய்வதிலும் பக்குவம் கொண்ட பணியாளர்களும் அவர்கள் தான். மொத்தத்தில் ஈடு இணையில்லாமல் நேரில் நின்று வாழ்த்தும் தெய்வங்கள் தான் என் பெற்றோர்கள்.

**செ.சசிகரன்**
**கலைப்பிரிவு (2019)**

**ஆச்சரியங்கள்**

*நரக நெருப்பின் வேதனை பற்றி அறிந்த மனிதன்*
*அதுபற்றி சிந்திக்காமல்*
*தொடர்ந்தும் பாவம், தவறு செய்வது ஆச்சரியம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்புக்காக

கண் இல்லாமல் காதல் வரலாம்
கற்பனை இல்லாமல் கவிதை வரலாம், ஆனால்
உண்மையான அன்பு இல்லாமல் நட்பு வராது
தொலைந்த உறவு கிடைக்கும் போது
இதயம் சிறகடிக்கும்
கண்ணீர்கூட பனித்துளி போல
கவிதை எழுதி வைக்கும்
இன்னொரு பிறவி வாழ்க்கை கேட்க
மனசு மனுக் கொடுக்கும்
நட்பே உறவாய் மாறும் போது
தேவைகள் இருப்பதில்லை
சாமிக்கும் பூமிக்குமுள்ள உறவும் நட்புத்தான்
நட்பை முந்தும் இன்னொரு உறவு எப்போதும் வருவதில்லை
கவிதையிடம் சொன்னேன் என் நட்பிற்கு உன்னை
பரிசாக தருகின்றேன் என்று
சிரிப்போடு சொன்னது கவிதை யாராக இருந்தாலும்
ஒரு வரி கவிக்கு மயங்குவார்கள் ஆனால்
கவிதைக்கு என்றுமே "நட்பு" மயங்காது என்று
எதிர்பார்க்க தெரியாதது நட்பு
என் தோழிகள் அனைவர்க்கும் சமர்ப்பணம்.

**சிவபாலன் சங்கவி**
**கலைப்பிரிவு [2021]**

## ஆச்சரியங்களி

*நரகம், சொர்க்கத்தைப்பற்றி அறிந்த மனிதன்,*
*உலக செல்வங்களை சேர்த்து வைப்பதில்*
*தமது முழு வாழ்வையும் கழிப்பது ஆச்சரியம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு

காற்றோடு கைசேர்த்து கலகலப்பாய் உலா வந்த
கல்லூரி வளாகம்

பட்டப்பெயர் சூட்டி பட்டாசாய் சிரித்த
பகுடிவதை நேரங்கள்

கிண்டலடித்த மாணவனை அதிபரிடம் மாட்டி வைத்த
கிளி கொஞ்சும் குறும்புகள்

இளமைத் தென்றலின் இதயத்துடிப்பான
சுற்றுலா பயணங்கள்

ஆசிரியரை கண்டு ஆரவாரமாய் புரட்டிய
புத்தகப் பக்கங்கள்

நண்பியின் உணவை நடிப்பாய் திருடிய
இடைவேளைப் பொழுதுகள்

நினைக்க நினைக்க இனிக்கும் நெஞ்சில் நிதம் வீற்றிருக்கும்
நட்பின் ஞாபகச் சின்னங்கள்

**பிரியங்கா ரவிச்சந்திரன்**
**கலைப்பிரிவு [2021]**

## அமுதமொழிகள்

*மலரில் உள்ள தேனை மட்டுமே தேனி அருந்தும் சாதாரண ஈயோ பேதமில்லாமல் எதிலும் அமரும் சுபாவம் கொண்டது அது போலவே நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களும் நல்ல செயல்கள் மட்டமே செய்வார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றுப் பார்த்த நிலா

வானில் உலாவரும் அழகே - நிலா
கவிஞனின் உள்ளத்தில் எழும்
உணர்வின் மறைபொருளாம் - நிலா
கவிக் காவியத்தின் எடுபொருளாம் - நிலா
என் கவியின் தலைப்பொருளாம் - நிலா
மங்கை வதனமதில் எழில் பொங்கும்
ஒற்றைக் கோலம் போல!
பறக்கும் நீல வானில் - வெண்மேகம்
எனும் பஞ்சணைக் கம்பளத்தின்
தோன்றிய நாக இரத்தினமே! நிலா
நீ வானத்தில் நீங்காத பாற்குடமாய்
வான் வெளியில் நீ நிறைந்தாய்
கதிரவன் கண் உறங்க ஆழ் கடலில்
காரிருளைப் போக்க வந்திடுவாய் தீப ஒளியாய்!
வளர் பிறை தன்னில் வளர்ந்து - வரும்
உன் உருவம்
தேய் பிறை தன்னில் தேய்ந்து விடும்
பொன் உருவம்
நிலை பெறா விண்ணுருவம்! நிலைபெறும்
நாளெதுவோ?
பௌர்ணமி நாளினிலே முழுமதியாய் நிலைபெற்றாய்
வெண்ணிலவே! ஆனால்...
ஏனோ இன்று உன்னை காணவில்லை
அமாவாசை தினம் என்று விடுமுறை - பெற்று
ஓய்வு கொண்டாயோ? நீ?
காரிருள் சதி வலையில் சிக்குண்டு கைதாகி பின்
சிறை பட்டுப் போனாயோ?
ஆகாயத்தில் அனர்த்தம் ஏதும் நிகழ்ந்து
வதைபட்டுப் போனாயோ?
உன்னைக் கெஞ்சிக் கேட்கின்றேன்
நித்தமும் உன் பொன் முகம் காண
மண் முகத்தினர் ஆவலுடன் காத்திருக்கின்றனர்....
வந்து விடு வட்ட நிலவே
தந்துவிடு பரவசத்தை....

ச.சஜிதா
கலைப்பிரிவு [2020]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது முதுமொழியாகும். பல்லாண்டு காலாகாலமாக வாழ்ந்து வந்த நம் முன்னோர்கள் பயன்படுத்தி வரும் பழமொழி இதுவாகும். இப்பழமொழியின் கருத்து மிக ஆழமானது. அதாவது அகம் என்றால் உள்ளத்தை குறிப்பிடுகிறது. உள்ளத்தில் உண்டாகும் அழகு அவர் அவர் முகத்தில் தெரியும் என்று மனிதகுலத்திற்கே பாடம் கற்றுத் தருகிறது இப்பழமொழி.

முக அழகு என்பது ஒருவருடைய முக அமைப்பைப் பொறுத்த விடயம் மட்டும் அல்ல. மூக்கு அழகாகவும், கண்கள் கவர்ச்சியுள்ளவையாகவும், உதடுகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நிற்க, நெற்றி பிறை நிலாத் தோற்றம் பூண்டு கொள்ள இருந்து விட்டால் மட்டும் அந்த முகம் அழகாகி விடும் என்று கூறுவதற்கில்லை.

இயற்கை எமது முகத்தை உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கண்ணாடியாக ஆக்கி வைத்திருக்கிறது. உள்ளத்தில் நிழலாடுகின்ற உணர்வுகளை கிளர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்டுவது முகமாகும். சிறு குழந்தைகளின் முகங்களை நாம் பார்ப்போமாயின் அவர்களின் முக அழகை காணக்கூடியதாக இருக்கும்.

ஏன் என்றால் குழந்தைகளின் முக அழகு தோற்றப் பொலிவும் அவ்வளவு அழகை தரும். அவர்களது முகப்பொலிவு ஏன் அப்படிக் காணப்படுகிறது என்றால் குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற அவர்களது உள அழகை அவர்களது முகம் நன்கு காட்டிக் கொடுக்கும். இத் தோற்றப்பாட்டை குழந்தைத்தனம் என்று கூறுவர்.

மாசுமறுவற்ற அவர்களது உள அழகே அவர்களது குறும்புத்தனமே முகங்களில் பரதிபலித்துக் காட்டுகின்றது. ஆனால் வயது முதிர்ந்தோரின் மிக அழகினை குழந்தைகளின் முக அழகுடன் ஒப்பிட்டுக் கூறிவிட முடியாது. ஏன் என்றால் குழந்தைகள் வஞ்சகம் அற்றவர்கள் அவர்களது உள்ளம் பாலைப் போன்று வெள்ளை உள்ளம் கொண்டது.

நாற்பது வயதுக்குப் பிறகு ஒருவன் தன்னுடைய முகம் எப்படி இருக்கிறது என்பதற்கு அவனே பொறுப்பாளி ஆகிறான் என்கிறார் ஆபிரகாம்லிங்கன். ஒருவனது உள்ளத்து உணர்வுகளை அவனுடைய முகமே காட்டிவிடும் என்ற உண்மையை நாம் மறந்து விடக் கூடாது. உணர்வுகளை மதிக்கப் பழக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் தெளிவாக உணர்ச்சி பூர்வமாக எண்கள் தூய்மையாக இருக்கும் போது முகத்துக்கு ஒரு தனி அழகை கொடுத்து விடும். தேஜஸ் பொருந்திய தெளிவு ஏற்பட்டு விடுகிறது. உலகம் போற்றும் மகான்களின் முகங்களை பாருங்கள் அவை சாமுந்திரிகா இலட்சணப்படி அழகான முகத்தோற்றம் கொண்டலர்கள் என்று சொல்வதற்கு இல்லை.

ஆனபோதும் அவர்களது முகப்பொலிவு அனைவரையும் அவர்கள் பக்கம் ஈர்த்து விடுகிறது. அவர்களது அகத்தின் அழகு முகத்தில் பிரதிபலிப்பதே இதற்கு காரமாய் அமைந்து விடுகின்றது. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் - நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்ற திருக்குறளிற்கு இணங்க தன்னையடுத்த பொருளினையுடைய நிறத்தை தானே கொண்டு காட்டும் பளிங்கு போல ஒருவன் நெஞ்சத்து எழும் உணர்வுகளை அவன் முகம் தானே கொண்டு காட்டிவிடும் என்கிறார் வள்ளுவர். இதைவிட மேலும் ஒரு குறளின் ஊடாக "முகத்தின் முதுக் குறைந்தது உண்டோ உவப்பினும் காயினும் தான்முந் துறும்" என்பதற்கமைய நாம் ஒருவனை உவந்தாலும் கோபித்தாலும் முகம் முற்பட்டு அவற்றைக் காட்டும். ஆதலால் முகம் போல் அறிவுமிக்கது பிறிது எதுவும் இல்லை. என்பது இதன் கருத்தாக புலப்படுகின்றது.

எனவே அகத்தின் அழகை முகமே பிரதிபலிக்கும் என்ற உண்மையினை இதன் மூலம் நாம் உணர்ந்து கொள்ள முடியும். ஒருவர் ஒப்பனையாலும் சீவி சிங்காரித்து மேலும் அழகு சேர்த்துக் காணப்பட்டாலும் அழகாகி விட முடியாது. உள்ளத்தின் தூய்மையால் மட்டுமே மற்றவர்கள் நேசிக்கின்ற விரும்புகின்ற அழகைப் பெற்றுக் கொள்ள முடியும். இதைத்தான் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற முதுமொழி நமக்கு நன்றாக உணர்த்துகின்றது.

**தேவரூபன் தேனிலா**
**கலைப்பிரிவு [2021]**

## அமுதமொழிகள்

*நம் அனைவராலும் உயர்ந்த விஷயங்களை செய்ய முடியாது*

*ஆனால் உயர்ந்த அன்பைக் கொண்ட*

*சிறிய விஷயங்களை செய்ய முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறங்குவோமா அறிஞனாய்

அறிஞர்கள் பலர் தூங்குகிறார்கள்
அமைதி காத்திடுங்கள்
எங்கே?
எதற்குள்?

நூலகத்தில்..
எழுத்துருவில்..
ஏய். ஏய்..
நீங்கள் உறங்கிடாதீர்கள்
தேடுங்கள்..
ஆராயுங்கள்..
பருகுங்கள்..

அறிவு வளர்த்திடும்
நல்ல சத்து ரோனிக்தான்
நீங்களும் உறங்கலாம்
இந் நூலகத்தில்
ஆகலாம் அறிஞனாய்

உறக்கம் கலைவதில்லை
உறங்குபவர் இறப்பதில்லை
இவ்விடயத்தில் தான்
என்றும் வாழ்வார்
எல்லோர் இதயத்திலும்
நினைவிலும் அறிஞனாய்

**திருமதி.யுகராணி பகீரதன்**
**ஆசிரியை**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையின் வியத்தகு அழகு

இறைவன் படைத்த அற்புதமான ஓர் சிறப்பியலே இயற்கை. ஆம் நாம் வாழும் இந்த பூமியானது பஞ்ச பூதங்களின் சேர்க்கைகளால் ஆனவை. நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் பஞ்ச பூதங்கள் துணை கொண்டு மனிதன் பூமியில் தன் வாழ்க்கையினை முன்னெடுக்கின்றான். சொல்லப் போனால் இந்தப் பஞ்ச பூதங்கள் மனித வாழ்க்கையில் நீக்க முடியாத அளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இயற்கையின்றி மனிதன் தன் வாழ்க்கையினை வாழ முடியாது என்பதே உண்மை. இத்தகு பஞ்ச பூதங்கள் இயற்கையில் இழையோடும் தன்மைகள் இரசிக்கத்தக்கவை. அவை எம் மனதிற்கு வியப்பினை அளிப்பவை. மேலும் உள்ளத்தை உவகை கொள்ளச் செய்பவை. அதனாலே மனிதன் இயற்கையோடு ஒன்றித்து காலம் காலமாக வாழ்ந்து வருகின்றான். ஆனால் இன்று இயற்கையின் அளவில்லாத எழிலை, அதன் மேன்மையை, அதன் சிறப்பினை நாம் கண்ணுறுவதும் இதனை இரசித்து, மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்ற நிலை மிக மிகக் குறைவே.

**காலைக் காட்சியில் சங்கமிப்போம்**

நாள் ஒன்றின் தொடக்கம் சூரிய உதயத்துடன் ஆரம்பிக்கின்றது. கிழக்கு வானம் வெளுத்து கதிரவன் தன் திருமுகத்தை மெல்ல மெல்ல வெளிக்காட்டி தன் ஆயிரம் திருக்கரங்களால் உலகிற்கு ஒளி கொடுக்க கிழக்கு வானிலே தோன்றிடுவான். பகலவனைக் கண்ட இருளானது ஓடிச் சென்று மறைந்திடும். பனித் துளிகளும் உடன் மறைந்திடும். குளத்தினில் காணப்படும் தாமரைகள் மலர்ந்திடும். இவ்வாறு சூரியன் வருகை கண்டு நிகழும் நிகழ்வுகளை கண்ணுறலாம். இது மட்டுமன்றி காலைப் பொழுது நம் மனதிற்கு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும் பொழுதாகும். ஆலய மணியோசை எங்கும் ஒலித்திடும், ஆலயங்களில் சுப்ரபாதம் இனிமை பரப்பிடும், வண்ண வண்ண மலர்கள் மணம் வீசி எங்கும் மலர்ந்திடும், மேலும் காலைப் பொழுதில் பறவைகள் கூட்டம் கூட்டமாக இரைதேடச் சென்றிடும். பசுக்களின் கூட்டம் புல் மேய்ந்திட வயல் வெளிகள் நோக்கி செல்லும். அழகிய காட்சியும் காலைப் பொழுதில் அரங்கேறும். மேலும் பள்ளி செல்லும் மாணவர் எனும் வெள்ளைப் புறாக்கள், தொழிலுக்கு ஆரவாரத்துடன் செல்லும் தொழிலாளர்கள், வீதியில் ஆர்ப்பரித்துச் செல்லும் வாகனங்கள், என காலைப் பொழுது இயற்கையின் அழியாத அழகினை காட்டி நிற்கின்ற அற்புதமான பொழுதாகும். அவசரமான இக் காலத்திலே காலைக் காட்சியை, அதன் வசீகரத்தை நாம் கண்டு இரசிப்பதும், மகிழ்ச்சியுறுவதும் மிக மிக குறைவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனதை வருடிடும் மாலைப் பொழுது

ஒரு நாளில் காலைப் பொழுது எப்படியோ அந்த நாளின் மாலைப் பொழுதும் அப்படியே. இயற்கையில் அழகிய காட்சிகள் மாலைப் பொழுதிலும் அரங்கேறிடும். குறிப்பாக நாம் இயற்கையோடு ஒன்றித்து மகிழ்ந்திருப்பதற்கு ஏற்ற பொழுது இந்த மாலைப் பொழுதேயாகும். உலகிற்கு ஒளி கொடுத்திட சுற்றித் திரிந்த சூரியன் தன் களைப்பினைப் போக்கிட மேற்குத் திசையில் மறைந்து கொள்வான். காலையில் இரைதேடச் சென்ற பறவைகள் வரிசையாக கூட்டமாக சிறகடித்துப் பறந்து தம் இருப்பிடம் செல்லும் காட்சியும், காற்றினில் அசைந்தாடும் நெல் வயல் கதிர்களும், ஆரவாரத்தோடு அலை வீசிடும் கடலும், ஒய்யாரமாக வளர்ந்து காற்றினில் தலை அசைத்திடும் மரங்களும் என மாலைப் பொழுது இயற்கையின் அழகினை எம் மனதில் பதியச் செய்கின்றது. அத்தோடு எம் மனதையும் கொள்ளை கொள்கின்றது.

### நிலாவின் ஒளியில் கூடி மகிழ்வோம்

இயற்கையில் அழகிய சிருங்காரம் அரங்கேறும் பொழுது இரவுப் பொழுது என்றால் மிகையில்லை. இரவில் வானம் பார்ப்பதற்கு அழகாய் காட்சியளிக்கும். இரவு வானில் வெளிப்படுபவை அனைத்தும் நாம் இரசித்து மகிழ்வதற்கு துணை புரிகின்றன. பரந்து விரிந்த வானிலே கோலத்தில் இடப்பட்ட புள்ளிகள் போல நட்சத்திரங்கள் நிறைந்திருக்க அவற்றின் நடுவே சந்திரன் தோன்றும் அழகிய காட்சி இரவு வானில் அழகினை ஊட்டுகின்றது. பொதுவாக நிலா என்றால் எல்லோர்க்கும் கொள்ளைப் பிரியம். அதன் வெண்மையும், அதன் குளிர்ச்சியைத் தரும் ஒளிக்கதிர்களும் எல்லோரும் அதன் மீது விருப்பம் கொள்ளக் காரணமாகின்றது. பால் வார்க்கும் நிலவாக மண்ணுலகம் முழுவதும் ஒளி வெள்ளத்தில் காட்சியளிக்க துணையாகின்றது. நிலாவின் ஒளியில் நாம் எதையெல்லாம் செய்கின்றோம் என ஒரு பட்டியலே இடலாம். குழந்தைகளுக்கு அன்னையர் உணவு ஊட்டுகின்ற நிலாவை காட்டுகின்றனர். அதையே நிலாச்சோறு என்கின்றோம். மேலும், அக் குழந்தைகள் தம்முடன் உரிமை கொண்டு நிலாவினை விளையாட அழைக்கின்றனர். குழந்தைகளும், பெண்களும் ஆனந்தமாக ஆடிப் பாடுகின்றனர். பலரும் ஒன்றாக கூடியிருந்து நிலாவெளியில் உரையாடி மகிழ்கின்றோம். பாட்டிமார் தம் பேரக்குழந்தைகளுக்கு இந்த நிலவொளியில் கதைகள் பல சொல்லி தூங்கச் செய்கின்றனர். இவ்வளவு ஏன் காதலர்க்கு மகிழ்ச்சி ஊட்டிடும் பொழுதும் இந்த நிலவொளி நிறைந்த இரவுப் பொழுதே என்றால் மிகையில்லை. ஆனால் இன்றைய காலத்தில் நாம் நிலாக்காட்சியை இரசித்திட நாம் நேரம் ஒதுக்குவது இல்லையே. அதன் வியத்தகு சிருங்கார அழகினை எம் குழந்தைகளுக்கு காட்டி மகிழ்வது இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மழையில் நனைந்து குதூகலிப்போம்**

இயற்கை நமக்கு அளித்த ஓர் அற்புதமான எழில் மழை. இந்த பாரானது செழிப்புடன் இருப்பதற்கு மழை மிகமிக அவசியமானதாகும். ஆனால் அந்த மழை பொழிவது நம் சிந்தையில் ஆச்சரியமான செயலாகும். வானில் உள்ள மேகங்கள் கடலில் ஆவியாகி மேலே செல்லும் நீரினை உள் இழுத்து கருமேகங்களாகி பின் நிலத்தினில் மழையை பொழிகின்றது. இதனால் மண் குளிர்மை கொள்கின்றது. செடி, கொடிகள் தழைத்து வளர்கின்றன. இந்த நன்மைகளைக் கொடுக்கும் மழையானது எம் மனதில் மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஓர் இயற்கையின் தன்மையாகும். இடி முழங்கி, மின்னல் மின்னி பொழிகின்ற மழையானது கொள்ளை அழகு. அவ்வாறு மழையில் நனைவதென்றால் பலருக்கு கொள்ளைப் பிரியம். சிலர் மழையில் விளையாடுவதும், மழையில் நனைந்தபடி ஐஸ்கிறீம் உண்ணுவதும் என இவற்றை கண்ணுறலாம். ஆனால் என்னவோ மழை வராத போது எப்போ மழை வரும் என ஏங்கும் நாம் மழை வந்ததும் இது எப்போ நிற்குமோ? என எண்ணுவதே அதிகம். ஆக இயற்கை எமக்களித்த மழையினையும் இரசித்திடுவோம். அதை திட்டிடாது போற்றிடுவோம்.

**இயற்கையின் அழகினை கண்டு மகிழ்வோம்.**

ஆகவே, இயற்கை எமக்கு கொடுத்துள்ள கொடைகள் ஏராளம். அதில் ஒரு சிலவற்றின் எழிலை நாம் சுவைத்தோம். இவை தவிர மலையில் இருந்து வழிந்தோடும் நீர் அருவிகள், தாமரை மற்றும் அல்லி மலர்களால் சூழ்ந்திருக்கும் குளங்கள், வானில் தோன்றிடும் வானவில், வாய்க்கால் வழியே ஓடிச்செல்லும் நீர் என இயற்கையின் எழில் மிகுந்த காட்சிகளை கண்டு கொள்ளலாம். இன்றைய நவீன காலத்தில் நாம் வேகமாக சென்று கொண்டிருக்கின்றோம். அதனால் இயற்கையின் அழகினையோ, அதன் சிறப்பினையோ நாம் கண்டு கொள்வதில்லை. வெறுமனே தொலைக்காட்சியும், தொலைபேசியும் மட்டுமே வாழ்வில் மகிழ்ச்சியைத் தருவன என எண்ணி வாழ்கின்றோம். ஆனால் நம் மனதிற்கு ஆனந்தம் அளித்து, மனதை திருப்தி கொள்ளச் செய்து மனதை உற்சாகப்படுத்தி எம்மை வாழ வழிசமைப்பது இயற்கையில் அழிவில்லாத எழில்களே என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆக, இனியாவது சிறிது நேரம் ஒதுக்கி இயற்கையினை இரசிப்போம்.

**இரா.நிஷாந்தன்**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொ(ல்)லை பேசி
## சிறுகதை

உனக்கு எத்தின தரம் சொன்னாலும் புத்தில ஏறாது" என்று சினந்தபடி செளந்தரம் வெளியே வந்தாள். "ஏனம்மா என்ன செய்திட்டன் இப்ப? இப்படி எரிஞ்சு விழுறியள்" என சற்று கோபத்துடன் கேட்டான் விமலன். "அப்பா திருப்பி திருப்பி என்ன சொல்றவர்? இந்தப் போனை நோண்டிக்கொண்டிருக்கிறத விட்டிட்டு புத்தகத்தைப் படிக்கச் சொல்றது உன்ர காதில விழுந்தாத்தானே? ம்ம் நீ எப்ப திருந்தப் போறியோ தெரியல்ல" அலுத்துக் கொண்டவாறே சமயலறைப்பக்கம் போனாள் செளந்தரம்.

தாயை கனல் எரியும் பார்வையுடன் ஏறிட்டுப் பார்த்துவிட்டு "இவ எப்பவும் இப்படித்தான் கரைஞ்சு தள்ளுறதுதான் இவவின்ர வேல" முணு முணுத்துக்கொண்டே அவன் தனது வேலையைத் தொடர்ந்தான். நடேசர் எடுக்கிற சம்பளப் பணத்தில் அரைவாசியைச் செலவு செய்யிறது விமலன்தான். எப்ப பார்த்தாலும் யாரோடையாவது போன்ல அலட்டி காச கரைக்கிறது தான் அவன்ர வேலை. வீட்டில் மூத்த அதுவும் ஆண் பிள்ளை என்ற படியால் கொஞ்சம் செல்லம் அதிகம் தான். இளையவள் நவீனா அவள் விமலனுக்கு நேர் மாறானவள். படிப்பு படிப்பு என புத்தகத்துடனேயே காலத்தை ஓட்டுபவள்.

நடேசர் கச்சேரில வேல பார்க்கிறார். அவர் தன்னைப் போல தன்ர பிள்ளைகள் ரெண்டுக்கும் கவர்மென்ட் உத்தியோகம் கிடைச்சிட வேண்டுமென்ற கொள்கையும் அவாவும் உடையவர். ஆனால் விமலன் எந்தவித குறிக்கோளோ சிந்தனையோ இல்லாமல் போனுடன் காலத்தை கழித்தான். போதாக்குறைக்கு எப்படியோ அதிக பெண்களை தன் தொலைபேசி மூலம் நண்பர்கள் ஆக்கிக் கொண்டான். நண்பிகளுடன் போன் பேசுவதும் குறுஞ்செய்தி அனுப்புவதும் பேஸ்புக்கில் அரட்டை அடிப்பதுமென தனது பொன்னான நேரங்களை வீணடித்தான். அவன் இந்த வருடம் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளான். ஆனால் படிப்பை மறந்து அவன் பயணிக்கின்றான்.

ஹாய் சாதனா! ஹலோ விமல், சாதனா இது என்ர பேஸ்புக் ஐடி நீ அட் பண்ணிவிடும் "ஓகே விமல் விமல் எனக்கொரு சின்ன ஹெல்ப்" "என்ன சாதனா?" சொல்லும். எனக்கு கொஞ்சம் பணம் தேவை தர முடியுமா? "ஆ. ஓகே நீ யோசிக்காதே நான்தாரன். நடேசர் எடுக்கும் சம்பளம் மகன் படிப்புக்கு படிப்புக்கு என்று சொல்லி வாங்கி இப்படியான கொடுக்கல் வாங்கல்களுக்கே பயன்பட்டது. அதிலும் கொடுக்கல் மட்டும் தான் இருந்தது. பெண் நண்பியருக்குப் பணத்தைக் கொடுத்து தனக்கு நல்ல பெயரைச் சேகரிக்க விரும்பினான் விமலன்.

யாருடனோ விமலன் சிரித்துச் சிரித்து தொலைபேசியில் உரையாடுவது விறாந்தையில் நின்ற செளந்தரத்தின் காதிலும் விழுகிறது. செய்த வேலையை அப்படியே விட்டுவிட்டு "டேய் விமலன் நீ திருந்த மாட்டியே? ஆரோட போன் கதைக்கிறாய். இப்படி வழிஞ்சு வழிஞ்சு?" திடுக்கிட்டவனாய் அது என்ர ப்ரண்டோட அம்மா" "எந்த ப்ரண்டு?" செளந்தரம் தொடுத்த கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்காததனால் தட்டுத் தடுமாறினான். என்னவோ அப்பாட மானத்தை கப்பலேத்தாம விட்டாச்சரி. பக்கத்துவீட்டு சிவகாமியின்ர மகன் பாலாவப் பார் தகப்பன் விறகு வெட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பிக்கிறார். என்டதை உணர்ந்து அந்தப் பெடியன் படிக்குது. உனைப் போலயா போன், கம்பியூட்டர் கேட்குது. "அந்தப் பெடியனைப் பார்த்தாவது திருந்து" எனச் சொல்லிக் கொண்டிருக்கும் போது விமலன் எதையும் காதில வாங்காதவனாய் அடுத்த பக்கம் சென்றான் போனில் உரையாடியவாறே.

உந்தப் பிள்ள எப்பதான் திருந்தப்போகுதோ கடவுளே! எனச் சலிப்படைந்து நடக்கத் தொடங்கினாள் சௌந்தரம். விமலனின் செயற்பாடுகளில் நாளுக்கு நாள் மாற்றம் தென்பட்டது. வீட்டுக்கு நேரத்துக்கு வருவதில்லை. அப்படி வந்தாலும் இரவு 10, 11 மணிக்கே வந்து சேர்கிறான். பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை என தலைமை ஆசிரியர் கூட நவீனாவிடம் கூறியிருக்கிறார்.

எப்போதும் போனும் கையுமாகத்தான் இருக்கிறான். ஏதோ செய்கிறான் என்பது மட்டும் பெற்றோருக்குத் தெரிகிறது. அவனது நடத்தைகள் ஆச்சரியமூட்டுவனவாக அமைந்தன. நடேசர் ஒரு நாள் தம்பி விமல் உன்ர போக்குச் சரியில்லை. நீ படிக்கிறதையும் நான் காண்றதில்லை. எந்தநேரம் பார்த்தாலும் போனோடையும் கம்பியூட்டரோடையும் தான் இருக்கிறா" என்று கண்டிப்போடு கூறவே, இல்ல அப்ப நான் படிப்பு விசயமாத்தான் மினக்கெடுறன். தேவையற்றது எதுவும் செய்யிறேல்ல" நாசூக்காகப் பதில் சொன்னான் விமலன்.

"அண்ணா உனக்கு வார மாதம் பைனல் எக்ஸாம். ஞாபகம் இருக்கோ?" ஓமோம் எனக்கு ஞாபகமிருக்கு அப்ப எல்லாம் படிச்சிட்டியே" பாலா அண்ணா எந்த நேரமும் புத்தகமும் கையும்தான் வேப்ப மரத்துக்குக் கீழே இருந்து படிச்சுக் கொண்டுதான் இருப்பார். போ போ எவன் படிச்சா எனக்கென்ன எரிச்சல் பட்டுக் கொண்டான் விமலன் பரீட்சைக்கான நாட்கள் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆனால் விமலன் புத்தகங்களை திறந்தே பார்ப்பதில்லை.

பரீட்சை ஆரம்பமாகியது விமலன் ஏதோ எழுத வேண்டிய கடமைக்கு பரீட்சை எழுதினான் ஆனால் பாலா மிகவும் அக்கறையுடன் ஒவ்வொரு பரீட்சையையும் முகம் கொடுத்தான். அப்பாடா ஒரு மாதிரி எல்லா எக்ஸாமும் முடிஞ்சுது. இனி படிக்க வேண்டிய அவசியமில்லை என பெருமூச்சு விட்டான் விமலன். நாட்கள் உருண்டன. விமலன் போன் கதைப்பதிலும் தன்னை வகை தொகையான ஆடம்பர ஆடைகளால் அழகுபடுத்திக் கொள்வதிலும் அக்கறை காட்டினான். நண்பர்களுடன் சேர்ந்து மது, புகை என பழகி அவற்றுடனே நாட்களைக் கழித்தான்.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. விமலன் எந்தப் பாடத்திலும் சித்திபெறவில்லை. பாலா அனைத்துப் பாடங்களிலும் திறமைச்சித்தி பெற்றிருந்தான். ஊர் முழுக்க பாலாவின் புகழாரம் தான். விமலன் பலரது கேலி கிண்டல்களுக்கும் தூற்றுதல்களுக்கும் ஆளாகி மூலையில் முடங்கினான். தான் செய்த தவறுகள் அப்பொழுது தான் அவன் மனக்கண் முன் வந்து சுட்டெரித்தன. பொன்னான அத்தனை நாட்களையும் வீனே கழித்து விட்டதை உணர்ந்து நொந்து போனான். அடுத்த மணித்துளியே தனக்குள் சத்தியம் செய்து கொண்டான். "இனி போனையோ மதுவையோ தொடுவதில்லை" என்று அவன் எடுத்த முடிவு உறுதியானது. பயணம் ஆரம்பமானது புதியதோர் உலகை நோக்கி!

**சுதாகரன் கிருத்திகா**
**2019 கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வாழ்வில் அறிவியலும் அழகியலும்

கருவிலே மனிதன் விதையாகும் போது இயற்கை அவனுக்கு இரு கொடைகளை அளிக்கின்றது. ஒன்று அறிவு வளமாக தர்க்க ரீதியாக சிந்திக்க கூடிய மூளை. மற்றையது உணர்வு பூர்வமாகவும் கற்பனைத் திறனுடனும் செயற்படும் உள்ளம். இவை இரண்டுமே மனிதனின் முழுமையான வாழ்விற்கு அவசியமாகும். மனிதன் அழகியலை விடுத்து அறியலை நாடுவானாயின் அவன் இயந்திரம் போலாகி விடுவான். அதேபோன்று அறிவியலை புறந்தள்ளி அழகியலைத் தேடுவானாயின் நன்மை, தீமை, சத்தியம், அசாத்தியம் என அன்றாட வாழ்வினை பகுத்துணர முடியாதவனாகி விடுவான். எனவே இவ்விரண்டில் ஒன்றைப் புறந்தள்ளி விட்டு முழுமை காண்பதென்பது இயலாத ஒன்றாகும். இவை மனித வாழ்வில் ஒரு நாணயத்தில் காணப்படும் இரண்டு பக்கங்களைப் போன்று ஒன்றை விட்டு ஒன்று விலகாது இணைந்து காணப்படுகின்றன.

மனிதனின் பரிணாம வளர்ச்சியின் ஆரம்பத்திலிருந்தே அறிவியலும் அழகியலும் அவனுடன் இணைந்து வளர்ச்சியடைகிறது. வாழ்வில் பலவற்றை ஆராயும் நோக்கும் வாழ்வினை எளிதாக்கும் முயற்சியும் அறிவியலின் அபரிமித வளர்ச்சிக்கு வித்திட்டன. இன்று ஒரு கைதட்டலில் காலத்தினைத் திருப்பி விடும் அளவிற்கு அறிவியல் வளர்ந்துள்ளது. துணி துவைப்பதிலிருந்து தூங்க வைப்பது வரையும் இயந்திரங்கள் உலக சந்தையில் விற்கப்படுகின்றன. மறுபக்கத்தில் அழகியலும் உயரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்

செல்வங்கள் யாவும்

கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்ற புரட்சிக் கவியின் முழக்கம் நம் சமூகத்தில் அழகியலின் வளர்ச்சியை தூண்டின. உலக நாடுகளில் இருந்து நம் நாட்டிற்கு பல கலைகள் வந்து சேர்ந்தன. இவ்வாறாக தற்போதைய காலகட்டத்தில் மனிதனின் அன்றாட வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக கலைகள் மாறிவிட்டன. சமூக சீர்ப்படுத்தல்களையும் சமுதாயத்தின் நகர்வுகளையும் வெளியிடும் ஊடகங்களாக இன்றைய அழகியல் விளங்குகின்றன.

இப்படியாக அறிவியலும் அழகியலும் வளர்ச்சியடைந்தாலும் மனிதவாழ்வு இன்று முழுமையற்றதாகக் காணப்படுகின்றதாயின் அதற்குக் காரணம் அறிவியலையும் அழகியலையும் ஒன்றுபடப் பயிலாததேயாகும். இன்றைய மனிதன் அறிவியல் வளர்ச்சியினால் இயந்திரமாக நடமாடுகின்றான். எனினும் முற்காலத்தில் இருந்ததை விட இன்றைய காலத்தில் அறிவியல், அழகியல் என்பவற்றுக்கிடையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு எளிதாகத் தெரிகிறது. அழகியலை செம்மைப்படுத்தவும், விரிவுபடுத்தவும், பாதுகாக்கவும் அறிவியல் உதவுகின்றது. கலைகளை நோக்குமிடத்து இன்று இயல், இசை, நாடகம், ஓவியம் என எல்லாத் துறைகளிலும் கணனிகள் புகுந்து விட்டன. புதிய இசைகளை அமைக்கவும் பல ஒலிகளை இணைக்கவும், அப் பாட்டுக்களை இறுவட்டுக்களில் பதியவைத்தல், பாதுகாத்தல் என இசைத்துறை அறிவியலை நாடி நிற்கின்றது. மேலும் ஓவியத்தில் வர்ணக் கலைகளை வடிவமைத்தல், ஓவியம் வரைதல் என்பனவும் கணனியை நாடி நிற்கின்றன. இன்றைய கார்ட்டூன் திரைப்படங்கள் இதற்கு சான்றாக அமைகின்றன. இவ்வாறாக அழகியல் இன்று அறிவியல் ஊடாக வளர்ச்சி கண்டுள்ளது.

மறுபக்கத்திலே அறிவியலின் கண்டுபிடிப்புக்கள் பலவற்றிற்கும் அழகியல் ஒரு வளமாக உள்ளது. கலைகளில் கற்பனையாக வெளியிடப்படும் சம்பவங்கள் அறிவியலாளர்களின் தர்க்கங்களுக்குட்பட்டு சாதனங்களாக உருமாறுகின்றன. அழகியல் பல கற்பனைக் கருத்துக்களை அறிவியலுக்கு வழங்குகின்றது. அறிவியல் அதை அசை போட்டு புதிய விதிகளாகவும் கண்டுபிடிப்புக்களாகவும் நிறுவுகின்றது. பழமை பொருந்திய இராமாயணக் கதையில் இராவணன் சீதையைக் கொண்டு சென்ற புட்பக விமானம் இன்று மக்களை ஏற்றி இறக்கும் ஆகாய விமானமாக மாற்றமடைந்து விட்டது. எனவே இன்றைய இயந்திர மனிதன் அன்று இலக்கியத்தின் இரும்பு மனிதன் எனக் கூறலாம்.

மேலும் ஒரு கதாசிரியர் ஆயிரத்து தொண்ணூறாம் ஆண்டளவில் ஒரு இயந்திர இராட்சத குழல் மூலம் மனிதன் நிலவுக்கு சென்றதாக சித்தரிக்கின்றார். இதனை வாசிக்கின்ற விஞ்ஞானியின் மனதிலே ஓர் சிந்தனை பிறக்கின்றது. பின்னர் அவ் இயந்திரம் ரொக்கெட்டாகத் தயாராகின்றது. அண்டவெளியிடை ஆராய்ச்சிகளை அது நிகழ்த்துகிறது. இவ்வாறாக அறிவியல் பல துறைகளிலும் பரபுவதற்கு அழகியல் களம் அமைக்கிறது. அறிவியல் சிந்தனைகளில் மூழ்கிய மனிதன் தன்னைப் புதுப்பிக்க அழகியலை நாடுவான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வாறு மனித வாழ்வை வெளச்சத்திற்கு கொண்டு வருகின்ற கலங்கரை விளக்காக இவை திகழ்கின்றன. அறிவியல், அழகியல் என்பவற்றை ஒன்றோடு ஒன்று இணைவுபடுத்தி வைத்தலே இன்றைய வாழ்வில் அவசியமாகின்றது. எனவே இவை இரண்டையும் இவற்றின் சிறப்பினையும் விளங்கி நாம் கற்போமானால் வாழ்வில் முழுமையானவர்களாக மாறலாம்.

*அழகியலில் அரும்பெடுத்து*
*அறிவியலில் விடைதேடி*
*அகிலத்தை வென்று சாதனை படைத்திடுவோம்.*

**நடராசா சியானுகா**
**கலைப்பிரிவு 2019**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகப்புத்தகம்

Face Book
நீ ஒரு அறிவுப் பெட்டகம்
எத்தனை பேரை
நீ அறிஞராக்கி விட்டாய்

Face book
நீ ஒரு காமக் கொட்டகை
எத்தனை
பெண்களை ஏமாற்றி விட்டாய்

Face book
நீ ஒரு அறிவின் சாரல்
எத்தனை
அறிவாளிகளை உருவாக்கி விட்டாய்

Face book
நீ ஒரு புரியாத புதிர்
எத்தனை புதிர்களுக்கு
நீ விடை தந்திருப்பாய்

Face book
நீ ஒரு புகைப்படக் களஞ்சியம்
எத்தனை இயற்கைகளை
நீ படமாக்கி இருப்பாய்

Face book
நீ ஒரு உலகின் அறிவுக் களஞ்சியம்
எத்தனை பொது அறிவிற்கு
விடைதந்துள்ளாய்

**வி.டிலக்சனா**
**கலைப்பிரிவு (2019)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனவு காணுங்கள்

கனவு காண்பீர் என்று
கலாம் கூறினார் அன்று
கால வேகம் தன்னில்
கவினுற வொலிக்குது இன்று

தவழ்ந்த காலம் முதலாய்
தன்னம்பிக்கை கொண்டு
தப்பித்தவறி தடம் புரளாமல்
தன்னம்பிக்கை அளித்ததுவே

மழலைப் பருவக்கனவு
மகிழ்ச்சியான நிகழ்வது
மறுபடியும் எண்ணிடும்
மகான் கூறும் சொல்லது

நனவு கொண்டு வாழவே
நினைவிலென் இலட்சியம்
நினைவுலகில் வாழும் வரை
நிலைத்திருக்கும் கனவதாம்

அன்று கண்ட கனவு
இன்று நிஜம் ஆனது
அகிலம் தனில் விஸ்வரூபமாய்
அறிஞனின் உரையிது

கனவு காண வாருங்கள்
கலையாமல் நிலை நாட்டுங்கள்
கண்ட கனவு நிஜமாகிடவே
கடினமான உழையுங்கள்

**ஜெ.ஜஸ்னிஜா**
**கலைப்பிரிவு [2019]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெய்ப்பொருள் காண்பதறிவு

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன் என்பார். கல்வி கற்றலின் இறுதிப் பயன் வீடடைதலாகும். ஞானத்தின் முடிவு முத்தி அல்லது வீடு என்பர். அதனை மெய்யுணர்வு என்றும் கூறுவர். மெய்யுணர்தலுக்கு இடையூறாயிருப்பது உலக வாழ்வில் உள்ள சிற்றின்பப் பற்றுதலாகும். இப் பற்றினை அறுத்தல் மிக மிக அவசியமாகும். மெய்ப்பொருள் ஆராய்ச்சியின் முதற்படியாக நாம் அறிந்து கொள்ள வேண்டியது மெய்ப் பொருளின் இலக்கணங்களை அறிதலாகும். பொய்ச் சமய நெறிகளைத் தழுவி நிற்போர் பொருள் அல்லாதவற்றைப் பொருளெனக் கொண்டு மயங்குவர். இம் மயக்கத்தினால் அறியாமையால் துன்பம் தரும் பிறவிச்சூழல் நம்மை விட்டு நீங்காது.

அறியாமை நீங்கி மெய்யுணர்வைப் பெற்றோரே வீடு பேற்றை எய்துவர். அத்தகையோரை ஐயங்களும் திரிபுணர்ச்சியும் தாக்குவதில்லை. ஆராய்தலின் மூலம் மெய்ப்பொருளை அறிதல் மிக்க பயனைத்தரும். ஆராய்தலில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என மூன்று படிகள் உண்டு. இப்படிகள் வழிநின்று மெய்ப்பொருளை உணர்தற்கு முற்படுவோர் முதலில் உண்மையை உணர்ந்த உத்தம ஆசாரியார் ஒருவரைத் தமது ஞான குருவாக கொள்ள வேண்டும்.

ஞான குருவையடைந்து அவரிடம் உபதேசங்களை கேட்டுச் சிந்தித்து உண்மையை ஐயந்திரிபுற அறிந்திட வேண்டும் சிந்திக்க வேண்டும் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். அங்ஙனம் சிந்தித்துத் தெளிதலால் பிறப்புக்குக் காரணமாக உள்ள அறியாமையும் மனக்கிலேசங்களும் அகலும். முத்திக்கு வழிகாட்டும் முதல்வாகிய இறைவனை காண்பதே மெய்யுணர்வு என்பது புலனாகும். "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பது அறிவு." என்னும் வள்ளுவர் வாக்கும் இதனையே உணர்த்துகிறது.

இன்பங்கள் நம்மை சாராமல் இருக்க வேண்டுமானால் அத்துன்பங்களுக்குக் காரணமானவற்றை உணர்ந்து அவற்றின் மீதுள்ள பலவற்றை விலக்கிக் கொள்ள வேண்டும். செம்பொருள் காணும் வழியும் அதுவே. கல்வி என்பது அறியாமையைக் களைந்து நமக்கு அறிவெனும் ஒளியைத் தருவது. கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அது அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைத் நம்முள்ளத்தே திறப்பதாகும். கல்வியின் பயன் கடவுளைத் தொழுதலாகும். எனவே நாம் பெறும் கல்வி நமக்கு ஆன்ம ஞானத்தைத் தருதல் வேண்டும். கல்வி நமக்கு அறிவைத் தருகிறது. "கல்வி கரையில கற்பவர் நாட்சில" என்றுரைக்கிறது நாலடியார். எனவே நாம் பெறும் கல்வியின் மூலம் குறுகிய காலத்திலேயே மெய்ப்பொருளை அறிந்திட முயல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் குறளும் உண்மையை மெய்ப்பொருளை உணர்வது தான் அறிவுடைமையாகும். என வலியுறுத்துகிறது. ஆதலின் நமது கல்வி அறிவை மெய்ப்பொருளை உணர்த்திடும் வகையில் பயன்படுத்துதல் அவசியமாகும். "மெய்ப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றார் வள்ளுவர். நாம் யார் யாரிடம் என்ன பொருள் பற்றிக் கேட்டாலும் கேட்பதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் சிந்தித்து அதில் உள்ள மெய்ப்பொருளை உணர்தல் வேண்டும். அதுவே அறிவு என்கிறார் வள்ளுவர். அந்த அறிவு இருந்தால் தான் கூறும் கருத்தைப் பிறர் விளக்கும் படி எளிமைப் படுத்தி கூறலாம். பிறர் கூறுவதிலுள்ள நுண்ணிய கருத்துக்களையும் கூறலாம். உலகத்தோடொட்ட ஒழுகுதலும் அறிவுடைமையாகும்.

"உலகந் தழீஇய தொட்பம் மலர்தலும் கூம்பலு மில்லது அறிவு" என்கிறார் பொய்யில் புலவரான வள்ளுவர். உயர்ந்தோரை உலகோர் எனப்படுவதால் அவர்களுடன் நட்புக் கொண்டு இன்பம் துன்பம் ஆகிய இரண்டையும் ஒரே நிலையாகக் கருவதே அறிவுடைமையாகும். ஆதலால் உயர்ந்தோர் வழியில் உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ அதற்கேற்ப நடந்து கொள்வதே அறிவாகும். ஆதலால் நாம் பெற்ற அறிவினைப் பயன்தரும் வகையில் பயன்படுத்த வேண்டும். எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதை முன்னதாகவே எண்ணி உணர்தல் வேண்டும். அஞ்சுவதற்கு அஞ்சி, நல்லனவற்றை நயந்து நம் வாழ்வைப் பயனுடையதாக்க வேண்டும்.

"அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார் என்னுடைய ரேனுமிலர்" என்னும் குறள் கூறும் கருத்துக்கமைய நம் அறிவைப் பயன்படுத்தி மெய்ப்பொருளைக் கண்டு இவ்வுலகில் மறுமையிலும் அழிவிலா ஆனந்தத்தை முத்தியின்பத்தைப் பெற முயல்வோமாக

**செ.டிலக்சனா**
**கலைப்பிரிவு 2021**

## அமுதமொழிகள்

*நாம் எந்த வேலையைச் செய்கிறோம் என்பது அற்புதமல்ல.*

*அதைச் செய்வதில் மகிழ்ச்சியாக இருக்கிறோம்*

*என்பதே அற்புதம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஞ்ஞானத்தின் விந்தை

கல்லையும் கல்லையும் உரசியதைக் கண்டு பிடித்ததிலிருந்தே மனிதனின் கண்டுபிடிப்புக்கள் ஆரம்பித்தன. அன்றிலிருந்து இன்றுவரை விஞ்ஞானம் வானளாவிய ரீதியில் வளர்ந்து விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையே விந்தைகள் செய்து கொண்டிருக்கின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இன்று எமக்கு எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டுள்ளன. மனிதன் கருவிலே தோன்றிய காலத்திலிருந்து அவனது ஆயுள் முடிந்த பின்பும் விஞ்ஞானத்தின் பணி தொடர்வதைக் காண்கிறோம். முன்னைய காலத்தில் தாய்வயிற்றில் இருக்கும் சிசு ஆணா பெண்ணா என அறிவதற்கு சோதிடர்களை நாடிய சம்பவங்கள் உண்டு. இன்று தொழில்நுட்ப வளர்ச்சியால் பிறக்கும் குழந்தை எது என அறிந்து ஆடைகள், பொருட்கள் பெயர் என அனைத்தையுமே தயார் செய்யக் கூடியதாக உள்ளது. இது இயற்கைக்கு முரணான செயலாகும். மூதாதையர்கள் நிலாவை காட்டி சோறூட்டினார்கள். இன்றைய விஞ்ஞான மனிதன் நிலாவில் வைத்து சோறூட்டுகின்றான். இதுதான் விஞ்ஞானத்தின் விந்தை. செவ்வாய் என்பது நமது தலைவிதியை தீர்மானிக்கும் ஒரு கிரகமாக சோதிடர்கள் கண்டார்கள். விஞ்ஞானம் இப்போது செவ்வாய்க்கு சோதிடம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

மருத்துவத்துறைகளில் நோய்களைக் கண்டுபிடிப்பதற்கும் கண்டுபிடித்த பின் அவற்றை குணப்படுத்துவதற்கும் விஞ்ஞான உபகரணங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனால் இன்று இறப்புக்கள் குறைந்து மக்களது வாழ்க்கைத் தரம் உயர்கின்றது. வருமுன் காப்பது சிறந்ததல்லவா? இதற்கு விஞ்ஞான தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களும் மருத்துவ ஆராய்ச்சி முடிவுகளும் உதவுகின்றன. கல்வித்துறையில் இன்று விஞ்ஞானத்தின் பங்களிப்பு அளப்பரியது. தொலைக்காட்சி, வானொலி மட்டுமன்றி கணனியின் உபயோகம் கல்விக்கான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் யாவும் விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகளேயாகும்.

போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம் ஆற்றிவரும் சேவை குறிப்பிடக்கூடியது. பரந்த உலகம் இன்று சுருங்கியது. போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாலேயாகும். உலகின் எப்பாகத்திலிருந்தும் நினைத்தவுடன் நினைத்த இடத்திற்கு சென்றுவிடக்கூடியதாயிருப்பது விரைவான போக்குவரத்து வசதிகளாலேயாகும். விண்வெளிப் பயணங்களும் கோள்கள் வான மண்டலங்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் விஞ்ஞானத்தின் விருத்தியினாலேயாகும்.

விவசாயத்துறையில் நவீன முறைகள் புகுத்தப்பட்டு விளைச்சல் பெருகி இருக்கிறது. இயற்கை அழிவுகள் முன்கூட்டியே அறியப்பட்டு தவிர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைபொருட்கள் விளைந்த பின் நவீன முறைகளில் அறுவடை செய்யப்படுவதுடன் நீண்ட காலத்துக்கு கெட்டுப் போகாமல் நவீன முறைகளில் பாதுகாக்கப்படுகின்ற சமையலிலும் இன்று அடுப்புக்கள் மின்சாரத்தினால் இயக்கும் அரைக்கும் கருவிகள், குளிர்சாதனப் பெட்டிகள் எனப் பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விளையாட்டுத்துறையிலும், பொழுதுபோக்குத்துறையிலும் இன்று நவீனமயம் புகுந்துள்ளது. மக்களது பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இன்று பெருமளவிற்கு விஞ்ஞானத்தின் உதவியால் விரைவாகவும் இலகுவாகவும் செய்து முடிக்கப்படுவதுடன் பொருட்களின் உற்பத்தியும் தரமும் உயர்ந்து காணப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு துறைகளிலும் நன்மை புரிந்து வரும் விஞ்ஞான வளர்ச்சியே சில சந்தர்ப்பங்களில் மனிதனின் அழிவுக்கும் காரணமாகி விடுகின்றது. போர் ஆயுதங்கள், அணு ஆயுதங்கள், யுத்த விமானங்கள், யுத்த கப்பல்கள், துப்பாக்கிகள், ஏவுகணைகள் எனமனித குலத்தின் பேரழிவுக்கு வழிவகுக்கும். இவையும் விஞ்ஞானத்தின் கண்டு பிடிப்புக்களே ஆகும்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் அழிவினை விளைவித்து வருவதனை வேதனையுடன் கண்டு வருகின்றோம். தீயவற்றை விடுத்து நல்லனவற்றைப் பகுத்தறிந்து அன்னப்பறவை நீரைத் தவிர்த்துப் பாலை அருந்துவது போல நாமும் விஞ்ஞானம் தரும் நன்மைகளைப் பயன்படுத்தி நன்மைபெற வேண்டுமேயொழிய தீயனவற்றிற்கு இடம்தரக்கூடாது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனித குலத்தின் நல்வாழ்விற்கு பயன்பட வேண்டும். எனவே விஞ்ஞானத்தின் விருத்தி நல்லவழியில் பயன்படுத்தப்பட வேண்டும்.

அணு அயுதத்தின் பிரயோகத்தினால் சிதைந்து போன 'ஹிரோஷிமா நாகசாகி எனும் இரு பெரு நகரங்களின் வரலாறு அங்கு வாழ்ந்து வந்த மக்களின் கொடூர அழிவு இன்று வரை சந்ததி சந்ததியாக பாதிக்கப்படும் அப்பாவிச் சிறுபாலகர்கள், வளமற்றுப்போன நிலம், தாவரங்கள் முளைவிடக்கூட வளமற்றுப்போனதாகி நிற்கின்றது. இந்நிகழ்வு எவ்வளவோ தியாகங்கள் அர்ப்பணிப்புகளுடன் தாம் வகுத்துக்கொண்ட இலக்குகளிற்காக தன்னையே ஒத்த விஞ்ஞானிகள் நிகழ்த்திய அற்புத அறிவியல் புரட்சியை ஒரு கணத்தில் வெறுக்க வைக்கின்றது. இன்று அணு ஆயுதங்கள் ஒரு நாட்டின் வல்லமையை பறைசாற்றும் ஒரு ஆயுதமாக மாறியுள்ளது. அணு ஆயுதத்தின் விரைவான நாடுகளிடையேயான பரவல், கைத்தொழில் உற்பத்திகளின் விளைவான சூழலியல் மாசுபடுதல், ஓசோன் படையின் மெலிவடைதல், பச்சைவீட்டு விளைவு, மாறுபட்ட காலநிலை, மனித மனங்களின் நவீன வாழ்க்கை முறையிலான மன அமைதியின்மை அதிகரிக்கும். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுவது ஒரு புறமிருக்க அதன் விளைவாக மனித குலத்துக்கு தீங்குகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. மக்களுக்கு இன்றைய காலத்தில் பெரும் தீங்குகளை விளைவித்துக் கொண்டிருக்கும் நவீன சாதனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக ஸ்மாட்போன் மாறியிருக்கின்றது. ஸ்மாட்போன் கைத்தொலைபேசியின் வாயிலாக இன்றைய நவீன யுகத்தில் மக்களுக்கு கிடைக்கின்ற அனுகூலங்களைப் பார்க்கிலும் பிரதி கூலங்களே கூடுதலாக ஏற்படுவது தெரியவந்துள்ளது. ஸ்மாட்போன்களின் பயன்பாட்டினால் தற்காலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களும் மரணங்களும் இதற்கு சான்றாக அமைகின்றன.

வீதியில் நடந்து செல்லும் போது கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் வீதி விபத்துக்கள் பெருகியுள்ளன. பலர் காயமடைவதையும் நாம் காண்கிறோம். கைத்தொலைபேசியைப் பயன்படுத்தியபடி தண்டவாளத்தின் மீது நடந்து சென்ற வேளையில் புகையிரதத்தால் மோதுண்டு உடல் சிதறிப் பலியாகிப் போனோரின் எண்ணிக்கையும் ஏராளம். இவ்வாறான மரணங்கள் துரதிஷ்டமும் பரிதாபமும் மிகுந்தவையாகும். கைத்தொலைபேசி பாவனையில் காணப்படுகின்ற ஆபத்துக்கள் தொடர்பாக ஊடகங்களில் எச்சரிக்கை விளம்பரங்கள் வெளிவருகின்ற போதிலும் இவ்விடயத்தில் எதுவித பலனும் ஏற்பட்டதாக இல்லை. ஸ்மாட்போன் பாவனையினால் விபத்துக்களும் மரணங்களும் அதிகரித்தபடியே செல்கின்றன.

கல்வி அறிவற்றோர் மாத்திரமன்றி நன்கு கற்றவர்களும் கூட கைத்தொலைபேசியின் பாவனையினால் அநியாயமாக உயிரை மாய்த்துக் கொள்கின்றனர். என்பதுதான் வியப்புக்குரிய விடயம் சமீபகாலமாக கைத்தொலைபேசியின் விளைவாக சம்பவித்துள்ள மரணங்களை எடுத்து நோக்கும் போது இந்த உண்மையை அறிந்து கொள்ளலாம். நீர்வீழ்ச்சி ஒன்றின் அருகே நின்றபடி "செல்பி" எடுத்துக் கொண்டவேளையில் நீருக்குள் தவறி விழுந்த வைத்தியர் ஒருவர் மரணமான சம்பவம் இறுதியாகப் பதிவாகியிருக்கின்றது. "செல்பிமோகம்" என்பது எவரையுமே விட்டு வைக்கவில்லை என்பது இதன்மூலம் தெளிவாகின்றது. எனவே இவ்வாறான விஞ்ஞான விந்தைகள் இன்று பல்கிப் பெருகி உள்ள தன்மையினை கண்டு கொள்ள முடிகிறது.

**ஸ்ரீ.நிலானி**
**கலைப்பிரிவு [2020]**

## அமுதமொழிகள்

*இலக்குகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றுக்கு இடையேயான*
*பாலமே ஒழுக்கம் என்பது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியத்தின் இலட்சியம்

எழில் மிகுந்ததும் இலக்கிய இரசனை மிக்கதுமான கோளவடிவானதே நாம் வாழும் இப்பூமியாகும். இப் பூமி தோன்றிய காலங்களிலிருந்தே இலக்கியங்களும் அதனைப் படைத்த புலவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கி விட்டன. அவ்வாறு வளர்ந்த இலக்கியங்கள் இன்று எண்ணிக்கையில் அடங்காமல் காணப்படுகின்றன. இவை இத்தகைய எண்ணிக்கையில் காணப்படுவதும் நன்மைக்கே. ஏனெனில் இவ்வாறு காணப்படுகின்ற ஒவ்வொரு நூல்களும் மனிதனது வாழ்க்கைக்கு அவசியமான அறக்கருத்துக்களைக் கூறுகின்றன.

இலக்கியங்கள் பல வகைப்பட்டவையாகவும் பல்வேறு காலங்களில் தோன்றியனவாகவும் காணப்படுகின்றன. இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலங்களாக சங்ககாலம், சங்கமருவிய காலம், நாயக்கர் காலம், பல்லவர் காலம் போன்ற பல காலங்களைக் கூறலாம். மக்களின் இலக்குகளை இயம்புதல் இலக்கியம் ஆகும். மக்களின் வாழ்க்கை இலட்சியங்களையும் நோக்கங்களையும் போக்குகளையும் எடுத்துக் கூறுகின்ற அற்புதமான படைப்புக்களாக இலக்கியங்கள் விளங்குகின்றன. செய்யுள் நடையிலாயினும் உரைநடையில் ஆயினும் மக்களின் வாழ்க்கையின் கண் வருகின்ற அனுபவங்களை அழகுற புனைந்து கூறும் நூல்கள் இலக்கியங்களாகும்.

இலக்கியங்கள் வெவ்வேறு புலவர்களால் இயற்றப்பட்டவையாக காணப்படுகின்ற போதிலும் இவைகளிற்குள் இருக்கும் ஒரேயொரு ஒற்றுமை அவை ஒவ்வொன்றும் அறக்கருத்துக்களைக் கூறுகின்றன என்பது ஆகும். இவ்வாறு இலக்கியங்கள் இலட்சியம், நீதி தவறாமை, பொய் கூறாமை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, சகோதரத்துவம் போன்ற நற்பழக்க வழக்கங்கள் பற்றியும் எடுத்துக்காட்டியுள்ளன. சங்க காலத்தில் குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, நற்றினை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுபடை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தாராற்றுப்படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலமாகும். அது மட்டுமன்றி அவ் இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் அற்புதக் கண்ணாடிகளாகவும் திகழ்ந்தன.

இந்த வகையில் மனித வாழ்வின் அடிப்படையம்சமாகத் திகழும் இலட்சியமும் அவற்றின் இலட்சியவாதிகளும் பற்றி நோக்குவோமானால் சிலப்பதிகாரம் என்னும் ஐம்பெருங்காப்பியத்தில் வருகின்ற ஆடவனான கோவலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது முதல் மனைவியாகியவளும் கற்புக்கரசியுமான கண்ணகியை மறந்து நாட்டிய மங்கையான மாதவியுடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் மாதவிக்கும் கோவலனிற்கும் கருத்து வேறுபாடு வரும் பட்சத்தில் கோவலன் கண்ணகியிடம் வருகை தந்தான். கண்ணகியும் அவனை மன்னித்து ஏற்றுக் கொண்டாள். ஆனால் அவர்களிருவரிடமும் ஒரு பொற்காசு கூட எதுவுமில்லாத பஞ்ச காலமாகக் காணப்பட்டது. அப்போது கண்ணகி தன்னுடைய ஒரு காற்சிலம்பைக் கழற்றிக் கொடுத்து விட்டாள். அதனை விற்கச் சென்ற கோவலன் மதுரை மன்னனிடம் சென்று இறந்து போகின்றான். அவனது மரணச் செய்தியைப் பற்றிக் கேள்வி உற்ற கண்ணகி அவ் மன்னனிடம் சென்று தீர்ப்புக் கேட்டாள். அது மட்டுமன்றி அம் மதுரையையே தனது கற்பு எனும் தீயினால் எரித்து சம்பலாக்கினாள் எனக் கண்ணகியின் இலட்சியத்தை நோக்க முடிகின்றது.

இதனைப் போன்று தருமன், அருச்சுனன், தசரதன், பாண்டிமாதேவி போன்றவர்களும் தமது இலட்சியத்திற்காக வாழ்ந்து உயிர்நீர்த்தவர்கள் ஆவார். இவர்களுள் தருமன் தான் வளர்த்த நாயிற்குக் கிடைக்காத சொர்க்கம் எனக்கும் வேண்டாம் எனக் கூறியதனூடாக தருமனது இலட்சியப் பண்பான அனைத்துயிரையும் தன்னுயிரைப்போலக் கொள்ள வேண்டும் எனும் பண்பு வெளிப்படுகின்றதை நோக்க முடிகின்றது அல்லவா?

இவ்வாறு பல இலக்கியங்கள் மூலம் பற்பல அறக்கருத்துக்கள் புலப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். எனவே மாணவராகிய நாமும் பல இலக்கியங்களைக் கற்றுப் பயன்களைப் பெற வேண்டும்.

**வி.சுலக்சனா**
**கலைப்பிரிவு [2021]**

## அமுதமொழிகள்

*ஆத்திரம் என்பது உள்ளத்தில் எழும்போது அறிவு தன்னை திரையிட்டு கொள்ளும்,*
*ஆத்திரம் கொண்டவன் தன் ஆத்திரத்தை தீர்த்துக் கொள்வதை தடுப்பது*
*என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் அபிவிருத்தியில் ஜனநாயகத்தின் தாக்கம்

அபிவிருத்தி என்பது ஒரு பரந்துபட்ட பன்முக எண்ணக்கருவாகும். அதாவது அபிவிருத்தி என்பது தனித்து பொருளாதார காரணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு அப்பால் வருமான மீள்பகிர்வு, வறுமையை ஒழித்தல், ஒழுக்கம், ஜனநாயக மயமாக்கம், ஒப்புரவான வளப்பகிர்வு, சூழல் பாதுகாப்பு, என பல்வேறுபட்ட பல்பரிமாண விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. ஆயினும் அபிவிருத்தியின் மையம் நாட்டின் மொத்ததேசிய வருமானத்தையும் அதன்பால் தலா வருமானத்தையும் அதிகரித்தல், பொருளாதார அபிவிருத்தியின் பாற்படும். எனவே நாட்டின் அபிவிருத்தியானது பல்வேறுபட்ட விடயங்களில் முன்னேற்றத்தை வேண்டி நிற்கின்றபோதும் அவற்றுள் பொருளாதார வளர்ச்சி பிரதான பங்கை வகிக்கின்றது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஜனநாயகம் என்ன பங்களிப்பை செய்கின்றது என நோக்க முற்படும்போது இங்கு ஜனநாயகம் அல்லது ஜனநாயக சுதந்திரம் என்பது கவனிக்கத்தக்கது. எனவே ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சியை குறிக்கும். மக்களின் வாக்கு சுதந்திரத்தால் தாராள ஜனநாயக ஆட்சி அமைத்துக் கொள்ளும் ஆசிய நாடுகளில் குறிப்பாக இலங்கையில் இன்றைய குறைவிருத்தி போக்கிற்கு தாராள ஜனநாயகம் ஒரு காரணம் எனலாம். இலங்கை போன்ற ஆசிய நாடுகள் தாராள ஜனநாயகத்தை பிரித்தானியாவிடமிருந்து கண்மூடித்தனமாக உள்வாங்கியதன் விளைவுதான் குறைந்த பொருளாதார அபிவிருத்திக்கு காரணமாகியது. இதன் கருத்து குறைவிருத்தி நிலை என்பது ஒரு வரலாற்று காலணித்துவ பொறிமுறையின் விளைவு என்பது அரசியல், பொருளியல் வல்லுனர்களின் கருத்து உண்மையில் ஜனநாயக சுதந்திரத்தை பயன்படுத்தி தலைவர்களை தெரிவுசெய்து வெற்றியீட்டிய அரசியல் தலைவர்களை அவ்வெற்றிக்கு பங்களிப்பு செய்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளதா? என்பது கேள்வி

ஜனநாயக சுதந்திரத்தைப் பயன்படுத்தி தமக்கு சாதகமாக வலு சேர்த்த ஆசியாவின் பொருளாதார வேங்கைகளான சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான் மற்றும் கொங்கொங் ஆகிய நாடுகள் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியில் பின்தங்கி நின்றபோதும் இன்று தலா வருமானத்தை எத்தனையோ மடங்கு அதிகரித்துள்ளன. ஆனால் இலங்கையில் பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள் வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்காக சமூக அபிவிருத்தி அல்லது சமூக நலன் சார்ந்த விடயங்களை மேற்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். இதனால் சமூக நலச் செலவுகள் அதிகரித்துச் செல்கின்றது. கடன்கள் மற்றும் அந்நிய உதவிகள் மூலம் பாரிய விவசாய பண்ணைகள், பாரிய கைத்தொழில்சாலைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகங்கள், நீர்த்தேக்கங்கள் மூலம் நீண்ட நோக்கில் அபிவிருத்தி அடைவதை விடுத்து இலவச கல்வி, உணவுமானியம், நுண்கருத்திட்டங்கள் போன்றவை மூலம் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதை நோக்காக கொண்டுள்ளன.

நாடுகளின் கடந்தகால அனுபவங்களின் ஊடாக குறைவான ஜனநாயக ஆட்சியுள்ள நாடுகளில் பொருளாதார அபிவிருத்தி வேகமாக முன்னெடுக்கப்பட்டது. அல்லது தாராள ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை தியாகம் செய்தே இன்றைய பொருளாதார அபிவிருத்தியை அடைந்தன. எனவே இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் அவசியம். இலங்கையின் தலைமைத்துவம், பொருளாதார அபிவிருத்தி என்பதை விடுத்து இனம், மொழி அடிப்படையிலேயே இயங்குகின்றது.

ஆசியாவில் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேறிய நாடுகள், கடைப்பிடித்த வரையறுக்கப்பட்ட ஆட்சி முறையே காரணம். இந்நாடுகளில் குறைந்த ஜனநாயகம், பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி இறுதியாக தாராள ஜனநாயகம் என்ற ஒழுங்கிலேயே கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றன. ஆனால் இலங்கையில் முதலில் தாராள ஜனநாயகம், சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, இறுதியாக குறைந்த ஜனநாயகம் என்ற ஒழுங்கில் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட்டதால் இலங்கையில் அபிவிருத்தி என்பது இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. அத்துடன் சிறுபான்மை மக்கள், ஜனநாயக மற்றும் அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரம் கட்டப்பட்டவர்களாகவே உள்ளனர்.

எனவே நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியின் வரலாற்றை நோக்குமிடத்து நாடுகளின் அபிவிருத்தியில் குறைந்த ஜனநாயக வழியிலேயே அபிவிருத்தி கண்டுள்ளன. எனவே இலங்கையும் தாராள ஜனநாயகம் என்பதிலிருந்து விடுபட்டு ஃ சீரமைத்து ஆட்சிமுறையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்போது மட்டும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பற்றிச் சிந்திக்க முடியும்.

**திருமதி.பெ.பு லோகராஜா**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**

## அமுதமொழிகள்

**ஒரு பொருளை நாம் விரும்பத் தொடங்கும் போதே அதை ஒருநாள் வெறுக்க வேண்டி வரும் என்ற உண்மையை உணர்வதில்லை. ஆனால் விரும்பும் போதே வெறுக்கவும் தெரிந்து கொண்டவர்கள் மன மருத்துவங்களுக்கு ஆளாக நேர்வதில்லை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளில் ஆலோசனை வழிகாட்டல் சேவை

சமகாலத்தில் உலகளாவிய ரீதியில் பாடசாலைகள் மூலம் வழங்கப்பட வேண்டும் என நிபந்தனைப்படுத்தப்படுகின்ற ஓர் சேவையாக ஆலோசனை வழிகாட்டல் சேவை அமைகின்றது எனலாம். இங்கு வழிகாட்டல் ஆலோசனை எனும் இரண்டு எண்ணக்கருக்கள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இவ் இரண்டு எண்ணக் கருக்களும் ஒன்று போல தோன்றினாலும் வெவ்வேறான கருத்து நிலையிலேயே நோக்கப்படுகின்றன. அவ்வகையில் வழிகாட்டல் எச்சந்தர்ப்பத்திலும், எவருக்கும் வழங்கப்படும் உதவிச் சேவையாகும். ஆலோசனை அல்லது உளவளத்துணை என்பது பிரச்சினை ஒன்றிற்குள் உட்பட்டுள்ள நபருக்கு அந்நபர் மூலமாகவோ தீர்வை எடுக்கும் வண்ணம் உதவுகின்ற செயற்பாடு எனலாம். ஆலோசனை என்பது வழிகாட்டலின் முக்கிய கூறாக அமைகின்றது.

பாடசாலைகளைப் பொறுத்தவரை இவ்விரண்டு செயன்முறைகளும் கூட்டாக நிகழ்வதன் மூலமே காத்திரமானதோர் எதிர்கால சமூகத்தை உருவாக்க முடியும். என்றால் மிகையில்லை. ஆரம்பகாலங்களில் காணப்பட்ட கலாசாரப் பிண்ணனி, குறைவான சனத்தொகை போன்ற இன்னபிற காரணங்களால் ஆலோசனை வழிகாட்டல் சேவை என்பது இன்றைய காலத்தை போல தேவையான தொன்றாக அமையவில்லை. எனினும் தற்காலத்தைப் பொறுத்தவரையில் கலாசார மாற்றம், குடும்ப வன்முறைகள், ஒழுக்கம் பேணப்படாத தன்மை, பழைய அறிவு காலாவதியாதல், நவீன தகவல் தொழில்நுட்ப சாதனப் பெருக்கம், கற்கை நெறிகளின் பெருக்கம், வாழ்க்கைச் செலவு அதிகரித்தல், யுத்தம், இடப்பெயர்வுகள், போதிய தொழில் வழிகாட்டல் வழங்கப்படாமை போன்ற பல்வேறு காரணங்களால் மாணவர்கள் சரியானதொரு முடிவை எடுப்பதற்கு தைரியம் இல்லாதவர்களாக மாறுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் பாடசாலைகளில் கட்டாயமாக ஆலோசனை வழிகாட்டல் சேவையை வழங்க வேண்டியது அத்தியாவசியமாகின்றது.

அவ்வகையில் இன்றைய பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்படி ஆலோசனை வழிகாட்டலானது மாணவர்களுடன் பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் பாடசாலை ஊடாக வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நவீன கால குடும்பக் கட்டமைப்பு என்பது பாரம்பரிய பழக்கவழக்கங்களை கடந்து செல்வதாக அமைந்துள்ளது. இதன் காரணமாக அதிகம் பாதிப்புக்குள்ளாவது அக்குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் என்றால் மிகையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பிள்ளைகள் எதிர்நோக்கும் உள நெருக்கீடுகள் எண்ணற்றவை. இவர்களை சீர்மியப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுக்க பாடசாலை தவறுமானால் காத்திரமான எதிர்கால சமுதாயத்தை எம்மால் எதிர்பார்க்க முடியாது.

மேலும் பொருத்தமற்ற கற்கை நெறித் தெரிவுகளால் உளச்சிக்கலுக்கு உள்ளாகி பல்வேறு தவறான முடிவுகளை நோக்கிச் செல்லும் மாணவர் தொகை அதிகரித்து வருகின்றது. இதைவிட உயர்கல்வி நிறுவனங்களில் கற்ற மாணவர்கள் கூட தொழிற்துறைக்கு பொருத்தமற்றவர்களாக ஓரங்கட்டப்படும் நிலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்கான காரணம் போதுமான உளத்திறன்கள் விருத்தி செய்யப்படாமையே ஆகும். தனித்து தீர்மானம் எடுக்க முடியாமை, பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியாமை, அச்சம், குழுவாக ஒத்துழைத்து பணியாற்ற முடியாமை, பல்துறை ஆற்றலின்மை, ஆங்கில மொழித் தேர்ச்சி இன்மை, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த முடியாமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்நிலையை தொடர்ந்து ஏற்படாது இருக்க வேண்டுமெனில் பாடசாலை ஆலோசனை வழிகாட்டல் சேவை சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் சரியான தீர்மானத்தை எடுக்கவும், அதற்கேற்ப தம்மை இசைவாக்கிக் கொள்ளவும், பிரச்சினைகளை விடுவிக்கவும், சரியான முடிவுகளை எடுக்கவும், அம்முடிவு நீண்டகாலம் பொருத்தப்பாடு அடையவும் உதவுகின்ற விஞ்ஞான பூர்வமான செயற்பாடே வழிகாட்டல் என "ஆதர்ஜோன்ஸ்" என்பவர் குறிப்பிடுகின்றார். அவ்வகையில் தரம் 6 தொடக்கம் மாணவர்களுக்கு சிறந்த ஆலோசனை வழிகாட்டல் சேவை வழங்கப்படுமானால் மாணவர்கள் தமது பலம், பலவீனங்களை அறிந்து தம்மை சூழலுக்கு இயைபானவர்களாக மாற்றிக் கொள்ளவும், சுயமாக உறுதியான தீர்மானங்களை எடுக்கக் கூடியவர்களாகவும் மாறுவர். சகல சந்தர்ப்பங்களிலும் ஆலோசனை வழிகாட்டல் சேவையை பொறுப்பான ஆசிரியரோ, உளவளத்துணையாளரோ வழங்க வேண்டிய அவசியமில்லை. மாறாக நாளந்த செயற்பாடுகளினூடாக ஒவ்வொரு ஆசிரியரும் ஆலோசனை வழிகாட்டலை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இத்தகைய கூட்டுப் பொறுப்பு மிக்க செயற்பாட்டின் மூலமே தம் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர் சமுதாயத்தை சமூகத்திற்கு உகந்தவர்களாக வழங்க முடியும்.

இன்றைய மாணவர்களது கல்வித்திறன் அதிகரிக்கும் அளவுக்கு தொழில் பற்றிய அறிவு மிகக் குறைவானவர்களாகவே சமூகத்தில் காலடி வைக்கின்றனர். தொழில் வழிகாட்டல் மூலமாக வினைத்திறனுடைய தொழிலாளர்களை உருவாக்குவதற்கும், கேள்வி நிலையிலுள்ள தொழிலைப் பெறுவதற்கும் உதவ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள தொழிற்கல்வி மற்றும் ஏனைய உயர்தரத்திற்கான கற்கை நெறிகள் மாணவர்களை சிறந்ததொரு தொழில் ஒன்றை தெரிவு செய்து அதன் மூலம் சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக மாற்றும் வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது சிறப்பாக நடைபெற பாடசாலைகளின் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை தம்மாலான காத்திரமான பங்களிப்பை நல்க வேண்டும். அதேவேளை மாணவர்களும் உரிய வழிகாட்டலினூடாக தம்மை புடம் போட்டுக் கொள்ள விருப்புள்ளவார்களாகவும், தயார் நிலையிலும் இருத்தல் மிகவும் அவசியமாகின்றது.

தொகுத்து நோக்குமிடத்து நாளைய உலகம் இன்றைய மாணவர்களுக்காகவே காத்திருக்கின்றது. அதற்குரிய பொருத்தப்பாடான சமூகமாக மாணவர் சமூகம் மாற்றப்பட வேண்டும். அப்பாரிய பொறுப்பை ஏற்று நிற்கும் பாடசாலைகள் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமாகவே சிறந்த சமூக அக்கறையுள்ள வழிப்படுத்துநர்களை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

**உசாத்துணை**


*திருநாவுக்கரசு.க, (2005), இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச்சேவை* ஆய்வு,

www.thinakaran.lk



**திருமதி.ரஜிதா சுரேஸ்குமார்**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**


**சிந்தனைக்கு சில**

***வார்த்தைகளே இல்லாத வடிவம்***
***அளவுகோலே இல்லாத அன்பு***
***சுயநலமே இல்லாத இதயம்***
***வெறுப்பைக் காட்டாத முகம் – அம்மா***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுருக்கக் குறியீடுகள்

A.M - Ante Meridiem
முற்பகல்

A.O - Administrative Officer
நிர்வாக உத்தியோகத்தர்

A.N.C - African Nation Congress
ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

A.I - Agriculture Instructor
விவசாய போதனாசிரியர்

A.D.B - Asian Development Bank
ஆசிய அபிவிருத்தி வங்கி

A.S.P - Assistant Superintedent of Police
உதவி பொலிஸ் அத்தியட்சகர்

B.A - Bachelor of Arts
கலைமாணி

B.Sc - Bachelor of Science
விஞ்ஞானமாணி

B.Com - Bachelor of Commerce
வர்த்தகமாணி

D.D.E - Deputy Director of Education
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

D.S - District Secretary
மாவட்ட செயலாளர்

E.E.C - Europeon Economic Community
ஐரோப்பிய பொருளாதார சமூகம்

F.A.O - Food and Agriculture Organisation
உணவு விவசாய ஸ்தாபனம்

F.A - Financial Assistant
நிதி உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.A - Government Agent
அரசாங்க அதிபர்

G.M - General Manager
பொதுமுகாமையாளர்

G.P.O - General Post Officer
மத்திய தபால் காரியாலயம்

G.C.E - General Certificate of Education
கல்விப் பொதுத்தராதரம்

B.Ed - Bachelor of Education
கல்விமாணி

B.B.C - British Broadcasting Corporation
பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

B.C - Before Christ
கிறிஸ்துவுக்கு முன்

B.M.C - Building Materials Corporation
கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

C.A - Charted Accountant
பட்டயக் கணக்காளர்

C.I.D - Creminal Investication Department
குற்ற புலனாய்வுத் திணைக்களம்

CIR - Central Intelligence Agency
மத்திய உளவு ஸ்தாபனம் (அமெரிக்கா)

CWE - Co-Operative Wholesale Establishment
கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

C.B.I - Central Branch of Investication
மத்திய புலனாய்வுப் பிரிவு (இந்தியா)

C.M - Cental Minister
மத்திய அமைச்சு

D.I.G - Deputy Inspectior General
பிரதி பொலிஸ்மா அதிபர்

சத்தியசீலன் டிலக்சி
கலைப்பிரிவு [2020]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியப் பணியின் சவால்கள்

கல்வியின் கண்கள் இரண்டு அவை ஆசிரியனும் மாணவனும் கண்கள் இரண்டாயினும் இரண்டும் காணும் காட்சிகள் ஒன்றே. பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி ஆசிரியன் கற்பிக்கும் போது அவற்றுள் ஒன்றிணைந்து மாணவனும் அவற்றை உள்வாங்கி உள்ளத்தில் பதிக்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் அத்தெய்வங்களில் மாதாவும் பிதாவும் அன்பைக் கொட்டி மாணவனை நல்வழிப்படுத்தி நற்பிரஜையாக்க முற்படுகின்றனர். அவற்றை மாணவன் அள்ளிச் சேமித்து ஏற்று நடக்க பழகிக் கொள்ள வேண்டும்.

பூவும் தலையும் சேர்ந்தால் தான் ஒரு நாணயத்திற்கு பெறுமதி அதுபோல ஆசிரியனும் மாணவனும் இணைந்து ஒருவரை ஒருவர் புரிந்து கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போதே அக்கல்வி பயனுள்ளதாகின்றது. இதன் மூலம் சமூக அபிவிருத்தி ஏற்பட்டு நாடு விருத்தியடைகின்றது.

திண்ணைமுறைக்கல்வி மாறி ஆசிரியர் நின்று கற்பிக்க மாணவர்கள் இருந்தும் ஸ்மாட் வகுப்பறையில் கல்வி கற்கும் காலம் மாறிவிட்டது. மாணவனின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்காகவே மாணவனை தண்டிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அவை ஒருபோதும் அழிவை நோக்ககூடியவையல்ல அவை ஆக்கத்திறனுக்கான வழியாகவே காணப்படுகின்றது. அது கூட இன்று முடியாத காரியமாகி விட்டது. மாணவனும் பெற்றோரும் மனித உரிமை ஆணைக்குழுவின் மூலம் விசாரணைகள், வழக்குகள் என ஆசிரியனை தண்டிக்கும் காலமாக மாறிவிட்டது.

தாய், தந்தை, ஆசிரியர்களின் கண்டிப்பும், தண்டனையும் ஒரு பிள்ளையை சமூகத்திற்கேற்ற நற்பிரசையாக்குவதற்காகவே அன்றி அவர்கள் கீழ் நிலைக்கு கொண்டு செல்வதற்காக அல்ல, செய்த தவறுக்காக தண்டனைக்கு உட்படும் போது அத்தவறை உணர்ந்து பிள்ளை திருந்தி ஒழுக்க சீலனாகவும், கல்வியில் சிறந்து விளங்கவும் முடியும். என்பதனை பிள்ளைகள் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் நல்லாசிரியர்கள் மனமுடைந்து சிறந்த கற்பித்தலில் ஈடுபட முடியாத நிலை ஏற்படும்.

வகுப்பறைக் கல்வியை சீரமைத்து ஒழுங்காக வழங்குவதற்காக பாடசாலை வேளைக்கு புறம்பான நேரத்தில் வருடாந்த பாடத்திட்டம், பாடக்குறிப்பு போன்றவற்றை தயார் செய்து தனியாள் வேறுபாட்டிற்கமைய அதிகமான மாணவர்களைக் கொண்ட வகுப்பறையில் கற்பித்தலை சிரமத்துடன் மேற்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுக்கு மேலதிகாரிகளின் அழுத்தம் அதிகமாகக் காணப்படுகின்றது வருடாந்த பாடத்திட்டம், பாடக்குறிப்பு, வகுப்பறைப் பதிவுப் புத்தகத்தில் (நீல மட்டையில்) பதிவுகள் கணிப்பீட்டு புள்ளி பதிவுகள் ஆகியவற்றை நேர்த்தியாக தயாரித்த ஆசிரியர்களை மேற்பார்வை செய்தலின் பெயரில் பாராட்டுத் தெரிவிக்கும் அதிகாரிகளோ ஒரு சிலரே, குறைகளை கண்டுபிடித்து அதனைப் பகிரங்கப்படுத்தி ஆசிரியர்களை சோர்வடையச் செய்து மனநிலையை குழப்பும் செயலை செய்கின்ற அதிகாரிகளே அதிகமாக காணப்படுகின்றனர்.

தாம் பெற்ற பிள்ளைகளை சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் வீட்டில் வைத்து பராமரிக்க எத்தனை பெற்றோர்கள் அல்லல்படுகின்றனர். ஏன் தான் இந்த விடுமுறை நாட்களோ என மனம் சலிப்படைகின்றனர் அதேவேளை பாடசாலையில் எட்டுப்பாட வேளையும் வெவ்வேறு குணாதிசயங்களைக் கொண்ட மாணவர்களை ஒன்றிணைத்து கல்வி கற்பிக்க வேண்டிய, பராமரிக்கவேண்டிய, பாதுகாக்கவேண்டிய, பாரிய பொறுப்பு ஆசிரியரின் தலைமேல் திணிக்கப்பட மாணவர்களே Face book, What App, T.V, Cinima என்பவற்றின் பழக்கங்களுக்கு அடிமையாகி சீரழிந்து கொண்டிருக்கின்றனர். இப்படி வகுப்பறை நிலைமை இருக்க எப்போதும் ஆசிரியர் மேல் குறைகாணும் சமூகம் அதிகரிக்கின்றது. இவ்வகையில் ஓர் ஆசிரியர் எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றான் என்பதை ஏன் தான் இச்சமூகம் உணர மறுக்கின்றதோ தெரியவில்லை.

ஒவ்வொரு பிள்ளையும் தன்பிள்ளைபோல் எண்ணி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணம், உயர்தரம் ஆகியவற்றில் சிறந்த பெறுபேறு பெற வேண்டும் என எண்ணி அல்லும் பகலும் அயராது பாடுபட்டு மாலைநேரம், இரவுநேர வகுப்புக்கள் என மேலதிகமான நேரத்தை ஒதுக்கி கற்பிக்கும் ஆசிரியனுக்கு இறுதியில் கிடைக்கும் பெருமை மிகச் சிறுமையே. என்னுடைய பிள்ளை தனியார் கல்வி நிறுவனத்திலும், தனியாக வைத்து கற்பித்ததாலுமே சிறந்த பெறுபேறு பெற்றான். என முடிவடைகின்றது. இங்கு கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அவமதிக்கப்படுகின்றனர். அதனால் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். இப்படி எத்தனை சவால்களை ஏற்று இப்பணியில் பவனிவருகின்றான் ஓர் ஆசிரியன்.

பாடத்திட்ட கற்பித்தலுக்கு அப்பால் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என பற்பல, பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாகாணமட்டம், தேசியமட்டம் என விளையாட்டுப்போட்டி, தமிழ்த் தினப்போட்டி, சித்திரப்போட்டி, கணிதவினாடிவினாப் போட்டி, வணிகப்போட்டி என வந்து விட்டால் மேலதிக நேரங்களில் மாணவர்களை தயார்படுத்தி சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் போட்டிக்கு அழைத்துச் செல்ல நேரிடும் போது அழைத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு இன்னோரன்ன வேலைத்திட்டங்கள் இவ்வாசிரியர் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போட்டிகளில் சிறந்த பெறுபேறு கிடைக்காவிடின் ஆசிரியர் பாடசாலை நேரத்திற்கு புறம்பாக நின்று பயிற்சி கொடுத்தால் வென்றிருப்பார்கள் என் பிள்ளைகள் என்று கூறுபவரே அதிகம். தம் பிள்ளையின் திறன், தாம் கொடுத்த ஊக்கம் பற்றி சிந்திப்போர் சிலரே. பிள்ளைகளை ஊக்கப்படுத்தும் பெற்றோர்கள் இல்லை என்றில்லை. கணிசமானவர்களே காணப்படுகின்றனர். இரண்டு கைகளும் தட்டினால் தான் ஓசை வரும் அதுபோல் ஆசிரியனும் மாணவனும் ஒத்திசைவாக செயற்படின் மட்டுமே சிறந்த பெறுபேறு எதிலும் கிடைக்கும். அதனை விடுத்து ஆசிரியரில் குறை காண்பதே எம் சமூகம் என ஆகிவிட்டது.

அதனைவிட பாடசாலைகளில் விழாக்கள் என வந்துவிட்டால் (பரிசளிப்புவிழா, பொதுவான நிகழ்வுகள்) இரவுபகல் கிடையாது இவ்வாறு மேலதிக நேரங்களிலும் செயற்படும் ஆசிரியனுக்கு பாடசாலைக்கு சுகவீனம் காரணமாக பதினைந்து நிமிடங்கள் தாமதமாக வந்துவிட்டால் இவ்வாசிரியர்களே இப்படித்தான் என்றும் அவர்களுக்கு என்ன ஆறு மணத்தியால வேலை, அரைவாசிநாள் லீவு, இருபதாம் திகதி சம்பளம், பென்சன் என வயிற்றெரிச்சலைக் கிழப்பும் வசைப்பாட்டுக்கு மத்தியில் ஆசிரியனின் சேவையை தாக்கிப் பேசும் சமூகமே அதிகமாகி விட்டது. இத்தகைய சவால்களை வெல்ல இன்னும் மென்மேலும் ஆசிரியர் சமூகத்தைப்பற்றி கற்க வேண்டும்.

இப்படியாக பற்பல சவால்களுக்கும் முகம் கொடுத்து பிள்ளைகளை நற்பிரசைகளாக்கத் துடிக்கும் ஆசிரிய சமூகம் மன உளைச்சலுக்கு ஆளாகாது தம் கடமைகளை செவ்வனே சிறப்புறச் செய்ய பெற்றோரும் கல்விச் சமூகமும் உறுதுணையாக இருந்தால் மட்டுமே எத்தகைய சவால்களையும் முறியடித்து சிறந்த பெறுபேற்றை எம் பிள்ளைகள் எட்ட முடியும் என்பது உறுதியாகின்றது.

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீதான் நீதிபதி என்று எண்ணி உள்ளத்தால் பொய்யது உவப்புடன் கல்விபுகட்டி மாணவசமுதாயத்தை உயர்வடைய செய்ய அயராது உழைப்பவனே நல்லாசிரியன். வாழ்வே சவாலானது சவால்களை வென்றிட சவால்விடு வையகம் உனை வாழ்த்தும்.

**திருமதி.சந்திரபிரியா கலையமுதன்**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சேமிப்பு

1) மொத்த உள்நாட்டு சேமிப்பு (GDS)

➢ GDS = மொத்த முதலீடு + தேறிய பெறுமதி

➢ GDS = மொத்த உள்நாட்டு உற்பத்தி - மொத்த நுகர்வு

மொத்த தேசிய சேமிப்பு (GNS)

➢ GNS = மொத்த உள்நாட்டு சேமிப்பு + தேறிய 1ம் தரவருமானம் + தேறிய 2ம் தர வருமானம்

➢ GNS = செலவிடக்கூடிய வருமானம் - மொத்த நுகர்வு

❖ தேறிய முதலீடு = மொத்த முதலீடு - மூலதன நுகர்வு

❖ மொத்த தொழிற்பாட்டு மிகை = தேறிய தொழிற்பாட்டு மிகை + கலப்பு வருமானம் + நிலையான மூலதன நுகர்வு

### தேசிய கணக்கீட்டின் அடிப்படை சமன்பாடுகள்

1) உற்பத்தி வழி கணிப்பிட்டு முறை

➢ மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

✓ GDP = விவசாய உற்பத்தி + கைத்தொழில் உற்பத்தி + பணிகள் உற்பத்தி + மானியம் கழித்த பொருள் மீதானவரி

➢ தேறிய உள்நாட்டு உற்பத்தி (NDP)

✓ NDP = மொத்த உள்நாட்டு உற்பத்தி – பெறுமான தேய்வு (நிலையான மூலதன நுகர்வு)

2) செலவு வழி கணிப்பீட்டு முறை

➢ மொத்த உள்நாட்டு செலவு (GDE)

✓ GDE = தனிநபர் நுகர்வு செலவு + அரச நுகர்வுசெலவு + மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேறிய உள்நாட்டு செலவு (NDE)
  - ✓ NDE= மொத்த உள்நாட்டு செலவு - மூலதனநுகர்வு
- மொத்த உள்நாட்டு உற்பத்தி மொத்த உள்நாட் உ/தி மீதானசெலவு
  - ✓ மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு செலவு + பொருட்கள் பணிகள் கணக்கு நிலுவை
- மொத்த உள்நாட்டு வருமானம் (GDI)
  - ✓ சந்தை விலையில் மொத்த உள்நாட்டு வருமானம்/(உ/தி) = ஊழியர் இழப்பீடு + மொத்த தொழிற்பாடு மிகை + உற்பத்தி மீதானவரி + உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறியவரி
  - ✓ அடிப்படை விலையில் மொத்த உள்நாட்டு வருமானம் / (உ/தி) = ஊழியர் இழப்பீடு + மொத்த தொழிற்பாடு மிகை + மானியம் கழித்த ஏனைய வரி

**வருமான வழி கணிப்பீட்டு முறை**

- தேறிய உள்நாட்டு வருமானம் (NDI)
  - ✓ NDI = மொத்த உள்நாட்டு வருமானம் - மூலதன நுகர்வு
- மொத்த தேசிய வருமானம் (GNI)
  - ✓ GNI = மொத்த உள்நாட்டு உ/தி + தேறிய $_1$ம் தர வருமானம் தேறிய $_1$ம் தர வருமானம் = வெளிநாட்டில் இருந்து பெற்ற காரணி வருமானம் - வெளிநாட்டுக்கு அனுப்பிய வருமானம்
- செலவிடக்கூடிய மொத்த தேசிய வருமானம்
  - ✓ செலவிடக் கூடிய மொத்த தேசிய வருமானம் = மொத்த தேசிய வருமானம் + தேறிய $_1$ம் தர வருமானம்
- செலவிடக் கூடிய குடித்தனதுறை வருமானம்
  - ✓ செலவிடக் கூடிய குடித்தன துறை வருமானம்= குடித்தன துறை வருமானம் + தனிநபர் வருமான வரி

யோ.அபிராமி
வர்த்தகப்பிரிவு [2020]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பம் சார்பாக பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விசார் நெருக்கீடுகள்

சமூகத்தின் இருப்பையும் இயல்பையும் அடியொற்றியே குடும்பங்களின் கட்டமைப்பும் இயல்பும் இடம்பெறுகின்றன. தொடர்ச்சியான இடைவினைகளையும் மனவெழுச்சி பகிர்வையும் கொண்ட சமூகத்தின் அடிப்படை அலகாக குடும்பம் அமைகின்றது. அடிப்படையான சமூகமயமாக்கல், நடத்தை உருவாக்கம் ஆகியவற்றை கட்டமைப்பதில் குடும்பம் சிறப்பார்ந்த பங்கை வகிக்கிறது. சிறார்க்கு அன்பும், ஆதரவும் கிடைக்கப்பெறும் களஞ்சியமாகவும் அது அமைகிறது. உடல் வளர்ச்சியைக் கட்டமைப்புச் செய்வதில் குடும்பத்தின் பங்கு முக்கியமானது.

சமூக ஒழுங்கமைப்பில் குடும்பம் வகிக்கும் நிலை அதனூடாக நிகழ்த்தப்படும் இடைவினைகள் முதலியவை கற்பதிலும் ஆளுமை உருவாக்கத்திலும் தொடர்ச்சியான விளைவுகளை உருவாக்குகின்றன. குடும்பம் எவ்வாறு மனவெழுச்சிப் பிரச்சினைகளையும், சமூகப்பிரச்சினைகளையும் மாணவரிடத்தில் உருவாக்குகின்றது என்பதை ஆசிரியர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும்.

சமகாலப் பாடசாலைகள் குடும்ப உறவுகளை செழுமை பெறச் செய்வதற்குரிய கதவுகளை அகலத்திறந்து வருகின்றன. பெற்றோருடன் ஆசிரியர் எவ்வாறு இடைவினைகளை வளர்த்துக் கொள்ளலாம் என்பதற்கான பயிற்சிகளும் வழங்கப்படும் நிலை காணப்படுகிறது. மாணவரை வளப்படுத்த அதற்கு உறுதுணையாக பெற்றோருக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு பிள்ளை குடும்பத்துடன் கொண்டிருக்கும் தொடர்பானது பிள்ளையினுடைய ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகிறது. இச் செல்வாக்கானது அதனது ஆயுட்காலம் முழுவதும் நீடிக்கிறது. ஆயினும் சில பருவங்களில் குடும்பத்தின் செல்வாக்கானது மிகக் கூடுதலாக உள்ளது. ஒருவர் தனது வாழ்க்கைக் காலத்தில் கூடுதலான காலம் குடும்பத்தினருடன் வாழ்தல் இதற்குக் காரணம் ஆகும். பிள்ளைகளின் சில வகையான நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவர்களது வாழ்க்கைக் கோலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

**குடும்பம் சார்பாக மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பதனுள்**

குடும்பச் சனத்தொகை (பருமன்)
பிறப்பு வரிசை நிலை
வாழ்விடக் கலாசாரம்
பெற்றோர் கல்வி அறிவு
குடும்ப பொருளாதார நிலை
குடும்ப மனவெழுச்சிசார் நிலைமை
குடும்பத்தின் நவீன வசதிகள்
குடும்ப கலாசார நிலைமை
பரம்பரைக் காரணிகள்
குடும்ப அமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்ற பல்வேறு காரணிகள் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக செல்வாக்கினை செலுத்துகின்றன.

**குடும்பச் சனத்தொகை (பருமன்)**

குடும்பத்தின் பருமன்/சனத்தொகை என்பது பிள்ளை மீதான ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக உள்ளது. ஒரு பிள்ளை குடும்பத்தில் எத்தகையதாக இருக்கிறது அதனை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புக்களைப் பொறுத்து பிள்ளையின் ஆற்றல் வேறுபடுகின்றது. குடும்ப உறுப்பினர்களிடையே நிலவும் தொடர்புகள் வேறுபடுகின்றன. இடைத்தாக்கத்தின் அளவிலும் மாற்றங்கள் உண்டாகின்றன. உதாரணமாக மூன்று பேருள்ள குடும்பத்தில் தாய், தந்தை, பிள்ளை என்ற மும்முனைத் தொடர்பு அதிகரிக்கின்றது என ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டி உள்ளனர். அதிகரித்த சனத்தொகையுள்ள குடும்பத்தில் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் செல்வாக்கு குறையும். இது பிள்ளையின் ஆளுமை மீது தாக்கத்தினை செலுத்துகிறது.

குடும்பத்தின் பருமன் அதிகரிக்கும் போது பெற்றோரின் வேலைப்பழு அதிகரிக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அதிக வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். இதனால் பெற்றோர் பிள்ளைக்காக செலவு செய்யும் கால அளவு குறைக்கப்படும். குடும்ப உறுப்பினர்கள் பிள்ளையின் ஆற்றல்களையும், அடைவுகளையும் அங்கீகரித்து மதிக்கும் அளவினைப் பொறுத்தே பிள்ளையின் இயல்புகள் உறுதி செய்யப்படுகின்றன.

**பிறப்பு வரிசை நிலை**

ஒரு குடும்பத்தில் அதிகளவு பிள்ளைகளின் பிறப்பு வரிசை நிலை என்பனவும் பிள்ளையின் ஆளுமை, கல்வி வளர்ச்சி என்பனவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதிகளவிலான பிள்ளைகள் குடும்பத்தில் இருக்கும் பொழுது மூத்த பிள்ளைகள் சிறிய பிள்ளைகளின் பராமரிப்பு, வளர்ச்சி என்பனவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும் நிலையில் பாடசாலைக்கு செல்லமுடியாத தன்மையும், நேரத்தை பிள்ளைப் பராமரிப்புக்காக செலவு செய்யும் நிலைமையும் காணப்படும்.

**குடும்ப பொருளாதார நிலைமை**

குடும்பத்தின் பொருளாதார நிலைமை கல்வியின் மீது செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாகும். உலக நாடுகளில் வறிய நாடுகள் கல்வி அறிவில் குறைந்த நாடுகளாக இருப்பது போல வறிய குடும்பங்களும் கல்வியறிவில் குறைந்தனவாகவே உள்ளன. இதற்கு அவர்கள் பொருளாதார பின்னடைவு காரணமாக கல்வியில் அக்கறை காட்டாமை காரணமாகும்.

மிகவும் வறிய நிலையிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கான கற்றலை மேலோங்கச் செய்வதிலும் கற்றல் உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதிலும், மேற்பார்வை செய்வதிலும் அக்கறையற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் பிள்ளைகள் அடிப்படை கல்வியைப் பெற்றுக் கொள்வதில் கூட சிரமங்களை எதிர் கொள்கின்றனர். குறிப்பாக உயர்தரத்தில் கணித, விஞ்ஞான துறைகளைத் தெரிவு செய்பவர்களாகவும், சிறந்த பல்கலைக்கழக கல்வியை பெறுபவர்களாகவும் வசதியான குடும்பப் பிள்ளைகளே காணப்படுகின்றனர். அது மட்டுமன்றி அரசினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படும் கல்விக்கான நிதியினைப் பெருமளவு போசிப்பவர்களாகவும் இவர்களே காணப்படுகின்றனர். இது பொருளாதாரப் பின்னடைவு காரணமாக மாணவர் எதிர்கொள்ளும் பிரச்சினையாக உள்ளது.

**பெற்றோர் கல்வி அறிவு**

பெற்றோர் கல்வி அறிவு மட்டம் மாணவரின் கற்றலில் அதிகம் செல்வாக்கு செலுத்துகிறது. கல்வி கற்ற பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதில் அதிக அக்கறை செலுத்துகின்றனர். மாறாக கல்வி மட்டம் குறைந்த நிலையிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளையின் கல்வி தொடர்பாக பெரிதும் அக்கறை செலுத்தாதவர்களாகக் காணப்படுகின்றனர். கல்வி அறிவே இல்லாத பெற்றோர்கள் ஒருவர் கல்வி அறிவை பெற்றுக் கொள்வதால் ஏற்படும் நன்மைகளை, பேறுகளை உணர முடியாதவர்களாக இருப்பர். எனவே தனது பிள்ளைக்கு கல்வியை வழங்குவதில் அவர் அக்கறை கொள்ளமாட்டாதவராக இருப்பார். இதனால் குறித்த மாணவர் பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடிக்கு உள்ளாவார். மாறாக கல்வித் தரம் உயர்வான நிலையிலுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நிறைவான உயர்ந்த கல்வியை வழங்குவதில் மிகவும் கவனம் எடுப்பர் இது பிள்ளையின் கல்வியில் அதிக வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

**குடும்ப கலாசார நிலைமை**

குடும்பங்களின் கலாசார நிலைமையும் வாழ்விட கலாசார நிலைமையும் பிள்ளைகளின் கல்விக்கான வாய்ப்பில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. சில குடும்பங்களில் பழமை, கலாசார நிலைமை பெரிதும் பின்பற்றப்படும் போது அங்கு பிள்ளையின் கல்வி பாதிக்கப்டுகின்றது. சில கிராமப் புறங்களில் பெண்பிள்ளைகளை பூப்பெய்திய பின்னர் பாடசாலைக்கு விடாது மறிக்கப்படுகின்றனர். இதனால் பிள்ளை கல்வி வாய்ப்பினை இழந்து போகின்றது. மத ரீதியான காரணங்களினாலும் பிள்ளைகள் கல்வி தொடர்பாக பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். கலாசார தாக்கங்களுக்குட்படாத குடும்பப் பிள்ளைகளின் கல்வி நிலை உயர்ந்து செல்வதாகக் காணப்படுகின்றது.

அதேநேரம் வாழும் சூழல் சார்ந்த கலாசார நிலமைகளும் பிள்ளையின் கல்விக்கு தடையான காரணிகளாக அமைகிறது. உதாரணமாக கடற்கரையோரத்தில் வாழும் ஏழை மீனவப் பெற்றோர் ஒருவரின் பிள்ளை் கரைவலை இழுக்கும் காலத்தில் பாடசாலைக்கு செல்லாது விடுகிறான். இதனால் அவனது கல்வி பாதிக்கப்படுகிறது. அதேவேளை வசதியான சம்மாட்டியார் ஒருவரின் பிள்ளை வசதிபடைத்த பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோல் விவசாய பிரதேசக் குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் அறுவடை காலங்களில் அறுவடைக்கு செல்வதிலும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைக்கு செல்வதிலும் கல்விக்கான வாய்ப்பினை இழந்து போகின்றனர்.

**பரம்பரைக் காரணிகள்**

பரம்பரை சார்பான காரணிகள் குடும்பத்தின் மீத செல்வாக்குச் செலுத்தும் போது அவை பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக மந்தபுத்தி, பார்வைக்குறைபாடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டற் குறைபாடு போன்ற குறைபாடுகள் பரம்பரை காரணங்களால் அமைகின்றன. இக் குறைபாடுகள் மாணவர்களுக்கு காணப்படும். போது அவை கற்றலில் பாரியளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது அத்துடன் வாழ்நாளில் கற்பதற்கான வாய்ப்புக்களையே இழந்து போகும் நிலை மாணவர்களுக்கு ஏற்படும்.

**குடும்ப அமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள்**

குடும்ப அமைப்புக்களில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு சமூகத்தின் கல்வி, கலாசார செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெற்றோர் பிரிந்து வாழ்தல் அல்லது மறுமணம் புரிதல் சில சமூகங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. சில சமூகங்களில் இவை பொதுவானதாக அமையலாம். சில சமூகங்களில் பெண்கள் வெளியில் வேலைக்கு செல்லுதல் பொருத்தமாக கருதப்படுவதில்லை. இத்தகைய வேறுபாடுகள் பிள்ளைகளை பாதிக்கின்றன. பெற்றோர் ஒருவர் இல்லாத வேளையில் தாய் அல்லது தந்தை குடும்பத்தின் முழுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். உதாரணமாக வெளிநாடுகளுக்கு தாய் அல்லது தந்தை வேலைக்குச் செல்வதால் குடும்பங்களில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. இது பிள்ளையின் ஆளமை வளர்ச்சியிலும், கல்வி வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

பெற்றோர் பிரிந்து வாழும் பொழுது குடும்பத்தின் கவின்நிலை சீர்குலைக்கப்படுகின்றது. பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பு தாயிடமே விடப்படுகிறது. போதிய பாதுகாப்பும் வருமானமும் இல்லாத தாய்மார்கள் இதனால் பாதிப்படைவதுடன் பிள்ளைகளைச் சரிவரக் கவனிக்கமுடியாதும் போகிறது. இது பிள்ளையின் கற்றலுக்கு இடையூறாக காணப்படுகிறது.

எனவே குடும்பம், பெற்றோர் தமது வகிபங்கினை பிள்ளைகள் மீது சரியாக செய்யாத பொழுது பிள்ளையின் மனப்பாங்குகள், எண்ணகக்கருக்கள், சமூக மனப்பாங்குகள், கற்றலுக்கான வாய்ப்புக்கள் என்பன பாதிக்கப்படுகின்றன. குடும்பம் ஆரோக்கியமான சூழலில் அமையும் பொழுது பிள்ளையின் ஆளுமை விருத்தியும், கற்றல் செயற்பாடுகளும் வெற்றிகரமானவையாக மாற்றம் அடைகின்றன. எனவே பிள்ளைகயின் கற்றல் மேம்பாட்டுக்கு குடும்பத்தின் ஆரோக்கியமான சூழல் வழிவகுக்கும் என்பது முக்கியமான விடயமாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. சந்திரசேகரன், சோ(2013) *உயர்கல்விச் சந்தனையை வெனுஜனமாக்கல்,* கொழும்பு : சேமமடு பதிப்பகம்
2. சின்னத்தம்பி, மா (2015) *பாடசாலைக்கல்வி ஆற்றலும் சமூக நீதியும்,* கொழும்பு - சென்னை : குமரன் பதிப்பகம்.



**திருமதி.ஜீவரஞ்சினி விவேகானந்தராசா**

BA, PGDE, MED

**ஆசிரியை**

**கிளி/இராமநாதபுரம் ம.வி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்

இன்று மாணவர்களிடையே வாசிப்புப்பழக்கம் அருகி வருகின்றது. தோலைக்காட்சி பார்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். சில மாணவர்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட் போட்டிகளையும், திரைப்படங்களையும் பார்ப்பதற்காகப் பாடசாலைக்கே செல்லாது நின்றுவிடுகின்றனர் இதனால் அவர்களது கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது கற்க வேண்டிய நேரம் வீண்விரயமாகின்றது இதன் பேறாக அவர்களது கல்வித்தரமே குன்றுகின்றது மாணவர்கள் தமது பொழுதைப்போக்கத் தொலைக்காட்சியையெ நம்பியுள்ளனர் அதே வேளை நல்ல நண்பர்கள் எனக்கருதத்தகும் நூல்களை வாசிக்கத்தவறிவிடுகின்றனர். மிக அருமையாகவே ஒரு சில நூல்களை வாசிக்கின்றனர். வாசிப்புக்குச்செலவிடும் நேரம் மிககுறைவாகவே உள்ளது.

'நூல் பல கல்' என்றார் ஔவையார் எவ்வளவு நூல்களை நாம் வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு நமது அறிவு பெருகும் "கண்டதும் கற்பவன் பண்டிதனாவான்" என்பது நம் ஆன்றோர்வாக்கு ரஸ்கின் என்கிற ஆங்கில அறிஞர் புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது எனக்கூறுகின்றார். வேறு செல்வங்களை கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம் ஆனால் புத்தகங்கள் பொதுவாகக் களவாடப்படுவதில்லை. புத்தகங்களை வாசிப்பதால் ஒருவன் பெற்ற இன்பங்களை மற்றவர்கள் தட்டிப்பறித்துவிட முடியாது. வாசிக்கும் பழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை இருண்டதாகவே இருக்கும்.

வாசிப்பின் மூலம் அறிவு விருத்தியடைகின்றது. மேலதிக அறிவைப்பெற்றுக் கொள்ள முடிகின்றது. புதிய தகவல்களை தெரிந்து கொள்ளவும், கிரகித்துக் கொள்ளவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் முடிகின்றது. வாழ்வு வளம் பெற அறிவு தேவை. அறிவைப்பெருக்க நூல்களை வாசித்தல் அவசியமாகும். நூல்களை தேர்ந்தெடுத்துப் படித்தல் வேண்டும். அப்போது தான் நாம் விரும்பிய மன நிறைவைப் பெறமுடியும். வாசித்தல் சிறந்த ஒரு பொழுதுபோக்கு. மகிழ்வைத் தந்து அறிவைப்பெருக்க உதவுவன நூல்களேயாகும். மாணவர்இதனை மனதிற் கொள்ளுதல் அவசியமாகும்

***'கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு***
***புண்ணுடையர் கல்லாதவர்' - என்கிறார் வள்ளுவர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக் கண்ணினும் ஞானக்கண்ணே - அறிவுக்கண்ணே சிறந்தது என்பதை இக்குறள் நன்கு புலப்படுத்தப்படுகின்றது. கல்விப் பெருஞ் செல்வத்தை வழங்குவன நூல்களேயாகும். அவற்றை வாசிப்பது நம் கடமையாகும்.

"தொட்டனைத்தூறும்மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு" நூல்களை வாசிக்க வாசிக்கப் பற்றல அனுபவங்களைப் பெற்றிட முடியும். வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை நூல்கள் காட்டுகின்றன. அவற்றைப்படித்து. அதன்வழி ஒழுக நாம் பழகிக் கொள்ளல் வேண்டும். நூல்களை வாசிப்பதன் மூலமே நாம் பூரண மனிதராக மனிதத் தன்மையுடையோராக மாண்புடன் வாழமுடியும் என்பதை உள்ளத்திற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**நூல் பலகற்போம்! நுண்ணறிவு பெறுவோம்**

**ப.மதுசா**
**கலைப்பிரிவு (2019)**

## சிந்தனைக்கு சில

*பிடிக்கவில்லை எனில்*
*நண்பனுக்கு எதிரியாய் கூட*
*இருந்து விடு ஆனால்*
*துரோகியாய் ஒரு நொடி கூட*
*மாறிவிடாதே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை பற்றிய பொது விடயங்கள்

இலங்கையின் முதல் மன்னன் - பண்டுகாபயன்

இலங்கையின் கடைசி மன்னன் - ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்

இலங்கையின் முதல் குளம் - வசவக்குளம்

இலங்கையில் முதல் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு -1857

இலங்கை சுதந்திரம் அடைந்த தினம் - 04.02.1948

இலங்கையின் குடியரசு தினம் - 22.05.1972

இலங்கை அரசின் பெயர் - சோசாலிஷ ஜனநாயக குடியரசு

இலங்கையின் முதல் பெண் பிரதமர் - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

இலங்கையின் முதல் பிரதமர் - D.S சேனநாயக்க

தேவநம்பிய தீசமன்னன் காலத்தில் பரவிய சமயம் - பௌத்தம்

இலங்கைக்கு அரச இலச்சனையைக் கொண்டு வந்தவர் - சங்கமித்தை

இலங்கையில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலமரம் - தெனிபிட்டிய

இலங்கையில் நுகர்வோரின் தரத்தை உறுதிப்படுத்தும் இலச்சினை - S.L.S

இலங்கையின் மிக நீளமான நதி - மகாவலிகங்கை

இலங்கையில் மிக உயரமான மலை - பேதுறுதாலகால மலை

இலங்கையில் மிக உயரமான குன்று - கொக்காகல்

இலங்கையில் மிகப் பெரிய பூங்கா - பேராதனை

இலங்கையில் மிகப் பெரிய தீவு - நெடுந்தீவு

இலங்கையில் பெருந் தெரு - A 13 (கொழும்பு, இரத்னபுரி, மட்டகளப்பு)

இலங்கையில் கூடிய வெப்பநிலை பெறும் இடம் - திருகோணமலை

இலங்கையில் குறைந்த வெப்பநிலை பெறும் இடம் - நுவரெலியா

இலங்கையில் மிகப் பெரிய சமவெளி - ஹட்டன்

இலங்கையில் பிரசித்தி பெற்ற இயற்கை வனம் - சிங்கராஜவனம்

இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி - பம்பரகந்த

இலங்கையில் மிக உயரமான மேட்டு நிலம் - ஹட்டன்

இலங்கையில் மிக உயரமான அணைக்கட்டு - விக்டோரியா

இலங்கையில் மிக பெரிய குளம் - சேனநாயக்க சமுத்திரம்

இலங்கையில் மிக நீளமான கடல் பாதை - வேலணை, புங்குடுதீவு

இலங்கையில் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைப்பது - வட்டவளை

இலங்கையில் குறைந்தளவு மழைவீழ்ச்சி கிடைப்பது - மறுசுக்கட்டி

இலங்கையின் தேசிய பறவை - காட்டுக் கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தேசிய மரம் - நாக மரம்

இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம்

இலங்கையின் தேசிய விலங்கு - மரஅணில்

சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்னர் திறக்கப்பட்ட பெருந்தெரு - A9

சுதொச என்பதன் விரிவு - இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை

மகாவலிகங்கை இறுதியாக ஓடி முடிவது - கொட்டியாரக்குடா

இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடான ஆண்டு - *1802*

இலங்கைக்கு சரவஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு - *1931*

இலங்கையில் ஒலிபரப்பு சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - *1925*

ரூபா சதக்குற்றி பழக்கத்தில் வந்த ஆண்டு - *1872*

தாள் நாணயங்கள் புழக்கத்தில் வந்த ஆண்டு - *1885*

இலங்கையின் தேசிய மாணிக்கம் - நீல மாணிக்கம்

இலங்கைக்கு வடக்கே இருக்கின்ற நாடு - இந்தியா

இலங்கைக்கு கிழக்கே இருக்கின்ற நாடு - மலேசியா

இலங்கையில் தாவரவியல் பூங்கா அமைந்தள்ள இடம் - பேராதனை

இலங்கையில் குளிர் கூடிய பிரதேசம் - கந்தப்பளை

இலங்கையில் அதிகம் பினபற்றும் சமயம் - பௌத்தம்

இலங்கையில் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது - மக்களால்

அரசாங்கத்துடன் தொடர்புக்கு அழைக்கவேண்டிய இலக்கம் - *1919*

இலங்கையில் எல்லா மதத்தவருக்குமான வணக்கத்தலம் - சிவனொளிபாத மலை

பௌத்த சமயத்தின் புனித மரம் - வெள்ளரசு

இலங்கையில் புகழ் பூத்த சுவர் ஓவியம் - சிகிரியா

இலங்கையின் பறவைகள் சரணாலயம் - குமண

**தொகுப்பு**
**அன்ரன் கிறிஸ்ரினா**
**கலைப்பிரிவு [2021]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வியக்க வைக்கும் தகவல்கள்

* நான்கு வயது குழந்தை ஒரு நாளைக்கு சுமார் 400 கேள்விகள் கேட்கும்.
* குதிரைகள் விரல் நுனிகளில் அழுத்தம் கொடுத்தே ஓடுகின்றன.
* கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு இதயமாகும்.
* மனிதன் இறந்து போனதும் முதலில் செயலிழக்கும் உறுப்பு இதயம்.
* அமெரிக்காவைவிட சகாரா பாலைவனம் பெரியது.
* உலகிலேயே அதிக மொழிகள் பேசப்படும் நாடு இந்தியா.
* உலகிலேயே மிகவும் சிறியமரம் குட்டை வில்லோ மரம் அதன் உயரம் 2 அங்குலம்.
* ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண்சிங்கம் சாப்பிடும்.
* நாம் இறந்த பிறகும் கண்கள் 6 மணிநேரம் பார்க்கும் தன்மை உடையது.
* பிறந்து 6-8 வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது.
* எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்.
* நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.
* எப்போதும் காற்றுவீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் மிருகம் நாய்.
* தரையிலே முதுகு படும்படி உறங்கும் ஒரே உயிரினம் மனிதன்.
* இறாலுக்கு இதயம் தலையில் இருக்கின்றது.
* பாம்புக்கு கேட்கும் சக்தி கிடையாது.
* மனிதனுக்கு உடல் முழுவதும் வியர்க்கும். நாய்க்கு நாக்கு மட்டுமே வியர்க்கும்.
* வெள்ளை என்பது ஒருநிறம் இல்லை. அது ஏழு வர்ணங்களின் கலவை.
* தேன்சிட்டு, மரங்கொத்தி போன்ற பறவைகளுக்கு நடக்கத் தெரியாது.
* உலகப்புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம் இடது கையினால் வரையப்பட்டது.
* நீலத் திமிங்கிலத்தின் எடை 22 யானைகளின் எடைக்கு சமம்.
* வானில் பறக்கும் எந்தவொரு பயணிகள் விமானமும் மின்னலால் பாதிக்கப்பட முடியாது. ஏனெனில் ஒரு மின்னல் தாக்குதலைத் தாக்குப்பிடிக்கும் விதத்தில் தான் விமானங்கள் வடிவமைக்கப்படுகின்றன.
* உலகிலேயே ஏன் பிரபஞ்சத்தில் உள்ள உயிரினங்களிலேயே மனித மூளைதான் மிகவும் புத்திக்கூர்மை உடையது.

**தொகுப்பு**
**செல்வி.பு.கஜலக்ஷ்மி**
**2019 [கலை]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் (உற்பத்தி, ஆராய்ச்சி)

- முகமூடி - அம்பலாங்கொடை
- சீனிதொழிற்சாலை - கந்தளாய், இங்குரான, பெல்வத்தை
- கடதாசித் தொழிற்சாலை - வாழைச்சேனை, எம்பிலியாப்பிட்டிய
- சீமெந்து தொழிற்சாலை - காங்கேசன்துறை, புத்தளம், காலி
- தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கொல
- பிரதேச தேயிலை ஆராய்ச்சி நிலையம் - கலகம்பொல
- இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
- தென்னை ஆராய்ச்சி நிலையம் - லுனுவில
- சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல, கன்னுருறு
- உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரெலியா
- ஆயள்வேத ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன
- விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பலம
- பருத்தி ஆராய்ச்சி நிலையம் - அம்பாந்தோட்டை
- நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பலம், பத்தலகொட
- அரசினர் சுதேச வைத்தியக் கல்லூரி - பொரளை
- தொழுநோய் வைத்தியசாலை - மாந்தீவு (மட்டக்களப்பு)
- கட்டிப்பால் உற்பத்தி - பொலனறுவை
- பாற்பவுடர் உற்பத்தி - வெலிசற
- இறப்பர் பால் உற்பத்தி - மாவனல்ல
- மட்பாண்டம் உற்பத்தி - ரத்தோட்ட, தக்கொட்டவ

**அ.கிறிஸ்ரினா**
**கலைப்பிரிவு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் மொழியின் சிறப்புக்கள்

உலகிலே காணப்படுகின்ற மொழிகளில் தமிழ்மொழியும் சிறப்பு மிக்கதோர் மொழியாகும். இதனை இனிய தமிழ், கன்னித் தமிழ், செந்தமிழ், எனப் பலவாறு அழைப்பர். தமிழ்மொழியின் சிறப்புக்களை உணர்ந்து இதனைக் கற்றுத் தேர்ந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு இலக்கியங்களைப் படைத்தவர் ஏராளம் பேர். அவர்களுள் நக்கீரர், திருவள்ளுவர், கபிலர், கம்பர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத்தமிழ் என்று சங்கேமுழங்கு." என்று பாரதிதாசனும் "காப்பிலாத்தமிழர் நெஞ்சில் வாழும் மூப்பிலாத்தமிழ்" என்று பாரதியும் "சாகில் தமிழ் படித்து சாகவேண்டும் என சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" என்று பருத்தித்துறை சச்சிதானந்தப் புலவரும் தமிழ்மொழியின் சிறப்புக்களை இவ்வுலகிற்கு எடுத்தியம்பியுள்ளனர். உலகப்பொதுமறையாகிய திருக்குறளை தமிழ்மொழி மூலம் தந்து எம்மொழியை உலகிற்கு அறியச் செய்தவன் வள்ளுவன். இதனால் தான் வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று தமிழ்நாட்டை கூறுவார்கள்.

பேசுவதற்கு எளிமையையும் சொல்லும் போது இனிமையையும் இலகுவான எழுத்துக்களையும் கொண்டது எம் தமிழ் மொழியாகும். இதனால் தான் எம்மொழியாம் தமிழ் மொழியை செம்மொழி என்று கூறுவார்கள். உலக அரங்கத்திலே இன்றும் தமிழ்மொழியை வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் தமிழர்கள் செய்த சாதனை ஏராளம். பூச்சியம் என்ற இலக்கத்தைக் கண்டுபிடித்த இராமமணியனும் ஒரு தமிழன் ஆவார். அக்னி ஏவுகணையை விண்ணிற்கு அனுப்பிய அப்துல்கலாமும் ஒரு தமிழன் ஆவார். மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி எனும் ஐம்பெருங்காப்பியங்களைப் படைத்த மொழியும் தமிழ்மொழியாகும். உலக மொழிகள் பலவற்றிற்கு எழுத்து, சொல், யாப்பு, அணி, ஆகியன உண்டு. ஆனால் தமிழ் மொழிக்கு மட்டும் தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால் தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர். பொருளிலக்கணம் பிறந்த முறையினை இறையனார் அகப்பொருள் எனும் நூல் வழி அறியலாம். மேலும் அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் பகுத்துத் தந்தது தமிழ் ஆகும்.

அக்கால மக்கள் வீரவாழ்க்கையையும் கொடைச்சிறப்பையும் கொண்டிருந்தனர் என்பதற்கச் சான்றாகத் திகழ்வது எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமாகும். பிற மொழிகளில் இல்லாத அளவுக்கு தமிழ் மொழியிலே மலையளவு அற நூல்கள் உள்ளன. ஆழ்ந்து அகன்று தேடினாலும் திருக்குறள் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு மொழிகளில் அறநூல் உண்டோ? தமிழ் மொழியை ""இனிமையும் நீர்மையம் தமிழெனவாகும்" என பிங்கலந்த எனும் நிகண்டு நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துக்களின் ஒலிகள் மிக இயற்கையாக எளிமையாக அமைந்திருப்பதால் எவ்வித இடர்பாடுகளுமின்றி ஒலிகளை ஒலிக்க இயலும். தமிழைப் பேசும்போது குறைந்தளவு காற்றே வெளியேறுகிறது. அதாவது சமஸ்கிருத மொழியைப் பேசும்போது அதிகமான காற்றே வெளியேறுகிறது. இவ்வாறு அதிகமான காற்று வெளியேறுவதால் உடல் உறுப்புக்களுக்கு அதிகதேய்மானம் ஏற்படுவதாக மொழியியலாளர் கூறுகின்றார். இதனைச் சோதனையாக சமஸ்கிருத மொழியை கற்கும்போது அனுபவித்து உணர்ந்தவர்கள் மறைமலையடிகள் ஆவார்.

மனதை நெகிழ்வித்து உருக்குவதற்கு தேனூறும் தேவார, திருவாசகம் தமிழில் வைரமாக ஒளிர்கின்றன. வேற்று மொழிகளில் இல்லாத அளவிற்கு தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கிய இலக்கண நூல்கள் தமிழுக்கு வளம் சேர்த்திருக்கின்றன. இன்றைய உலகமொழியாக ஆங்கிலத்தை கி.பி.14ம் நூற்றாண்டில் தான் இலக்கியங்கள் தோன்றி இலக்கிய வளம் ஏற்பட்டது. இன்றைய காலமாற்றத்திற்கு ஏற்ப புத்தம் புது மொழிகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவ்வாறு தோன்றி மறையும் மொழிகளுக்கிடையில் மிகப்பழங்காலத்திலேயே தோன்றி செல்வாக்குடன் வளர்ந்து இன்றளவும் வாழ்ந்து கொண்டிருக்கும் மொழியே எம் தமிழ்மொழியாகும். எனவே தமிழ் மொழியின் சிறப்புக்களை வார்த்தைகளுக்குள் கொண்டு வந்துவிட முடியாது. உலகம் நிலைத்திருக்கும் காலம் வரைக்கும் தமிழ்மொழி என்றும் நிலைத்து இருக்கும்.

**இ.கிருஸ்சிகா**
**கலைப்பிரிவு (2021)**

## சிந்தனைக்கு சில

*உன்னைக் குறை*
*கூறும் பலருக்கு*
*உத்தமனாக*
*வாழ்வதை விட*
*உன்னை நம்பும்*
*சிலருக்கு நல்லவனாய் இரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை ஆற்றுப்படை

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு முதன் முறையாக வருபவர்களில் அநேகர் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள இலங்கை இதுதானா? என்று கேட்பதுமுண்டு. இராமாயணத்தைப் பற்றி அறியாதவர்கள் இல்லையென்றே சொல்லலாம். அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள். பண்டிதராயினும் சரி பாமரராயினும் சரி, இலங்கையுடன் இராமாயணத்தை சேர்த்து நினைப்பது இயற்கையாகும்.

இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கையுடையோரும் இக் காலத்தில் உளர். இவர்கள் இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கையை ஒரு கற்பனை நாடாக கருதுவர். இராமாயணத்தைப் பற்றி ஜெர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி ( Jacobi) என்பவர், சீதை என்ற சொல் உழவுசால் எனப் பொருள்படுமாதலில், இராமாயணம் உழவுத் தொழிலை உருவகப்படுத்துவதற்கு எழுந்த காவியம் என்று கூறினர். வேறுசில ஆராய்ச்சியாளர்கள் வடஇந்தியாவிலிருந்த ஆரியர் விந்திய மலைக்கு தெற்கே பரவிய வரலாற்றை இராமயணம் விளக்குகின்றது என்று கொள்வார்.

ஆராய்ச்சியாளர்களில் ஒருசாரார், இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்கை, இந்தியாவிற்கப்பால் ஜாவா, சுமாத்ரா பிரதேசம் என்பர். வேறு சிலர் சர்தார் கீபே(kibe) என்பவரைப் பின்பற்றி இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் இலங்கை இருந்ததாக கூறுவர். இந்த இரண்டு கொள்கைகளும் பொருத்தமற்றனவாகத் தோன்றுகின்றன. சாவகத்தீவு என்று தமிழிலக்கியம் கூறும் ஜாவா முற்காலத்தில் ஜவத் வீபம் என்று வடமொழியில் வழங்கியது. வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத் வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாகவே காட்டியுள்ளார்.

இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற தீவே பல நூற்றாண்டுகளாக இப்பெயருடன் விளங்கி வருகின்றது. இன்றைக்கு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் இலங்கை என்றே விளங்கப்படுவது தமிழறிஞர்கள் அறிந்ததாகும். இலங்கையின் மலைப்பிரதேசத்திலே அசுரர்களின் தலைநகரமாகிய இலங்கை இருந்ததென்றும் குறிப்பிடப்படுகிறது. "திரிகூடபர்வதம்" என்கின்ற மலையின் உச்சியில் விளங்கிய லங்காபுரியை இராவணன் தனது தலை நகரமாகக் கொண்டிருந்தான்" என்று இராமாயணம் கூறுவது நினைவுகொள்ளத்தக்கது. வீரபாண்டியன் இலங்கையை வென்ற செய்தியை வீரபாண்டியன் தன் சாசனத்திற் கூறும் போது தனது வெற்றியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாகப் பாண்டிய அரசின் மீன் இலட்சினையை இலங்கையின் திருகோணமலையிலும் திரிகூட பர்வதத்திலும் பொறித்ததாக விபரிக்கின்றான். இலங்கைக்கு அப்பாலுள்ள புதுக்கோட்டையிற் கிடைத்த இச் சாசனத்தின் ஒருபகுதி மற்றும் உண்மையான செய்தியாகும் என்பதற்கு இப்பொழுதும் இலங்கையிற் சான்று இருக்கின்றது. திருகோணமலையிலுள்ள கோட்டை வாசலில் இன்றும் இரட்டைமீன் இலட்சினை விளங்குவதைக் காணலாம். போர்த்துக்கேயர் திருகோணமலையில் இருந்த சிவாலயத்தை தகர்த்த போதிலும் பாண்டிய இலட்சினைக் கல்வெட்டு அவர்களது கொடிய செயலினின்று தப்பி, இன்றும் சிதைவு பெறாமல் இருப்பது பெரிய விந்தையே. வீரபாண்டியன் திருகோணமலையில் மீன் இலட்சினை பொறித்தது உண்மையாயின் ,அவன் சாசனத்திற் கூறியவாறு திரிகூடபர்வதத்திலும் அவ் இலட்சினையைப் பொறித்திருக்க வேண்டும். அவன் கூறும் திரிகூடபர்வதம் இலங்கையில் எப்பாகத்தில் உள்ளது? இதை நாம் அறிந்தால் , இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந் நாடுதான் என்று அறுதியிட்டுத் தீர்மானிக்கலாம்.

திரிகூடபர்வதத்தின் உச்சியில் இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி விளங்கிற்றென்றும், இந் நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்பதுபோல் ஹனுமானுக்குத் தோன்றிய தென்றும் இராமயணம் கூறும். திரிகூடபர்வதத்தின் மூன்று பக்கங்களே இந்நகருக்கு இயற்கை மதில்களாக அமைந்திருந்தன. இக்காரணத்தால் இலங்காபுரியை பகைவர்கள் எவரும் அணுக முடியாததென்று இராவணன் இறுமாந்திருந்தது வியப்பன்று. இப்பிரதேசத்தில் இப்போதுள்ள பண்டாரவளவலா, தியத்தலாவ போன்ற நகரங்களாகும். இரவில் ஆகாயத்தில் மிதப்பது போன்று அழகிய காட்சியைத் தருகின்றன. இராமருடைய சேனை தென்சமுத்திரத்தின் கரையோரமாக வருவதை இராவணன் தன் தலைநகரில் இருந்து பார்த்தான் என்று கூறுவது இப்பிரதேசத்தின் அமைப்பிற்கு பொருத்தமாகவே உள்ளது. தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேஸ்வரத்தில் இராமர் சிவபெருமானை வழிபட்டார் என்ற ஐதிகம் பன்னெடுங்காலமாகப் பிரதக்கணடம் முற்றிலும் வழங்கி வருகின்றது. கி.பிஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இந்த ஐதிகத்தை இராமேசுவரப் பதிகத்திற் குறிப்பிட்டுள்ளார்கள்.

"சேது" என்ற பெயர் பிரசித்தமானது. இச் சொல் அணையைக் குறிக்கும். தனுஷ் கோடியினின்று இராமரின் சேனை கடலைக்கடந்து இலங்கை செல்வதற்கு அணையைக் கட்டியதாகச் சொல்லப்படுவதால் தனுஷ் கோடிக்கு இப்பெயர் பழமையான காலம் தொட்டு வழங்கி வருகின்றது. இவ்வணைக்குச் சான்றுகளாக இப்பொழுதும் இவ்விடத்தினின்று இலங்கையைச் சேர்ந்த மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுக்கரையில் மணல் திட்டுக்களால் ஆன ஒருதொடர் முப்பதுமைல் தூரம் கடலிற் காணப்படுகின்றது.

மேற்கூறிய மணற்திட்டுக்கள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக்கரைதான் வான்மீகி முனிவர் மகேந்திரது வாரம் எனக் கூறினரென்று யூகிக்க இடமுண்டு. கன்னியாகுமாரியின் பக்கத்தில் மகேந்திரம் என்ற பெயருடன் ஒருமலை இப்பொழுதும் உள்ளது. சேது நாட்டிலுள்ள திருவுத்தர கோச மங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற திருவிளையாடல் ஐதிகத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

*"மன்னு மாமலை மகேந்திரமதனில்*
*சொன்ன அகமம் தோற்று வித்தருளியும்....."*

என்று குறிப்பிடுவதால், மகேந்திரம் சேது நாட்டில் உள்ளது என்பது தெளிவாகிறது.

இதுவரை காட்டிய உதாரணங்கள் மூலம் இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந்நாடே இராமயணத்தில் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம்.

**ச.குகதாரணி**
**தரம் - 13 [2020]**

**சிந்தனைக்கு சில**

முதியோர் இல்லத்திற்கு
பணம் கொடு
பொருள் கொடு
உணவு கொடு
உன் பெற்றோரை மட்டும்
கொடுத்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிகாட்டி

"சேர்!சேர்!" வைஷாலியின் குரல் கணித விஞ்ஞான அறையின் அமைதியை குலைத்தது. அது ஒரு இடைவேளை நேரம். அந்நேரங்களில் மட்டும் தான் அங்கே அமைதி பேணப்படும் மற்றைய நேரங்களிலெல்லாம் "அமைதி பேணவும்" என்ற பெயர்ப்பலகை மட்டும் தான் அமைதியாய் இருக்கும் வைஷாலி தரம் 11இல் படிக்கும் திறமையான மாணவி. ஆசிரியர் நிமிர்ந்து பார்த்தார்.

"சேர்! உங்களுடன் கொஞ்சம் கதைக்கலாமா?" வைஷாலி தொடர்ந்தாள். ஐந்தாம் பாடவேளை 11ம் வகுப்பிற்கென்று ஞாபகம் இருக்கின்றது. வைஷாலி ஏதும் சந்தேகம் கேட்க வந்திருப்பாளோ என்ற மனவோட்டம் சென்றது ஆசிரியருக்கு.

ஆசிரியர் இந்தப் பாடசாலைக்கு வந்து சில மாதங்களே ஆகின்றன. இவர் ஒரு இளமையான ஆசிரியர். பாடங்கள் கற்பிப்பதிலும் மாணவர்களை ஈர்ப்பதிலும் கவர்ச்சியும் கொண்டிருந்தார். இவர் பாடசாலைக்கு வரும்போது அழகான புன்னகையுடன் வருவார். மாணவர்கள் அவரிடம் சென்று "காலை வணக்கம்" சொல்லாத நாளேயில்லை எனலாம். தேவையான இடத்தில் அதட்டலும் அரவணைப்பும் வழங்குவதில் அவருக்கு நிகர் அவரே எனலாம். அதே மென்மையான பார்வையுடன் "சொல்லுங்கம்மா!. ஏன்ன கதைக்கணும்?'' வைஷாலி இல்லசார்! உங்களிடம் நிறைய நாள் ஒன்று சொல்ல நினக்கிறன் அதத்தான் சொல்ல வந்தேன்! சேர்.." தடுமாறினாள். சிவபாலன் ஆசிரியரின் முகம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

என்னம்மா ஒன்றும் விளங்கேல.. என்றவாறு இடைத்தவணைப் பரீட்சையின் திருத்திய விடைத்தாள்களை மூடிவைத்தார். "சேர்!சேர்! உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு சேர்!" என்றவாறு தலையைக் குனிந்தாள் வைஷாலி. "உள்ளே வாங்கம்மா!." என்றவாறே கதிரையில் இருந்து எழுந்தார் சிவபாலன் ஆசிரியர். "சேர்!சேர்!" வைஷாலியின் அதேகுரல் சிவபாலன் சேரின் வேலையைக் குழப்பியது. பதினைந்து வருடங்களுக்குப் பிறகு சிவபாலன் ஆசிரியர் அதே பாடசாலையின் அதிபர்.

வைஷாலிக்கு ஒரு மகனும் ஒரு மகளும். வைஷாலி தனது முதலாவது மகளை தரம் 1 இல் சேர்ப்பதற்கே இன்று வந்துள்ளாள். "சொல்லுங்க.." அதிபர் சிவபாலன் அதே மென்மையான குரல். "சேர் என்னை ஞாபகம் இருக்கா?" வைசாலி ஆர்வத்துடன் கேட்டாள். அதிபர் சிவபாலன் தயக்கத்துடன் யோசித்தார் "என் பெயர் வைசாலி 2004 இல் இதே பாடசாலையில் தரம் 11 இல் உங்களிடம் கணிதம் படிச்சன் சேர்.." ஆர்வத்துடன் உரைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுக்கரையில் மணல் திட்டுக்களால் ஆன ஒருதொடர் முப்பதுமைல் தூரம் கடலிற் காணப்படுகின்றது.

மேற்கூறிய மணற்திட்டுக்கள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக்கரைதான் வான்மீகி முனிவர் மகேந்திரது வாரம் எனக் கூறினரென்று யூகிக்க இடமுண்டு. கன்னியாகுமாரியின் பக்கத்தில் மகேந்திரம் என்ற பெயருடன் ஒருமலை இப்பொழுதும் உள்ளது. சேது நாட்டிலுள்ள திருவுத்தர கோச மங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற திருவிளையாடல் ஐதிகத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

*"மன்னு மாமலை மகேந்திரமதனில்*

*சொன்ன அகமம் தோற்று வித்தருளியும்....."*

என்று குறிப்பிடுவதால், மகேந்திரம் சேது நாட்டில் உள்ளது என்பது தெளிவாகிறது.

இதுவரை காட்டிய உதாரணங்கள் மூலம் இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந்நாடே இராமயணத்தில் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம்.

ச.குகதாரணி
தரம் - 13 (2020)

**சிந்தனைக்கு சில**

முதியோர் இல்லத்திற்கு
பணம் கொடு
பொருள் கொடு
உணவு கொடு
உன் பெற்றோரை மட்டும்
கொடுத்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வழிகாட்டி

"சேர்!சேர்!" வைஷாலியின் குரல் கணித விஞ்ஞான அறையின் அமைதியை குலைத்தது. அது ஒரு இடைவேளை நேரம். அந்நேரங்களில் மட்டும் தான் அங்கே அமைதி பேணப்படும் மற்றைய நேரங்களிலெல்லாம் "அமைதி பேணவும்" என்ற பெயர்ப்பலகை மட்டும் தான் அமைதியாய் இருக்கும் வைஷாலி தரம் 11இல் படிக்கும் திறமையான மாணவி. ஆசிரியர் நிமிர்ந்து பார்த்தார்.

"சேர்! உங்களுடன் கொஞ்சம் கதைக்கலாமா?" வைஷாலி தொடர்ந்தாள். ஐந்தாம் பாடவேளை 11ம் வகுப்பிற்கென்று ஞாபகம் இருக்கின்றது. வைஷாலி ஏதும் சந்தேகம் கேட்க வந்திருப்பாளோ என்ற மனவோட்டம் சென்றது ஆசிரியருக்கு.

ஆசிரியர் இந்தப் பாடசாலைக்கு வந்து சில மாதங்களே ஆகின்றன. இவர் ஒரு இளமையான ஆசிரியர். பாடங்கள் கற்பிப்பதிலும் மாணவர்களை ஈர்ப்பதிலும் கவர்ச்சியும் கொண்டிருந்தார். இவர் பாடசாலைக்கு வரும்போது அழகான புன்னகையுடன் வருவார். மாணவர்கள் அவரிடம் சென்று "காலை வணக்கம்" சொல்லாத நாளேயில்லை எனலாம். தேவையான இடத்தில் அதட்டலும் அரவணைப்பும் வழங்குவதில் அவருக்கு நிகர் அவரே எனலாம். அதே மென்மையான பார்வையுடன் "சொல்லுங்கம்மா!. ஏன்ன கதைக்கணும்?" வைஷாலி இல்லசார்! உங்களிடம் நிறைய நாள் ஒன்று சொல்ல நினக்கிறன் அதத்தான் சொல்ல வந்தேன்! சேர்.." தடுமாறினாள். சிவபாலன் ஆசிரியரின் முகம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

என்னம்மா ஒன்றும் விளங்கேல.. என்றவாறு இடைத்தவணைப் பரீட்சையின் திருத்திய விடைத்தாள்களை மூடிவைத்தார். "சேர்!சேர்! உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு சேர்!" என்றவாறு தலையைக் குனிந்தாள் வைஷாலி. "உள்ளே வாங்கம்மா!." என்றவாறே கதிரையில் இருந்து எழுந்தார் சிவபாலன் ஆசிரியர். "சேர்!சேர்!" வைஷாலியின் அதேகுரல் சிவபாலன் சேரின் வேலையைக் குழப்பியது. பதினைந்து வருடங்களுக்குப் பிறகு சிவபாலன் ஆசிரியர் அதே பாடசாலையின் அதிபர்.

வைஷாலிக்கு ஒரு மகனும் ஒரு மகளும். வைஷாலி தனது முதலாவது மகளை தரம் 1 இல் சேர்ப்பதற்கே இன்று வந்துள்ளாள். "சொல்லுங்க.." அதிபர் சிவபாலன் அதே மென்மையான குரல். "சேர் என்னை ஞாபகம் இருக்கா?" வைசாலி ஆர்வத்துடன் கேட்டாள். அதிபர் சிவபாலன் தயக்கத்துடன் யோசித்தார் "என் பெயர் வைசாலி 2004 இல் இதே பாடசாலையில் தரம் 11 இல் உங்களிடம் கணிதம் படிச்சன் சேர்.." ஆர்வத்துடன் உரைத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்..ம் தெரியும் எப்படி இருக்கீங்க? தரம் 11 இற்கு பின்பு வேறு பாடசாலைக்கு உயர்தரம் படிக்கப் போய்ட்டீங்கதானே, உங்களை காணவேயில்ல! அதிபர் என்ற அகந்தையின்றி சாதாரணமாக கூறினார். "ஓம் சேர்.. நாங்கெகொஞ்சப் பேர் போனோம்.. ஆனால் நீங்கபடிப்பிச்சத மறக்கவேயில்ல சேர்!" அதிபர் சிவபாலன் புன்னகைத்தார். "சேர்.. தரம் 11இல் படிக்கும் போது ஒருநாள் யாருமேயில்லாத நேரத்தில் உங்களிடம் விருப்பத்தை தெரிவித்தேன். வேறுயாருமாயிருந்தால் என்னை தப்பாக பயன்படுத்தியிருப்பாங்க ஏனென்றால் என்னையே நான் இழக்கும் தருணத்தில் இருந்தேன். ஆனால் நீங்க எனக்கு நல்ல புத்திமதிகள் சொல்லி என்னை வழி நடத்தினீர்கள். அதை என்னாலே மறக்க முடியலே சேர் இப்ப கூட..."

நாங்க ஆசிரியர்கள். உங்களை வழி நடத்ததான் நாங்க இருக்கிறோம்! நாங்க உங்க வாழ்க்கையில் பாதகமான எந்தவொரு நிலைக்கும் காரணமாயிருக்கமாட்டோம். அமைதியாகத் தொடர்ந்தார் அதிபர் சிவபாலன். வேறுயாருமாயிருந்தால் பள்ளிக்கூடம் முழுக்க தம்பட்டம் அடிச்சு என்னை அவமானப்படுத்தியிருப்பாங்க. இல்லாட்டி பெற்றோரை கூப்பிட்டு அதட்டி என்னை அழவைச்சிருப்பாங்க. ஆனால் நீங்க கல்வியின் தேவையினை வாழ்க்கையின் உண்மை நிலையை விளக்கி எனக்குதந்த அறிவுரைதான் சேர்.. இப்பநான் ஒர்நல்ல அரசாங்க வேலையிலும் அழகான குடும்பத்துடனும் இருக்ககாரணம்" கண்ணீர் துளிகள் வைஷாலியின் கன்னத்தை நனைத்து விட்டன.

என்னம்மா! .இதெல்லாம்! நாங்கள் எப்பவுமே உங்களுக்கு ஆசிரியர்கள். நீங்கள் எவ்வளவு பெரிய உத்தியோகம் சென்றாலும் நாங்கள் ஆசிரியர் என்ற கண்ணியத்துடனே இருப்போம் இதுவே எமது வேலை உங்களுக்கு இன்னொரு பெற்றோராகவும் வழிகாட்டியாகவும் இருப்பது தான் எமது கடமை. அதைத்தான் நானும் செய்கிறேன் வேறு ஒன்றும் புதிதாக நான் செய்யவில்லை பிள்ளை. அதிபர் உண்மையை சென்னார்.

சரிம்மா நீங்க போயிட்டு வாங்க, பிறகு ஒரு நாள் சந்திப்போம் விடைகொடுத்தார் அதிபர். ஆசிரியர்கள் நமக்கு இன்னொரு பெற்றோர், துணையானவர்கள். அவர்கள் நம்மை வழி நடாத்த வந்த வழிகாட்டிகளும் ஆவார்கள். தானும் தனது மகளை நன்றாக கற்பித்து, நல்லாசானாக உருவாக்கி, உலகில் பலருக்கு வழிகாட்டியாக திகழச் செய்ய வேண்டுமென்ற திடசங்கற்பத்துடன் வைஷாலி பாடசாலை வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள்.

**குகநாதன் குணதீபன்**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவம் காத்தநாயன்மார்

நாயன்மார் என்போர் பெரியபுராணம் குறிப்பிடும் சைவ அடியார்கள் ஆவர். இவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் அறுபத்து மூவர் பெரியபுராணம் எனும் பெருங்காப்பியத்தை எமக்களித்த சேக்கிழார் சுவாமிகள் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டர் தொகையை முதன் நூலாகவும் நம்புயாண்டர் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு பெரிய புராணத்தில் ஒவ்வொரு அடியார்களதும் அருட்செயல்களையும் அற்புதங்களையும் பக்திச்சுவையோடு தனித்தனி வாழ்க்கை வரலாறாக எடுத்துரைத்தார் திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் குறிப்பிடும் நாயன்மார் எண்ணிக்கை அறுபதாகும். சேக்கிழார் அதனோடு சுந்தரமூர்த்தி நாயனாரையும் அவரது தாய் இசைஞானியாரையும் தந்தை சடையனாரையும் இணைத்து நாயன்மார் அறுபத்து மூவர் என்றார்

பெரியபுராணம் குறிப்பிடும் அறுபத்து மூன்று நாயன்மருள் மாணிக்கவாசகசுவாமிகள் வரலாறு இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது சைவநாயன்மாருள் ஒருவராக மாணிக்கவாசகர் விளங்கிய போதும் ஏதோ ஒரு காரணம் கருதி சேக்கிழார் மாணிக்கவாசகரின் வரலாற்றைபெரியபுராணத்தில் குறிப்பிடவில்லை. மணிவாசகரின் அன்பு நெறியும் ஞான நிலையும் அனைத்து நாயன்மாரில் இருந்தும் வேறுபட்டது எனவே அவரது வரலாற்றினை தனியொரு “திருவாதவூரடிகள் புராணமாக” கடவுள் மாமுனிவர் (கி.பி.17ம் நூற்றாண்டில்) எமக்களித்தார்.

அன்புநெறியைதமது இலட்சியமாக கொண்டு வாழ்ந்த சிவசிந்தை மறவாத சிவநேயச் செல்வர்களான நாயன்மார்கள் தம் வாழ்க்கை முறையினால் சைவத்தை மேலோங்கச்செய்த செம்மல்களாவர். இத்தகைய வாழ்க்கை நெறி இன்றும் வேண்டத் தக்கதே இவ்வகையில் பெரியபுராணம் குறிப்பிடும் செம்மல்கள் அறுபத்து மூவரும் யாரென அறிந்து கொள்ளல் சைவராகிய எமது கடப்பாடாகும்.

## நாயன்மார்

| எண் | பெயர் | குலம் | பூசைநாள் |
|---|---|---|---|
| 1 | அதிபத்தர் | பரதவர் | ஆவணிஆயில்யம் |
| 2 | அப்பூதியடிகள் | அந்தணர் | தைசதயம் |
| 3 | அமர்நீதிநாயனார் | வணிகர் | ஆனிபூரம் |
| 4 | அரிவட்டாயர் | வேளாளர் | தைதிருவாதிரை |
| 5 | ஆனாயநாயனார் | இடையர் | கார்த்திகை ஹஸ்தம் |
| 6 | இசைஞானியார் | ஆதிசைவர் | சித்திரைசித்திரை |
| 7 | இடங்கழிநாயனார் | வேளிர் | ஐப்பசிகார்த்திகை |
| 8 | இயற்பகைநாயனார் | வணிகர் | மார்கழிஉத்திரம் |
| 9 | இளையான்குடிமாறர் | வேளாளர் | ஆவணிமகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 10 | உருத்திரபசுபதிநாயனார் | அந்தணர் | புரட்டாதிஅசுவினி |
| 11 | எறிபத்தநாயனார் | மரபறியார் | மாசி ஹஸ்தம் |
| 12 | ஏயர்கோன் கலிகமார் | வேளாளர் | ஆனிரேவதி |
| 13 | ஏனாதிநாதர் | சான்றார் | புரட்டாதி உத்திராடம் |
| 14 | ஐயடிகள் காடவார்கோன் | காடவர், பல்லவர் | ஐப்பசி மூலம் |
| 15 | கணநாதர் | அந்தணர் | பங்குனிதிருவாதிரை |
| 16 | கணம்புல்லர் | செங்குந்தர் | கார்த்திகை |
| 17 | கண்ணப்பர் | வேட்டுவர் | தைமிருகசீருஷம் |
| 18 | கலியநாயனார் | செக்கார் | ஆடி கேட்டை |
| 19 | கழறிற்றறிவார் | சேரர்-அரசன் | ஆடி சுவாதி |
| 20 | கழற்சிங்கர் | பல்லவர்-அரசன் | வைகாசிபரணி |
| 21 | காரிநாயனார் | அந்தணர் | மாசிபூராடம் |
| 22 | காரைக்கால் அம்மையார் | வணிகர் | பங்குனிசுவாதி |
| 23 | குங்கிலியகலையனார் | அந்தணர் | ஆவணி மூலம் |
| 24 | குலச்சிறையார் | மரபறியார் | ஆவணிஅனுஷம் |
| 25 | கூற்றுவர் | களப்பாளர் | ஆடி திருவாதிரை |
| 26 | கலிக்கம்பநாயனார் | வணிகர் | தைரேவதி |
| 27 | கோச்செங்கட் சோழன் | சோழர்-அரசன் | மாசிசதயம் |
| 28 | கோட்புலிநாயனார் | வேளாளர் | ஆடி கேட்டை |
| 29 | சடையநாயனார் | ஆதிசைவர் | மார்கழிதிருவாதிரை |
| 30 | சண்டேசுவரநாயனார் | அந்தணர் | தைஉத்திரம் |
| 31 | சக்திநாயனார் | வேளாளர் | ஐப்பசிபூரம் |
| 32 | சாக்கியார் | வேளாளர் | மார்கழிபூராடம் |
| 33 | சிறப்புலிநாயனார் | அந்தணர் | காரத்திகைபூராடம் |
| 34 | சிறுத்தொண்டர் | மாமாத்திரர் | சித்திரைபரணி |
| 35 | சுந்தரமூர்த்திநாயனார் | ஆதிசைவர் | ஆடிச் சுவாதி |
| 36 | செருத்துணைநாயனார் | வேளாளர் | ஆவணிபூசம் |
| 37 | சோமசிமாறர் | அந்தணர் | வைகாசிஆயிலியம் |
| 38 | தண்டியடிகள் | செங்குந்தர் | பங்குனிசதயம் |
| 39 | திருக்குறிப்புத்தொண்டர் | வண்ணார் | சித்திரைசுவாதி |
| 40 | திருஞானசம்பந்தமூர்த்தி | அந்தணர் | வைகாசி மூலம் |
| 41 | திருநாவுக்கரசர் | வேளாளர் | சித்திரைசதயம் |
| 42 | திருநாளைபோவார் | புலையர் | புரட்டாதிரோகிணி |
| 43 | திருநீலகண்டர் | குயவர் | தைவிசாகம் |
| 44 | திருநீலகண்டயாழ்ப்பாணர் | பாணர் | வைகாசி மூலம் |
| 45 | திருநீலநக்கநாயனார் | அந்தணர் | வைகாசி மூலம் |
| 46 | திருமூலர் | இடையர் | ஐப்பசிஅசுவினி |
| 47 | நமிநந்திஅடிகள் | அந்தணர் | வைகாசிபூசம் |
| 48 | நரசிங்கமுனையர் | முத்தரையர் | புரட்டாசிசதயம் |
| 49 | நின்றசீர்நெடுமாறன் | பாண்டியர் அரசர் | ஐப்பசிபரணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 50 | நேசநாயனார் | சாலியர் | பங்குனிரோகிணி |
| 51 | புகழ்சோழன் | முத்தரையர் | ஆடி கார்த்திகை |
| 52 | புகழ்த்துணைநாயனார் | ஆதிசைவர் | ஆனிஆயிலியம் |
| 53 | பூசலார் | அந்தணர் | ஐப்பசிஅனுசம் |
| 54 | பெருமிழலைக்குறும்பர் | குறும்பர் | ஆடி சித்திரை |
| 55 | மங்கையர்க்கரசியார் | பாண்டியர் அரசர் | சித்திரைரோகிணி |
| 56 | மானக்கஞ்சாறநாயனார் | வேளாளர் | மார்கழிசுவாதி |
| 57 | முருகநாயனார் | அந்தணர் | வைகாசி மூலம் |
| 58 | முனையடுவார்நாயனார் | வேளாளர் | பங்குனிபூசம் |
| 59 | மூர்க்கநாயனார் | வேளாளர் | கார்த்திகை மூலம் |
| 60 | மூர்த்திநாயனார் | வணிகர் | ஆடி கார்த்திகை |
| 61 | மெய்ப்பொருள் நாயனார் | வேளாளர் | கார்த்திகைஉத்திரம் |
| 62 | வாயிலார் நாயனார் | வேளாளர் | மார்கழிரேவதி |
| 63 | விறன்மிண்டநாயனார் | வேளாளர் | சித்திரை திருவாதிரை |

**உசாத்துணை**


*1. நாயன்மார் : முனைவர் கி.கந்தன்*
*துறைத்தலைவர், சிற்பத்துறை*
*2. கிருபானந்தவாரியார் எழுதிய "செஞ்சொல் உரைக்கோவை"*
*பக்கம் 141, 142 முதற்பதிப்பு - 1998*



**தொகுப்பு**
**திருமதி. சிவாஜினி ஜெயராஜிதன்**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் ம.வி**


**சிந்தனைக்கு சில**

*இந்த உலகம் நன்மை செய்யும்*
*போது உன்னைக் கவனிக்காது!*
*தீமை செய்யும் போது*
*உன்னை விமர்சிக்காமல்*
*இருக்காது!*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KN /Ramanathapuram Maha Vidyalayam
# Advance Level Get Together - 2018



GOBAL PHOTO - 0773527735

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The importance of library

Libraries are very important for the progress and development of a society. They are storehouse of knowledge. Libraries help to develop reading habits. They mould the character. They help in personality development.

Libraries are significant for a civil society. They contain books on various subject ranging from history, science, fiction, literature, fashion, health and beauty. Books contains good thought. They ensure accessibility to vast ocean of knowledge to common man. There are people in every society who have craving for reading but have no money to satisfy their urge. Libraries are blessing for such people. The concept of the emergence of free libraries goes back to the knowledge craving of such people. In west such libraries are provided by the philanthropist people.

Libraries contain books on various subject. Some books are cheap but many books are costly. An ordinary man finds it difficult to purchase such books. Libraries help them. They offer them a variety of books under one roof at a nominal payment or price. In libraries, books are arranged subject – wise in shelf. A certain number is given to each books and the number and the titles are written in a register. This helps in their easy location. One can easily get the book of one's choice. There is arrangement of seats in libraries. Some people study in library and many people. Books are issued for a certain period of time. Fine is charged when books are not returned on time.

There are journals, newspapers and magazines in libraries offer a wide variety or choice. People who cannot subscribe magazines and newspaper can go to library and satisfy their urge for reading. Libraries are great value to the aspirants of competitive examination. Since they require reading many books, journals and magazines, but cannot afford them, libraries offer all these things at one place at minimum cost. In addition, in libraries they come in contact with many aspirants and can have discussion with them. It enriches their knowledge and understanding of subject.

There are libraries in every school, college and professional institution. Students can go to library during their leisure time. Libraries cultivate reading habits. Besides there are public libraries cultivate reading habits. Besides there are public libraries in every city, town and even in village. They serve as meeting place for people of different tastes, choices and background. A part



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

from reading, they have discussion on several socio – economic and political issues. They have good time in libraries. Libraries remove boredom and monotony.

Some people are very fond of books. They have an urge for reading. They preserve books on subject of their choice. They preserve books on subject of their choice. They make their own libraries. They spend their leisure are of high intellectual caliber. Such an environment at home has lasting impression on the mind of the generation to come. Libraries contribute to the growth of culture and in the formation of civil society. They help in broadening the outlook of people. They encourage reading habits. Reading is a sign of culture. It is good for society.

**S.Thanavan**
**Commerce (2021)**

## Before You Speak
## Think

| | |
|---|---|
| T - is it | - True |
| H - is it | - Helpful |
| I - is it | - Inspiring |
| N - is it | - Necessary |
| K - is it | - Kind |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருகிய காவோலை

அந்தோ பரிதாபம்
தவமாய்த் தவமிருந்த
கருவாக்கி உருவாக்கி
முத்தாய் பெற்றமகனால் - தாயும்
பித்தாகிப் போனசெய்தி கேளுமய்யா

கருவில் சுமந்தவளை
தெருவில் விட்டதால்
விதியின் சதியால் வீதியோரம் நாதியற்று
கிடக்கிறது ஓர் உடல்

பெத்த மகனை ஊரார்
மெச்சிப் புகழ்கையிலே
உச்சி குளிர்ந்த தாயிவளை
பிச்சை எடுக்க வைத்து
கொச்சைப் படுத்தி விட்டான்.

புண்ணில் வேலைபாய்ச்சி
எண்ணில்லாத வேதனையளித்து
இறையின் கோர பார்வையினை
அறியாப் பேடியாம் அவனும்
ஓடிப்போய் விட்டான்.

சொந்தமிழந்து
சோகத்தை சுமந்து
ஒடிந்து போன உள்ளத்தால்
இடிந்து போய் இருக்கிறாள்
தனிமைத் துயரிலே
துவண்டு போய்க் கிடக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தாய் ஈன்ற
அன்னையின் சொத்தை
இவனும் அனுபவிக்க
இத்தாய் மண்ணில்
மடிந்திடுவாள்
பூமித்தாய் இவளை
ஏந்திடுவாள்

காலங்கள் கரைந்திடவே
நீயும்- காவோலையாகிடுவாய்
கருகிடக் காத்திரு
கணங்களை கணக்கிடு.

**செல்வி.செ.தினுசா**
**கலைப்பிரிவு [2021]**

## சிந்தனைக்கு சில

ஒவ்வொரு சோகமும்
துன்பமும் வாழ்க்கையில்
பாடத்தைக் கற்றுத்தரவே
வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள் சொல்லும் வாழக்கைத் தத்துவம்

வள்ளுவன் புகழ் பாட வல்லவன் நான் அல்லேன், தெள்ளு தமிழ்ப் பாவினத்தின் திறனறியேன், வல்லதோர் தமிழறிஞர் வாழ்த்துகின்ற வள்ளுவனை வாழ்த்துவதற்கு வகை கிடைத்ததென் தவமே. உலகம் போற்றும் உத்தம நூலாம் அய்யன் வள்ளுவனின் திருக்குறள் மனிதனின் மாண்பு மிக்க வாழ்வுக்கு தலை சிறந்த வழிகாட்டியாகும். நிறைவான அறிவுக் களஞ்சியம் திருக்குறள். தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் கிடைத்த அரிய கருவூலமாகும். வாழ்க்கைக்கு வேண்டிய இன்றியமையாத கருத்துக்கள் அனைத்தையும் வள்ளுவனைப் போல் உணர்த்தியவர்கள் உலகில் யாருமில்லை எனலாம்.

திருக்குறள் ஒவ்வொரு தமிழ் மக்கள் இல்லங்களிலும் அவசியம் இருக்க வேண்டிய அறிவுக் களஞ்சியமாகும். அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் குழந்தைகளும் திருக்குறளைக் கற்க வேண்டும். திருக்குறளை தெளிவாகவும் முழுமையாகவும் தேறக் கற்று விட்டால் நல்ல தமிழறிவையும் வாழ்க்கைக்கு வேண்டிய உயர்ந்த வழிகாட்டிகளையும் பல்வேறு பட்ட ஞானங்களையும் பெறலாம். திருக்குறள் சிந்தனைக்கினியது, செவிக்கினியது, இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற மருந்து. திருக்குறள் கூறுகின்ற அறிவுரைகளை நாம் பின் பற்றினால் எமது அறிவை வளப் படுத்துவதோடு ஒழுக்கத்தையும் வாழ்வின் நலன்களையும் உயர்த்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இத்தகைய திருக்குறளானது மனிதனுடைய வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. சாதாரணமாக இன்று பேச்சு வழக்கிலுள்ள ஒரு பதம் *நன்றாக இருக்கிறான்* இந்த சொல்லுக்கு பணக்காரன் என்றே பொருளைக் கொள்கின்றனர் எம்மவர் இதில் வேடிக்கை என்னவென்றால் அவன் பொருளீட்டும் முறை என்ன என்பதை புறந் தள்ளி விட்டு எப்படியாவது பொருள் சேர்த்துவிட்டால் போதும் என்ற மனப்பாங்கே மேலோங்கி நிற்கும். அதை தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுத்து உதவாமல் இறுதியில் எவருக்கும் பயன்படாமல் வீணே அழிந்துபோகும் எத்தனையோ நல்லவர்கள் வறுமையில் வாடுகிறார்கள் அவர்களுக்காவது கொடுத்து உதவினால் என்ன? வள்ளுவப் பெருந்தகையின் கருத்தினைப் பார்ப்போம்.

**'புத்தேமுலகத்தும் ஈண்டும் பெறலரிதே**

**ஒப்புரவின் நல்லபிற'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கும் உதவி செய்து வாழும் பெருந்தன்மையைப் போலொரு செயலை தேவருலகத்திலும் காண்பதரிது. மனிதனின் வாழக்கையிலே இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் இதிலே மனிதனின் இயல்பைப் பாருங்கள் இன்பம் வரும் போதெல்லாம் துள்ளிக் குதிக்கின்றான் ஆனால் துன்பத்தை கண்டதும் துவண்டு போய் விடுகின்றான் எடுத்ததுக்கெல்லாம் மனம் வருந்துபவர்கள் வாழ்க்கையில் நெடுந் தூரம் மகிழ்ச்சியோடு செல்ல முடியாது என்பதைக் கூற வந்த வள்ளுவப் பெருந்தகை

*'இன்பம் விழையான் இடும்பை இயல்பொன்பான்*
*துன்பம் உறுதல் இலன்'*

இன்பமே வாழ்க்கை என்று விரும்பாதவனாக துன்பமும் இயல்பே என்று சகித்து வாழப் பழகிக் கொள்பவன் துன்பம் அடைவது என்பது ஒரு போதுமில்லை என்பதாம்

மாணிடனின் வாழ்விலே செய்யும் பஞ்சமாபாதங்களில் களவும் ஒன்றாகும். இப்போது களவு என்ற பதம் ஒதுங்கி விட்ட காலம் போய் களவு தொழிலாக மாறிக் கொண்டு வருகிறது என்றால் அது மிகையன்று. டாம்பீகம் என்று ஒரு சொல் இருந்தால் அதற்கு அளவு கடந்த செலவு என்றொரு பொருளிருக்கும் அளவு கடந்த ஒன்றைச் செய்யும் போது அமுதமே நஞ்சாகும் என்பார்கள். ஒருவனைப் பார்த்து நல்ல செலவாளி என்று சொன்னால் அவனை ஊதாரி என்று சொல்வது போலிருக்கும் உழைத்த பணத்தை ஒருவன் ஊதாரித் தனமாக செலவு செய்யமாட்டான் என்பதனைக் கூற வந்த வள்ளுவப் பெருந்தகை பின்வருமாறு விளக்கம் கொடுக்கின்றார்.

*அளவின் கண் நின்றொழுகல் ஆற்றார் களவின் கண்*
*கன்றிய காதலவர்*

களவு செய்வதிலேயே கண்ணாக இருப்பவர்கள் ஒரு போதும் அளவு போற்றி வரும் நெறியிலே நின்று வாழ மாட்டார்கள் என்பதாம்.

மனிதனுக்குள்ள பெரிதான பிரச்சனை என்னவென்றால் மறதி. இந்த மறதி பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

*பொய்ச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அகவுலகத்து*
*எப்பால் நூலோர்க்கும் துணிவு.*

இந்த மறதி என்பது ஒருவனுக்கு இருந்தால் தொழில் இல்லை, கல்வி இல்லை, புகழ் செல்வம் இல்லை எதுவுமே சேராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனைய பெருமைகள் எல்லாம் கூறும் சிறப்புக்குரிய திருக்குறளை கையில் எடுத்துக் கொண்டு புலவர் வள்ளுவர் அரிய நூலொன்றைப் படைத்து பெரும் புகழைத் தந்துள்ளார். தான் கூற வந்த கருத்துக்களை எல்லாம் காலத்தோடு ஒட்டிய விளக்கம் தந்துள்ளமையையும் நாம் காண்கின்றோம் மாணவர் முதல் பெரியோர் வரை கற்றுச் சிறக்கவும் குறளின் பொருளை அறிபவர் தம் வாழ்வை மேம்படுத்தவும் இந்நூல் நின்று பயன் செய்யும் என்பதிலே எவ்வித ஐயமுமில்லை.

நா.யனனி
ஆசிரியர்
கிளி/ இராமநாதபுரம் ம.வி

**சிந்தனைக்கு சில**

*மானமுள்ள ஆயிரம் பேருடன்*
*போராடலாம்*
*மானமற்ற ஒருவனுடன்*
*போராடுவது*
*சிரமமான காரியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யூதப் பண்பாட்டு மரபுகளில் யூத விழாக்கள்

ஆபிரகாமின் வழி மரபிலிருந்து மந்தை மேய்ப்பவர்களாக விளங்கியவர்கள் காலப்போக்கில் விவசாயத்திலும் பல்வேறுபட்ட தொழில்முயற்சிகளிலும் ஈடுபட்டு முன்னேற்றம் கண்டனர். இவர்கள் செமித்திய இன மொழியான எபிரேய மொழியைப் பேசியதால் எபிரேயர் எனவும் யூதர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். எபிரேயர் என்பதற்கு ஆற்றைக்கடந்தவர்கள் என்றும் ஒரு பொருள் உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இவர்களது பண்பாட்டு மரபுகளை ஆராயும்போது பல சிறப்பம்சங்களைக் காணக்கூடியதாக உள்ளது.

இஸ்ராயேலரின் சமய வழிபாட்டில் செபம் சிறப்பான இடத்தை பெறுகின்றன. பலியிடுவதையம் அவர்கள் செபமாகவே கருதினர். ஆண்டவருடன் உரையாடவேண்டிய நேரத்தில் உன்நகரிலுள்ள செபக்கூடம் சென்று செபம்செய். முடியவில்லை என்றால் படுக்கையில் இருந்தாவது உன் இதயத்தை திறந்து இறைவனுக்கு காட்டு என்று குருக்கள் போதித்தனர்.

இஸ்ரேலியரின் சமய வழிபாடுகளில் திருவிழாக்கள் முக்கிய இடத்தை பெறுகின்றன. அவர்கள் பல திருவிழாக்களை கொண்டாடி மகிழ்ந்தனர். இத்தகைய திருவிழாக்களை கொண்டாடுவதன் மூலம் இறைவனுக்கும் தமக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்திக் கொண்டனர். இத்திருவிழாக்களை ஒட்டியே திருப்பயணங்களும் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக விழாக்காலங்களில் எருசலேம் நகரை தூய்மைப்படுத்தி அழகுற அலங்கரிப்பர் பல்வேறு பகுதிகளிலுமிருந்து இவ்விழாவிற்கு வருகை தரும் பயணிகள், பயணக்களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக திருப்பாடல்களைப்பாடியும், இசைக்கருவிகளை மீட்டியும் இறைவனைப் புகழ்ந்து கொண்டு எருசலேமை நோக்கி வருவர்.

இத்தகைய விழாக்களில் முக்கியமாக யூதர்கள் கொண்டாடிய விழாக்கள் வருமாறு பாஸ்காத்திருவிழா, கூடாரத்திருவிழா, புளியாத அப்பத்திருவிழா, பெந்தக்கோஸ்தே திருவிழா, பாவப்பரிகாரத்திருவிழா, ஆலயஅர்ப்பணத்திருவிழா என்பனவாகும்.

யூதர்களின் திருவிழாக்களில் பாஸ்காத் திருவிழாவே முதன்மையும் முக்கியத்துவமும் பெற்றதாக அமைந்தது. இவ்விழாவானது யூதர்கள் 450 வருட எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வெளியேறிய நிகழ்வை நினைவு கூரும் நாளாகவும் தமக்கும் தமது வழி மரபினருக்கும் இறைவனின் பராமரிப்பை உணர்த்தக்கூடிய நாளாகவும் கொண்டாடி வந்தனர். இவ்விழாகடத்தல்விழா, புளியாத அப்பவிழா என்றும் அழைக்கப்பட்டது. இது எருசலேம் நகர எல்லைக்குள் கொண்டாடப்பட வேண்டும் என்ற நியதி உண்டு. இவ்விழாவானது யூதர்களின் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமான நிஸான் மாதத்தின் 14ம் நாளில் (பங்குனி, சித்திரை) பாஸ்கா உணவு உண்ணும் நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

அடுத்ததாக 2ம் நிலையில் சிறப்பு பெறுவது பெந்தஸ்கோஸ்தே திருவிழாவாகும். விடுதலைப்பயணத்தின் பின் சீனாய் உடன்படிக்கையின் நினைவாகவும் இவ்விழா நினைவுகூரப்படுவதுடன் பாஸ்கா விழாவின் பின் ஏழுவாரங்கள் கழிந்து மறுநாள் (50ம்நாள்) இது கொண்டாடப்படுகிறது. இது வாரங்களின் விழா,50ம்நாள் விழா, முதற்கனி விழா எனவும் அழைக்கப்படும். இன்று கிறிஸ்தவர்கள் இதனை தூயஆவியின் திருவிழாவாகவும் திருச்சபையின் பிறப்பு விழாவாகவும் கொண்டாடுகின்றனர்.

யூதர்களின் திருவிழாக்களில் மிகவும் பழமையான விழாவாக கொண்டாடப்படுவது கூடாரத் திருவிழாவாகும். ஆரம்பத்தில் தமது மந்தைகளை மேய்ச்சல் நிலங்களை நோக்கி நடாத்திச்சென்று அங்கு கூடாரம் அமைத்து தங்கி இருந்ததை நினைவு கூர்ந்தும் பின்னர் தமது வயல்நிலங்களில் அறுவடைக்காக கூடாரம் அமைத்து தங்கி இருந்ததை நினைவு கூர்ந்தும் இவ்விழா கொண்டாடப்பட்டது. விடுதலைப்பயணத்தின்பின் சீன் பாலைநிலத்தில் கூடாரம் அமைத்து தங்கி இருந்தமையும் சீனாய் உடன்படிக்கையின் நினைவாகவும்இதனை யாவேயின் விழா என்றும் சிறப்பித்து திஸ்ரி (புரட்டாதி ஐப்பசி) மாதம் 15ம் நாளின் பின் எட்டு நாட்கள் தொடர்ச்சியாக கொண்டாடப்படும். இவ்விழாவானது செழிப்பான ஒலிலக்கிளைகளையும் பேரீச்சை குருத்துக்களையும் ஏந்தியவண்ணம் ஆலயத்தை ஏழுமுறை சுற்றிவந்து கூடாரங்களில் தங்கியிருப்பது சிறப்பாகும்.

யூதர்கள் பாஸ்காத் திருவிழாவின் பின்னர் வரும் ஏழு நாட்களின் முடிவில் புளியாத அப்பத்திருவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை தமது விளைநிலங்களில் முதல் ஏழுநாட்களில் அறுவடை செய்த கோதுமை, வாற்கோதுமை மணிகளை அரைத்து மாவெடுத்து புளிக்க வைக்காமல் உரொட்டி செய்து அதனை காணிக்கையாக்கி பலியாக்குவதுடன் தாமும் உண்பர். பாஸ்கா விழாவும் புளியாத அப்பத் திருவிழாவும் நிசான் மாதத்திலேயே கொண்டாடப்பட்டதால் இவை இரண்டும் பின்னர் ஒருமித்து கொண்டாடப்பட்டன.

யூதர்களின் ஏழாம் மாதமான திஸ்ரி (புரட்டாதி - ஐப்பசி) மாதத்தின் பத்தாம் நாளில் அனுசரிக்கப்பட்ட விழாவே பாவக்கழுவாய்ப்பலி விழாவாகும். இது குருக்களும், மக்களும் ஒய்வுநாள் அனுசரிப்பு முறைகளை அனுசரித்து தமது பாவங்களுக்கு பரிகாரப்பலிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது நியதியாகும். அதற்காக வருடத்தில் ஒருமுறை நடைபெறும் இவ்விழாவின்போது மட்டுமே தலைமைக்குரு ஆலயத்தின் அதிதூயகத்திற்குள் சென்று அங்குள்ள கல்மேடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இரக்கத்தின் அரியணை) இரத்தம் பூசி பரிகாரப்பலி நிறைவேற்றுவார். மீதி இரத்தம் மக்கள் மீது செலுத்தப்படும். (லேவி 16: 1-37) மக்களின் பாவங்களுக்கு பலிப்பொருளாக ஆடு ஒன்று பாலைவனத்திற்கு விரட்டி விடப்படும்.

அடுத்ததாக ஆலய அர்ப்பண விழா. இது கி.மு 175ல் அந்தியோக்கு எபிப்பானஸ் என்னும் கிரேக்க மன்னன் எருசலேம் ஆலயத்தையும் பலிப்பீடத்தையும் தீட்டுப்படுத்தியதால் எருசலேம் ஆலயத்தின் தூய்மை இழந்ததாக கருதப்பட்டது. இதனைத் தூய்மைப்படுத்த யூதாமக்கபேயு மேற்கொண்ட முயற்சி கி.மு 164ல் முழுமை பெற்று கிஸ்லு (டிசெம்பர் 25) மாதத்தில் மீண்டும் ஆலயம் அர்ப்பணம் செய்யப்பட்டு பலிகளும் விழாக்களும் நிறைவேற்றப்பட்டன. தொடர்ச்சியாக எட்டுநாட்கள் வரை இவ்விழா சிறப்பாக ஆடல்பாடல்களுடன் ஒவ்வொரு நாளுக்கும் ஒன்று என்ற வீதத்தில் ஏழுவிளக்குகள் ஏழு நாட்களில் ஏற்றிவைக்கப்பட்டு ஏழாம்நாளில் கொண்டாடப்படும்.

எனவே யூதர்களில் தலைசிறந்த விழாக்களில் மேற்கூறப்பட்ட விழாக்கள் ஆறும் முக்கிய இடத்தை பிடித்தன என்று கூறினால் மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**

1. கிறிஸ்தவ நாகரீகம் - ஆசிரியர் வழிகாட்டி, தரம் -12, சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம 2017

2. யேசுதாசன் .பி.(2010) புளிப்புமாவு திருமலை அமலஉதயம், உப்புவெளி

**யூலியன் வேஜின் மேரி**
**ஆசிரியை**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமேசன் மழைக்காடு

அமேசான் மழைக்காடு என்பது தென் அமெரிக்காவின் அமேசான் ஆற்றுப் படுக்கையில் அமைந்துள்ள ஒரு பெரிய மழைக்காடு ஆகும். அமேசானியா அல்லது அமேசான் படுக்கை என்றழைக்கப்படும் இதன் பரப்பளவு ஏழு மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் ஆகும். இதில் காடு மட்டும் 5.5 மில்லியன் ச.கி.மீ ஆகும். மேலும் இது ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது. அந்நாடுகள் பிரேசில் ஏறத்தாழ 60 சதவீத மழைக்காட்டினை உள்ளடக்கியது. கொலம்பியா, பெரு, வெனிசுலா, ஈக்வெடோர், கயானா, பொலிவியா, சுரிநாம், பிரெஞ்சு, கயானா ஆகியனவாகும். இவற்றில் நான்கு நாடுகளில் உள்ள அமேசானாஸ் என்ற மாநிலங்கள் இக்காட்டின் காரணமாகவே ஏற்பட்டது.

இவற்றில் 60 சதவீத மழைக்காட்டினை உள்ளடக்கிய பிரேசில் பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் உலகின் ஐந்தாவது பெரிய நாடாக இருந்தாலும் வளமையான நீர் ஆதாரங்களையும், செழுமையான பல்லுயிர் பெருக்கத்தை கொண்ட நாடுகளில் முதலாவதாக திகழ்கிறது.

மழைக்காடுகளை இயற்கையின் கொடையாக பெற்றுள்ள பிரேசில் உலகில் உள்ள மழைக்காடுகளில் மூன்றில் ஒரு பகுதியை தன்னகத்தே கொண்டது. பல்வேறு வகையான வெவ்வேறு உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை பிரேசிலில் நிலவுகிறது.

பூமியில் வசிக்கும் உயிரினங்களில் 30 சதவிகிதம் அமேசான் மழைக்காடுகளில் வசிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வெவ்வேறு விதமான 40 ஆயிரம் தாவர இனங்கள் 430 வகை பாலூட்டிகள், இரண்டரை மில்லியனுக்கும் அதிகமான பூச்சி வகைகளை உள்ளடக்கிய அமேசான் மழைக்காடுகளில் ஆண்டுதோறும் புதிய வகை உயிரினங்கள் கண்டறியப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு உலகின் மிகப்பெரிய மழைக்காடுகளை கொண்ட பிரேசிலில் காணப்படுகிறது. இந்த தனித்துவமான வாழ்விடத்தில் அனைத்துவிதமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை ஒன்றிணைக்கின்ற ஒற்றை விஷயம் இங்கு பெய்யும் மழையே.

பூமியின் கீழ்ப்பகுதியில் இருப்பதால் அமேசான் பகுதியில் அதீத மழைப்பொழிவு காணப்படுகிறது. பூ மத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் காடுகளில் இருந்து வெப்பம், அட்லாண்டிக் பெருங்கடலில் இருக்கும் ஈரப்பதத்தை ஆவியாக்குகிறது.

பிறகு அது கிழக்கு வணிகக்காற்றால் கொண்டு செல்லப்படுகிறது. ஆவியாகும் நீர் மேலே சென்று, சுருங்கி நிலையான மழை மேகங்களாக உருமாறுகிறது. மழை மேகங்கள் கனமழையை பொழிகின்றன. இது மீண்டும் மீண்டும் சுழற்சி முறையில் தொடர்வதால் அமேசானில் மழைவளம் அதிகமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்காடுகளின் வழியாக சுமார் 400 மைல்கள் பயணித்து கடலில் கலக்கும் அமேசான் ஆறு உலகின் இரண்டாவது நீளமான நதியாகும். கொண்டு வரும் நீரின் அளவின் அடிப்படையில் பார்த்தால் அமேசானே உலகின் மிகப்பெரிய ஆறாகும். இளஞ்சிவப்பு டால்பின்கள், போடோ, சிவப்பு வண்ண பிரானாக்கள் போன்ற தனிப்பட்ட இனங்கள் அமேசானில் வாழ்கின்றன. இந்தப் பகுதியின் நீர் சுழற்சியில் அமேசான் நதி முக்கிய பங்காற்றுகிறது. வனத்தில் இருக்கும் அளவுக்கு அதிகமான நீரை காட்டில் இருந்து கடலுக்கு கொண்டு செல்கிறது அமேசான்.

அமேசான் படுகையின் தெற்கில் இருந்து பயணித்தால் உலகின் மிகப்பெரிய நன்னீர் ஈரநில அமைப்புக்களில் ஒன்றான வாஸ்ட் பந்த்தானல் (vast Pantanal)ஐ பார்க்கலாம். பராகுவே நதி மற்றும் அதன் துணையாறுகளால் உருவாக்கப்பட்டிருக்கும் சதுப்பு நிலங்கள் மற்றும் ஏரிகளால் பிலானாட்லோ (Planalto) மலைப்பகுதிகள் பிரித்துள்ளன.

இந்த சமவெளி பிரதேசத்தில் நிலவும் தட்பவெப்பநிலை, வழக்கமான வெள்ளம் மற்றும் வறட்சி அமைப்பானது. ஹெலிகாப்டர் டேம்செல்ஃபீஸ் போன்ற பூச்சியினங்கள், நதி நீர்நாய்கள் ஜாகுவார்கள், செந்நீல ஐவண்ணக்கிளி போன்ற அற்புதமான தனித்துவமான உயிரினங்களுக்கு வாழ்விடமாக இருக்கிறது. மேலும் தெற்காக பயணித்தால் அர்ஜென்டினா எல்லைப்பகுதியில் அமைந்திருக்கும் ஆனந்த அதிர்ச்சியூட்டும் இகுவாசு நீர்வீழ்ச்சியை காணலாம்.

குதிரை வடிவத்தில் அமைந்துள்ள இகுவாசு நீர்வீழ்ச்சி, 275 தனிப்பட்ட அருவிகளை உள்ளடக்கியது. பெரிய ஆண்டீடெர்ஸ், தும்பிக்கை பன்றி அல்லது தும்பிப்பன்றி, ஹாவ்லர் இன பபூன் குரங்குகள் போன்ற விலங்குகளும், இந்த நீர்வீழ்ச்சியில் இருந்து தெறிக்கும் நீரால் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளும் இந்த துணை வெப்பமண்டல மழைக்காடுகளில் வாழ்கின்றன.

**திருமதி.நி.பிரசாந்தன்**
**ஆசிரியர்**
**கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# What We Must Teach Our Children

Teachers are entrusted with the great responsibility of producing good citizens in our society. Ours is not a job but a great service. Parents expect schools to inculcate high moral standards and teach their children to listen, speak, read, write and think. It is also expected from us to mould our students to prepare them for life.

How can this aim be met? What should be taught? How should we teach? These are some questions that need to be properly addressed by any good teacher.

There is a profound need for the development of character in our young. Just how can we foster such moral standards? Sri Lankans follow four of the world's greatest religions. There are good reasons why religious values and ideals should be taught to our Children. Religious stories could be made use of to teach loyalty, forgiveness, courage and moral values. These stories give children find these stories to be interesting and therefore "teaching" religious principles becomes easy.

Apart from religions there is a wealth of knowledge in literature and history that can be taken advantage of to improve the personality of a child. The story of how President Abraham Lincoin walked three miles to return six cents can be narrated to inspire a sense of honesty in our children. If we want our children to know what being faithful means, we can teach them Odysseus where an old dog waited for 20 years for Odysseus to return home.

To teach about great, we can relate the story of king Midas. Shakespeare's Macbeth could be read out to enlighten the students of the negative aspects of over ambition. Great expectations is a necessary reading to give our children an insight into real life and village by the sea can be taught to prepare our children to face the challenges of life.

Listening is fundamental for a sound education, children should be disciplined to listen attentively. Teaching a child charismas carols of infuse kindness at the clock for the interval bell to go off.

We as teachers would be failing in our duties if we fall short of inculcating good values and attitudes in our children. It is sad to note that teachers have become captives of the text book driven curriculum. There has to be reforms in the educational system and in the attitudes of the teachers if there is to be a reform in our society.

**Rev.Sr.Chandralenaphilippu**

**Teacher**

**Kn/Ramanathapuram M.V**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவத்தில் காணப்படும் எபிரேய கிரேக்க பதத்திற்கான தமிழ்க்கருத்துக்கள்

- யாக்கோப்பு- இஸ்ராயேல்.
- அம்-'ஹா-அரஸ்- நிலத்தின் மக்கள்.
- ஏல்- கடவுள்
- ஏல் ஏலோகிம் - படைத்தவரானகடவுள் / விண்ணில்உள்ளஇறைவன்..
- ஏல் ஏலியோன்- உன்னதரான இறைவன்.
- ஏல் சடாய்- எல்லாம் வல்ல இறைவன் / மாட்சியில் உள்ளவர்.
- ஏல்பெரித்- உடன்படிக்கையின் இறைவன்.
- சுக்கோத்- கூடாரம் / குடிசை / கொட்டில்.
- யாவேயீரே- இருக்கிறவராக இருக்கின்றவர் / முதலும் முடிவுமற்ற இறைவன்.
- அதோனாய்- என் ஆண்டவர் .
- சினகொக்- தொழுகைக் கூடம் / ஒன்றுகூடுதல்.
- பெருகூஷசிம்- பிரிந்துநிற்பவர் / தனித்துநிற்பவர்.
- தோரா- ஐந்நூல் இணைச்சட்டநூல்.
- எபிரேயர்- ஆற்றைக்கடந்தவர்கள்.
- மசொத்- புளியாத.
- கெற்றுபா- திருமணசம்மதஒப்பந்தம்.
- ஆரால்-திருமணவார்த்தைப்பாடுகள்.
- மோகர்- மணமகன் மணமுடிக்கும் பெண்ணின் தந்தைக்குகொடுக்கும் நன்கொடை.
- கேஷமா- இஸ்ராயலே கர்த்தருக்கு செவிகொடு.
- சபாத்- ஓய்வுநாள்.

**அ.விஜயலூசியா**

**கலைப்பிரிவு (2020)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Important of friends in our life

It is right said; True friendship multiplies the good in life and divides its evil. Strive to have friends, for life without friends is like life on a desert island". Friendship is indeed very important in our lives. True friends are blessings from god. They make our life worth living.

It has been observed that when there are two children of the same age group in a house, they grow and develop faster at various levels as compared to single child in a family. This is because they share similar interests, include in similar activities, play, enjoy and learn from each other. However, unfortunately, in today's time, most families have single child. Most kids are left alone with maid or with their mother who are already loaded with numerous other responsibilities. That they are unable to give enough attention to their kids. This hampers their physical as well as mental growth. While the nuclear family system has become the need of the hour, we can ensure proper growth of the toddlers by helping them build friendship. Parents must take their toddlers to parks where they can fiend kids of the same age. Being around kids of their own age is a delightful experience for them. They play, learn and grow the right way when they are surrounded with friends.

This is also one of the main reasons for the establishment of so many play schools these days. Kids who are sent to play schools prepared to take on the regular schools as compared to those who do not attend play school.

Earlier there was joint family system. People lived with their extended families andre joined every occasion with them. They helped and supported each other with various tasks. Friends were still important and their presence added to the overall mood of every occasion. Besides, there are always numerous things that one cannot share with his /her family member but can easily share with friends. However; the growing nuclear family has made people realize the importance of friends all the more. Not just the young couples and kids, the old men and women also feel the need to have a good friends circle.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Old people these days are left alone as their children move out for professional and personal reasons. Those who have a good friends circle can survive well even after their children get busy with their lives on the other hand those who do not have friends often feel lonely and get into depression or incur other such illnesses.

So, people belonging to the older generation, these days, seriously need some good friends. Many clubs and societies have been formed to help old people bond with each other.

While friends are extremely important for kids in their growing age as well as for the older generation. People from other age groups also need the gift of friendship as much. Friends teach us a lot in life and make us stronger. They are as important as our family.

**Vimalapalan Shayanavi**
**Arts (2021)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர பெறுபேறுகள் – 2018

## கலைப்பிரிவு

| மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|
| கௌரீஸ்வரன் லதுசன் | இந்து நாகரீகம் A<br>வரலாறுC<br>தமிழ்C |
| சோதீஸ்வரன் பிரசாந் | இந்து நாகரீகம்A<br>வரலாறுC<br>தமிழ்S |
| மகேந்திரன் கமலரூபன் | சித்திரம்B<br>வரலாறுC<br>புவியியல்S |
| நந்தகுமார் லக்ஜனா | இந்து சமயம்B<br>புவியியல்C<br>தமிழ்S |
| பாஸ்கரதாஸ் சத்யடயானா | தமிழ்C<br>நாடகம் அரங்கியல்C<br>புவியியல் S |
| நடராசாசஜிதா | புவியியல்C<br>தமிழ்C<br>சங்கீதம்C |
| ஜெயறஞ்சன் அனோசியா | இந்துசமயம்B<br>வரலாறுC<br>தமிழ்S |
| அன்னலிங்கம் ஐக்சியா | கிறிஸ்தவ நாகரீகம் A<br>மனைப் பொருளியல் C<br>தமிழ் S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகப்பிரிவு

| மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|
| யோகலிங்கம் அபிராமி | பொருளியல் A<br>வணிகப்புள்ளி விபரவியல் C<br>கணக்கீடு B |
| யேசுமரியதாஸ் கின்சலா | பொருளியல் A<br>வணிகக்கல்வி B<br>கணக்கீடு C |
| தவராசாமிதுசா | பொருளியல் B<br>வணிகக்கல்வி B<br>வணிகக்கல்வி C |
| குணரத்தினம் டினோஜா | பொருளியல் B<br>வணிகக்கல்வி B<br>கணக்கீடு C |
| பூலோகசிங்கம் தர்சிகா | பொருளியல் C<br>வணிகக்கல்வி B<br>கணக்கீடு S |
| சுஜீந்திரன் சுதர்சனா | பொருனியல் C<br>வணிகக்கல்வி A<br>கணக்கிடு S |
| குமார் அஜந்தினி | பெருளியல் C<br>வணிகக்கல்வி C<br>கணக்கிடு C |
| பிரதீபன் சீர்நிலா | பொருளியல் C<br>வணிகக்கல்வி C<br>கணக்கீடு C |
| இராமச்சந்திரன் டயந்தினி | பொருளியல் S<br>வணிகக்கல்வி B<br>கணக்கிடு S |

### 2018 பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள்

வர்த்தகம்

1. கனகசூரிய் டிசாந்தினி
2. யேசுமரியதாஸ் கின்சலா
3. வன்னியசிங்கம் பிரவிந்தன்
4. செந்தில்நாதன் ரிஷாந்தன்

கலை

1. சிவபாலன் குகறஜனி
2. யோகலிங்கம் அபிராமி
3. சுதர்சன் கிருஷாந்தினி
4. நந்தகுமார் டிலக்ஷனா
5. மகேந்திரன் கமலரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றியுரை

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க இவ் இதழை வெளியிடுவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்

இராமநாதத்தை வெளியிடுவதற்கு முழுமூச்சுடன் உழைத்த மதிப்பிற்குரிய அதிபர் அவர்கட்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம். அவருடன் இணைந்து மலர் மணம் பரப்ப பணி செய்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகள் பற்பல.

மேலும் இராமநாதத்தை மெருகூட்டும் வகையில் காத்திரமான கருத்துக்களுடன் பல்சுவையுடனும் ஆக்கங்களை மனமுவந்து ஆக்கித்தந்த அனைவருக்கும் அன்பு கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். நூலை வாழ்த்தி ஆசி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளை கூறுகின்றோம்.

இவ் இதழை மிளிரச் செய்வதற்கு ஒவ்வொரு ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்களை சேகரித்து ஒழுங்குபடுத்தி சஞ்சிகை வடிவில் கொண்டு வரும் பொறுப்பாசிரியர் மற்றும் மலர்க் குழுவிற்கும் நிதியுதவி வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் புகைப்படப் பிரதிகளை தந்துதவிய கோபால் ஸ்ரூடியோ உரிமையாளருக்கும் இவ் இதழை இழகுற அச்சிட்டுத்தந்த தனு பதிப்பகத்தினருக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் எமது இவ் இதழ் திக்கெட்டும் பிரகாசிக்க பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து ஆக்கமும் ஊக்கமும் தந்த அனைவரும் எமது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.


**உயர்தர மாணவர் மன்ற**
**செயலாளர்**
**செல்வி.அ.விஜேஜூாசியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ஷி
புத்தகசாலை



இராமநாதபுரம்
தொ.பே : 0214914040

கோணேஸ்
உந்துருளி திருத்தகம்





5ம் யூனிற், இராமநாதபுரம்,
தொ.பே : 0773035074

ஸ்ரீராம் பல்பொருள் வாணிபம்




சின்னச்சந்தை, இராமநாதபுரம்
தொ.பே : 0760394100, 0776524627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனு பிறிண்டேர்ஸ் தருமபுரம் தொ.பே: 0776115301

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org